குர்பக்ஷ் சிங்

சுரிந்தர் சிங் கோஹ்லி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

குர்பக்ஷ் சிங்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்காலம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம கி.பி. இரண்டாம் நூற்றாண்டு)
பட உதவி: நேஷனல் மியூசியம் புது தில்லி

இந்திய இலக்கியச் சிற்பிகள்

குர்பக்ஷ் சிங்

ஆங்கில மூலம்
சுரிந்தர் சிங் கோஹ்லி
தமிழாக்கம்
அ. ஆலிஸ்

சாகித்திய அக்காதெமி

Gurbakhsh Singh: Tamil translation by A.Alice of Surindar Singh Kohli's monograph in English, Sahitya Akademi, New Delhi, 1998. Rs.25

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு 1998
ISBN-81-260-0356-1

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புதுதில்லி 110 001.

விற்பனை:
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

109, *ஜே.ஸி. சாலை, பெங்களூர்* 560 002.

'குணா பில்டிங்க்ஸ்', 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, *மும்பை மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,*
தாதர், மும்பை 400 014.

விலை ரூ. 25

அச்சிட்டோர்: வெல்டன் பிரஸ், சென்னை- 21.

உள்ளே...

1.	இலக்கியப் பாரம்பரியம்	7
2.	வாழ்க்கை	19
3.	பஞ்சாபி உரை நடைத்தொண்டு	30
4.	பஞ்சாபி புனைகதைத் தொண்டு	51
5.	பாஞ்சாபி நாடகத் தொண்டு	66
6.	இதழாளராக	78
7.	பல்வேறு படைப்புகள்	91
8.	வாழ்க்கை தத்துவமும் அன்புத் தத்துவமும்	95
9.	பஞ்சாபி எழுத்தாளர்களின் மீது ஏற்படுத்திய தாக்கம்	109
	துணைநூற்பட்டியல்	113

1. இலக்கியப் பாரம்பரியம்

குர்பக்ஷ் சிங்கின் வாழ்க்கைக் காலம் இந்தியா சுதந்திர மடைந்ததற்கு முன்பும் அதற்குப் பின்பு சிலகாலமும் கொண்ட பகுதி. 1935ஆம் ஆண்டில் வெள்ளையர்களால் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் அறிமுகப் படுத்தப் பட்டதிலிருந்து பஞ்சாபி இலக்கியத்தில் ஆங்கில மொழியின் தாக்கம் குறிப்பிடத் தக்க அளவு இருந்து வந்திருக்கிறது. பஞ்சாபில் பல்வேறு பகுதிகளில் வெள்ளையர்கள் ஆளத் தொடங்கும் முன்பு அதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாக வழங்கி வந்த பெர்சியன் மொழி பஞ்சாபில் சட்டமன்ற மொழியாக இருந்தது. அக் காலக்கட்ட பஞ்சாபி இலக்கியமும் பெர்சியன் மொழி, அராபிய தாக்கங்களைக் கொண்டிருந்தன.

முஸ்லீம்கள் ஏறத்தாழ கி. பி. 1000 இல் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். இக்காலக் கட்டத்தில் பஞ்சாபி மொழி மெல்ல மெல்ல அப்பிராந்தியத்தில் உள்ள அபபிரம்ஷாவிலிருந்து வளர்ச்சி அடைந்தது. அபபிரம்ஷா மார்க்கண்டேயனால் குறிக்கப் படும் கைகேயி, ஷௌரசேனி, பாஞ்சாலா என்ற 3 பைஷாசிகளுள் ஒன்றாக இருந்திருக்கக் கூடும். பஞ்சாபி மொழி யில் முற்காலப் படைப்புக்குச் சான்றாகச் சீக்கியர்களின் புனித மத நூலாகிய ஆதி கிரந்தப் பாடல்கள், குருநானக் எழுதிய ஜனம் ஸாகிஸ் என்ற வரலாறு ஆகியவை குர்முகி வடிவத்திலேயே எழுதப்பட்டுள்ளன. பஞ்சாபி மொழியில் எழுத விரும்பிய முஸ்லீம்கள் பெர்சியன் வடிவத்தையே தங்கள் எழுத்திற்குப் பயன்படுத்திய போதிலும் உள்நாட்டு மக்களால் குர்முகி எழுத்து வடிவமே பொதுப்பயன் பாட்டிற்குப் பஞ்சாபி மொழிக்குப் பதிலாகப் பயன்டுத்தப்பட்டது. குருநானக்கின் 'பத்தி' என்ற நூல் குர்முகி வடிவம் பஞ்சாபில் மிக முன்பே பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதை நிலைநாட்டுகிறது. சீக்கியக் குருக்கள் தாங்கள் எழுதுவற்கு ஏற்றுக்கொண்ட பிறகே அவ்வடிவம் 'குர்முகி' என்ற பெயரில் வழங்கப்பட்டது.

பஞ்சாபி இலக்கியத்தின் பொற்காலம் குருநானக் காலத்தில் (1469 - 1539) தொடங்கி 10 ஆவதும் கடைசி சீக்கிய குருவுமான குரு

கோபிந்சிங் (166 - 61708) கின் இறப்புடன் முடிகிறது. குருநானக்கின் முந்திய காலக்கட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரேகவிஞர்யாரெனில் ஃபரிட் ஷகர்கன்ஜ் (117 - 31265) அல்லது சிஸ்தி ஒழுங்கின் தெய்வ வல்லமை பெற்றவர்களுள் ஒருவரான ஷேக் ஃபரிட் என்று கூறலாம். அவரது தெய்வ உணர்வுகளில் இருந்த அப்பழுக்கற்ற தன்மையானது உண்மையானாலும் அவரது கவிதை ஆதி கிரந்தத்தில் சேர்க்கப்பட்டது. ஆதி கிரந்தத்தில் அவர் எழுதிய நான்கு கீர்த்தனைகளும் 112 சுலோகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பாபா ஃபரிட் அவர்களின் கவிதைகளுடன் கூட ஆதி கிரந்தத்தில் நானக் காலத்திற்கு முந்திய காலக்கட்டத்தில் எழுதப்பட்ட வர் கவிதைகள் (வீரப் பழங்கதைக் கவிதைகள்) என்ற பாடல்களும் காணப் படுகின்றன. 'வர்' என்பது பஞ்சாபிக் கவிதைக்குரிய இலக்கணங்கள் முற்றிலும் பொருந்திய பஞ்சாபிக் கவிதை. அவை வீரத் தலைவன் போர்க்களத்தில் போரிடும் திறமையை வெளிப்படுத்தும் பாடல் கள். நானக் காலத்திற்கு முந்திய காலக் கட்டத்தில் எழுதப்பட்ட பஞ்சாபி உரைநடை இலக்கியம் ஆகிய 'ஏகாதசி மகாத்மம் ' என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

குருநானக்கின் காலத்தில், அவரது காலத்திற்கு முந்திய நாட்டுப்புற மரபுகள் மிகவும் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. பக்தி இயக்கத்தின் மேலோங்கிய பக்தி உணர்வு மரபு வழிப்பட்ட யாப்பு வடிவத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. 'வர்' கவிதைகள் சீக்கிய குருக்களால் இயற்றப்பட்டன. அவை இறைவனது பெருமைகளையும் மத போதகரைப் பற்றியும், அறிவார்ந்த மக்களைப் பற்றியும் (குர்முக்) பாடின. இப்படிப்பட்ட மதம் தொடர்பான 'வர்' கவிதைகள் தவிர, குரு கோபிந் சிங் பற்றிய 'சந்தி தி வர் கவிதைகள்' என்ற 'வர்' மாதிரிக் கவிதையும் நமக்குக் கிடைத்துள்ளது. அவ்விலக்கியம் பெண் தெய்வமாகிய துர்க்கா கொடிய அரக்கர்களுடன் நிகழ்த்திய போரினைப் பற்றியது. குருநானக்கின் கவிதைகளில் கவிதை உணர்ச்சி ஓட்டமும், கற்பனை வளமும், சிந்தனைக் கூர்மையும் குறிப்பிடத்தக்கவை. அவை உபநிடத கருத்துக்களை அதிகம் கொண்டவை. அவருடைய புகழ்பெற்ற படைப்பாகிய 'ஜபு' ஆதி கிரந்தத்தின் சுருக்கம் என்று கருதப்படுகிறது. அவருடைய தத்துவக் கருத்துக்கள் ஒருபோதும் அவருடைய கவித்துவத்தைக் குறைத்துவிடு வதில்லை. அவருடைய பக்திக் கீர்த்தனைகளில் அவர் காலத்திய

எல்லா இனத்தவர், மதத்தவர் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. அவர் கிழக்கத்திய, மேற்கத்திய பஞ்சாபி, மேற்கத்திய இந்தி, ஸகஸ்கிருதி, பெர்சியன் ஆகிய மொழிகளில் எழுதினார். அவரது பக்திப் பாடல்கள் அவரது அனைத்து வட இந்திய மொழிக் கவிஞர்கள் பற்றிய அறிவை வெளிப்படுத்துகின்றன. அவருக்குப் பின்வந்த சீக்கிய குருக்கள் பலர் அவரது கொள்கைகளையும் அவரது கவிதைகளில் இருந்த பரம்பொருள் குறித்த மறை பொருள் களையும் விளக்கிக் கூறினர். 5ஆம் சீக்கிய குருவாகிய குரு அர்ஜுன் தேவ் (1565-1605) 1604ஆம் ஆண்டில் சீக்கிய மதத்தின் வழித் தோன்றல்களாகிய சீக்கிய குருக்கள், இடைக்கால சீக்கிய மத குருவானவர்கள் ஆகியோரது கவிதைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஆதி கிரந்தத்தினைத் தொகுத்துப் பதிப்பித்தார். ஆதி கிரந்தம் இந்து பேச்சு வழக்கைக் காட்டும் ஒரு அரிய பொக்கிஷம் ஆகும். சில கவிஞர்களின் பாடல்கள் ஆதி கிரந்தத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அக்கவிஞர்கள் நானக்கின் காலக் கட்டத்திற்கு முந்திய காலத்தைச் சேர்ந்த, கபீர், நாமதேவர், ரவிதாஸ், யோகி தவத்திரு ஷேக்ஃபரிட் கொள்கைக் கவிஞர்களும், சமகாலத்தைச் சேர்ந்த பக்தியுணர்வால் இறைவனைத் தேடும் சில புலவர்களும் கவிஞர்களும் ஆவர். குருநானக்கின் வழித் தோன்றல்களாகிய குரு அங்கத்தேவ், குரு அமர்தாஸ், குரு ராமதாஸ், குரு அர்ஜுன் தேவ், குரு தெக் பஹதூர் ஆகியோரின் கவிதைகளும் ஆதி கிரந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. குரு தேக் பஹதூரின் கவிதைகள் 10ஆவது குருவாகிய குரு கோபிந் சிங் அவர்களால் சேர்க்கப்பட்டன.

குரு கோபிந்த் சிங் அவர்களின் கவிதைகள் சீக்கிய மதத்தின் இரண்டாவது புனித நூலாகிய தசம் கிரந்தத்தில் (10ஆவது குருவின் நூல் என்று கூறப்படும் நூல்) உள்ளன. 'சந்தி தி வர்' என்ற நூல் மேற்குறிப்பிட்ட கவிதைகளைப் புனித நூலாம் தசம் கிரந்தத்தின் ஒரு பகுதி என்று குறிப்பிட்டது. இக்கவிதை பஞ்சாபி மொழியில் இருக்க, பரம்பொருள் பற்றிய இறையுணர்வுப் படைப்புக்களும் விளக்கத் தன்மை கொண்டவையும் ஆகிய பிற படைப்புக்கள் பெரும்பாலும் ப்ரஜ் மொழியில் அமைந்துள்ளன. பெர்சிய மொழியில் சில கவிதைகள் இறுதியில் உள்ளன. அவை பேரரசன் ஔரங்கச்சீப்புக்கு எழுதப்பட்ட கவிதை வடிவில் உள்ள புகழ்பெற்ற ஜஃபர்னமா (வெற்றிக் கடிதங்கள்) என்ற கடிதங்கள் உள்ளடங்கிய கவிதைகள் ஆகும். சில அறிஞர் பெருமக்கள் பௌராலிகக்

கருத்தையும் உள்ளடக்கத்தையும் கொண்ட கவிதைகள் குருவைச் சார்ந்த அரசவைக் கவிஞர்களால் இயற்றப்பட்டவை என்று நம்புகின்றனர். குருவால் இயற்றப்பட்ட வீரப் பாடல்கள் குறிப்பிடத்தக்கனவும் தரம் வாய்ந்தனவும் ஆகும்.

நானக் காலக்கட்ட பஞ்சாபி இலக்கியத்தில் அவரது கவித்துவமும் கூற்றுக்களும் பல்வேறு இலக்கிய வகைகளில் கவிதைகளில் மட்டுமல்லாமல் உரைநடையிலும் வெளிப்பட்டன. குரு நானக்கின் வாழ்க்கை பற்றிய நூலாகிய 'ஜனம்-ஸாகிஸ்' இக்காலத்தில் பல்வேறு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. புகழ்பெற்ற மொழிபெயர்ப்புக்கள், 'பாய்பலே வாலி ஜனம்-ஸாகி', 'புரத்தன் ஜனம்-ஸாகி', 'ஷம்போ நாத் வாலி ஜனம் பத்ரி பாபே நானக் கி', 'மெஹர்வன் வாலி ஜனம் ஸாகி' (ஸக்கஜ்த் போதி) முதலியன ஆகும். பாய் மணி சிங் அவர்களால் எழுதப் பட்ட மற்றொரு நூலாகிய ஜனம்-ஸாகி பிற்கால மொகலாய காலத்தைச் சேர்ந்தது ஆகும். குருநானக் காலத்தில் பாய்-குர்தான் குரு-பாவியைத் தொகுத்துச் சொல்லுவதில் தலைசிறந்தவராக விளங்கியவர் ஆவார். அக்கால ஸம்பி கவிஞர்களின் பிரதிநிதியாக ஷா ஹுஸைனும், குய்ஸா கவிஞர்களின் பிரதிநிதியாகத் தாமோதரும் விளங்கினர். மொகலாயர்களின் பிந்திய காலத்தில் கம்பி கவிதைகள் 'புல் ஹே ஷா'வின் கம்பிஸ் கவிதைகளினால் உச்சநிலையை அடைந்தன. குய்ஸா கவிதைகள் 'வாரிஸ் ஷா' எழுதிய 'குய்ஸா ஹீர்' கவிதைகளினால் மிகச் சிறந்து விளங்கின. நஜாபத், நாடிர் ஷா பற்றி ஒரு 'வர்' கவிதை எழுதினார். 'ஜனம்-ஸாகிஸ்' தவிர, பஞ்சாபி உரைநடை இலக்கியங்களின் வகைகள் பல நானக்கின் காலக்கட்டத்திலும் தோன்றின. அவை ஸாகிஸ், கொஸ்தாஸ், பரமராதாஸ், பச்சன், சுகான், ஸார், மஸ்லே, டூகே முதலியன. சமஸ்கிருதத்திலிருந்து பெர்சியன் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட பல மொழிபெயர்ப்புக்களும் தோன்றின. 'உடாசி, 'நிர்மலா', 'சேவபந்தி' ஆகிய யோகிகளும் சில அரிய பங்கினைச் செய்துள்ளனர்.

ரஞ்சித் சிங் காலக்கட்டத்தில் படைப்பிலக்கிய ஆக்கம் பெரிதும் இல்லை. சில குய்ஸாக்கள், 'வர்' கவிதைகள் இயற்றப் பட்டன. குய்ஸா எழுதும் மரபும் பரம்பொருள் அநுபவம் குறித்த கவிதைகளின் அமைப்பும் ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்க காலம் வரை தொடர்ந்து இருந்தது. கிறிஸ்தவ ஊழியர்கள்

மொழிபெயர்ப்பிலும், சிறுகதை எழுதுவதிலும் சில உத்திகளைக் கையாண்டனர். கிறிஸ்தவ மத ஊழியர்களின் மத போதனைகளின் விளைவாக, சீக்கியர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்களிடையே சமயம் குறித்த புது விழிப்புணர்ச்சி தோன்றியது. பல்வேறு விதமான சமயப் பிரச்சார இலக்கியங்கள் எழுதப்பட்டன. சீக்கியர்களிடையே சிங் சபா இயக்கம் இயங்கியபோது, கல்சா ட்ராக்ட் ஸொஸைட்டியின் பணிகள் குறிப்பிடத்தக்கனவாய் அமைந்தன. பாய்வீர் சிங் (1872-1957) இவ்வியக்கம் தோற்று வித்தவர். ஆனால் இவர் ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியத்தின் தாக்கத்தினால் புதிய இலக்கிய உணர்வுடையவராயும் இருந்தார். குர்பக்ஷ் சிங் 1895இல் பிறந்தபோது பாய் வீர் சிங்குக்கு வயது 23. வீர் சிங் நவீன பஞ்சாபி கவிதைகளுக்கும் உரைநடைக்கும் தந்தை என்று கருதபட்டபோது குர்பக்ஷ் சிங் படைப்புக்கள் அனைத்திலும் பஞ்சாபி மொழி உரைநடை இலக்கியம் கருத்து வெளிப்பாட்டிற்கு வல்லமை பொருந்திய சாதனமாக அமைந்தது. வீர் சிங் சீக்கிய மத இலக்கியங்களினால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அதுவே குர்பக்ஷ் சிங்கின் இலக்கியப் பாரம்பரியமாகவும் இருந்தது. ஆனால் இவருடைய அணுகுமுறைகளிலும் ஒரு பெரிய வேறுபாடு இருந்தது. வீர் சிங்கின் படைப்புக்கள் சீக்கிய மத குருக்களின் படைப்புக்களில் உள்ள மதக் கொள்கைகளையும் தத்துவங் களையும் வெளிப்படுத்துவனவாக அமைந்தன. ஆனால் குர்பக்ஷ் சிங்கின் படைப்புக்களோ மக்களைக் கவரும் தன்மையுடையதும் அவருக்கேயுரியதுமான தனிப்பட்ட நடையின் மூலம் ஒரு பெரிய வரையறை கொண்ட உலக அரங்கினூடே மக்களை அழைத்துச் சென்று, சீக்கிய மதத்தின் பெருமை பெற்ற அறக் கருத்துக்களைப் பேசுகின்றன.

ஒருமுறை 1954 இல் குர்பக்ஷ்சிங் சீனாவுக்குச் சென்றிருந்த போது, இரண்டு போலிஷ் உல்லாசப் பிரயாணிகள் அவரை அணுகினர். அவர்களுள் ஒருவர் எழுத்தாளர். மற்றொருவர் ஓவியர். இருவரும் குர்பக்ஷ்சிங்கிடம் அவரது சமயம் குறித்தும், அதை நிறுவியவர் குறித்தும் வினவினர். அதற்கு அவர் குருநானக் பற்றித் தான் கூறியது குறித்து குர்பக்ஷ்சிங் பின்வருமாறு எழுதுகிறார்.

''முதலாவதாக, என் குரு மிக துணிச்சலாக மன்னர்களைக் கசாப்புக் கடைக்காரர்கள் என்று விவரித்தார். தனித்து வாழும் துறவிகள் அவரிடம் நேருக்கு நேராகவே செல்வ வளத்தின்

தீமைகளைப் பாடினாலும் சரி, வறுமையைப் புகழ்ந்து பாடினாலும் சரி, மன்னர்கள் பெற்றிருந்த ஆளும் உரிமை 'தெய்வம் தரும் உரிமை' என்றும் ஒத்துக்கொண்டனர். எனவே அத்துறவிகள் பொதுமக்கள் வரி கட்ட வேண்டியது பொது மக்களது கடமை என்றும் பேசிவந்தனர். இரண்டாவதாக குரு, வாழ்வில் தொழிலாளர்கள் மன்னர்களுக்குச் சமமாகக் கருதப் படவேண்டும் என்று எண்ணினார். இதற்குமுன் எல்லா அறிஞர் பெருமக்களும் தியானம் ஒன்றே பயனுள்ளது என்று கூறினர். தொழிலாளர் களுக்குத் தியானம் செய்ய நேரமே கிடைக்காததால் மற்றவர்களைவிடத் தங்களைத் தாழ்ந்தவர்கள் என்று எண்ணித் தொழிலாளர்கள் தாழ்வு மனப்பான்மை கொண்டு விளங்கினர். ஆனால் குரு தன்னை ஒரு பெரியவராகக் கருதிக்கொண்டு தொழிலாளர்களுக்கு நிறைய தைரியம் அளித்தார். மேலும் நான் மாலிக் பாகோ கதையையும், பாய் லாலோ கதையையும் அவர்களுக்குக் கூறியபோது, அக்கதைகளில் அடங்கியுள்ள கருத்துக்களைக் குறித்து அதிசயித்து அவ்விருவரும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தனர். பால் சொட்டுக்கள் பாய்லாலோவின் ரொட்டி யிலிருந்து சொட்டியதோ இல்லையோ, இரத்தச் சொட்டுக்கள் மாலிக் பாகோவின் ரொட்டியிலிருந்து சொட்டியதோ இல்லையோ, ஆனால் இவ்விரு ரொட்டித் துண்டுகளையும் பாலு டனும், இரத்தத்துடனும் ஒப்பிடுதல் தொழிலாளர்களின் தொழிலுக்கும், தொழிலாளர்களைச் சுரண்டும் முதலாளித்து வத்தினர் ஆதிக்கத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளச் செய்தது. குருநானக் பொது உடைமைத் தத்துவ நோக்கில் மட்டும் குறிப்பிடவில்லை. கார்ல்மார்க்ஸுக்கு முந்தியே குரு வெளிப்படுத்திய தத்துவத்தின் சாராம்சத்தைத் தெளிவாக வெளிக்காட்டினார். நான் அவர் களுக்காகக் குருவின் கீர்த்தனைகள் பலவற்றை மொழிபெயர்த்துக் கூறினேன். அவற்றைக் கவனித்த பிறகு அந்த உல்லாசப் பிரயாணிகளுள் ஒருவரான எழுத்தாளர் என்னிடம் நான் இதுவரை எந்த ஒரு மதத்தையும் சார்ந்தவனாக இருந்ததில்லை. இனி எப்போதாகிலும் அப்படி இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தால் நான் அப்பொழுது இப்பெரிய மனிதனின் சீடனாக வாழ்வதற்கே விரும்புகிறேன்'' என்று கூறினார். அவர்கள் இருவரில் மற்றொருவரான ஓவியர், தனது நோட்டுப் புத்தகத்தை வெளியே எடுத்து, குருநானக்கின் படத்தைத்தான் வரைந்து கொள்ள

விரும்புவதாகக் கூறி அவரது உருவத் தோற்றத்தைப் பற்றி வார்த்தைகளால் தனக்குக் கூறினால் வரைந்து கொள்ளுகிறேன், கூறுவீர்களா? என்று கேட்டார் (பரம் மனுக்கிலிருந்து).

குர்பக்ஷ்சிங்கைப் பொறுத்தவரை, குருநானக் ஒரு கவிஞர். அதுமட்டுமல்ல, ஒரு புரட்சிப் போதனையாளரும் ஆவார். 'ஒற்றுமை', 'மனிதாபிமானம் ஆகிய இரண்டு கருத்துக்களை அவர் தமது செய்தியாகக் கொண்டார். அவருக்குப் பின் வந்த நாலாவது நபரான 5ஆவது நானக், குரு அர்ஜுன் தேவ் என்பவர் மொத்த உலகத்திற்கும் உகந்த சமயமாக இம்மதத்தை நடை முறைப் படுத்திக் காட்டினார். இம் மதம் உலகப் பொது என்பதற்குச் சான்றாதாரமாக 'குரு கிரந்த் சாகிப்' விளங்குகிறது. இந்நூலில் குரு அர்ஜுன்தேவ் அளவில்லாத மதிப்புடன் கபீர், நாமதேவ், ரவிதாஸ், பாபா ஃபரிட் ஆகிய யோகிகளின் கீர்த்தனைகளைச் சேர்த்தார். குருதேவின் பொதுவான சமையலறையில் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்களும் மேல்நாட்டு விருந்தினர்களும் எவ்வித வேறுபாடுமின்றிச் சமமாகவே நடத்தப்பட்டமை இதற்கு மற்றொரு சான்றாகும். முஸ்லிம் யோகியாகிய 'மியான் மிர்' என்பவரால் ஹரி மந்திருக்கு (பொற்கோவில்) நிறுவப்பட்ட அடிக்கல் குறிப்பிடத்தக்க சான்றாகும்.

குர்பக்ஷ் சிங் குருகோபிந்த் சிங்கை ஒரு தேசிய வீரன் என்றும் கருதினார். அவர் ஒரு சிறந்த பெரிய தேசிய விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல, மேம்பாட்டின் இருப்பிடமும், யாராலும் வெல்லப்படமுடியாத ஒப்பற்ற வீரனும் ஆவார்; மிகுந்த மனிதாபிமானமுள்ளவராக விளங்கினார். அவரது கவிதைகள் ஈடு இணையற்றவை. அவர் வெகு தூரத்திலிருக்கும் கவிஞர்களையும், பெரிய அறிவாளிகளையும் வரவேற்று, அவர்களை அனந்தப்பூரில் உள்ள இயற்கை சூழ்ந்த அமைதியான மனதை ஈர்க்கும் சூழல்களில் இருக்கச் செய்தார். இச்செயல் குறித்த அவரது நோக்கம் அவர்களுக்கு வாழ்வின் அழகுகளைப் பற்றிப் பயிற்றுவித்தலே ஆகும். அவர்களுக்கு மிகுந்த மதிப்பளித்து அவர்களுடன் இணைந்து கூட்டங்கள் பல நடத்தினார். அவர்களது படைப்புக் களை ஆராய்ந்து பாராட்டினார். சமஸ்கிருதப் பாக்களைப் பஞ்சாபி மொழியிலும் பரஜ் மொழியிலும் மொழிபெயர்த்துக் கிடைக்கச் செய்தார். அவரே பல மொழிகளில் மாட்சிமை பொருந்திய கவிதைகள் பலவற்றை எழுதினார். அவரது பாடல்கள் அவற்றின்

கருத்தோட்டச் சிறப்பு, வீரயுகச் சார்பு, உயிர்த்தன்மை முதலியவற்றிற்குச்சிறப்புப் பெற்றவை. 'பக்ஷித்தார்நாடக்' என்பது அவரது இறையுணர்வுடன் கூடிய சுயசரித்திரம் ஆகும். இலக்கிய ஆய்வாளர்கள் மதிப்பீட்டில் அவரது இந்நூல் இந்தியப் படைப்புக்களின்தரம்வாய்ந்தபலவற்றுள்உயர்ந்தஇடம்வகிக்கும் ஒன்று ஆகும். 'சந் தி வார்' தனித்த நம்பிக்கையை வெளிப் படுத்துகிறது. குரு நானக்கின் 'ஜபுதி' என்ற படைப்பில் அமைதியும், ஆழ்ந்த இறையுணர்வும் உள்ளன. ஆனால் குரு கோபிந் சிங்கின் 'ஜாப் ஸாகிப்' என்ற நூலில் இறைமை குறித்த வலுக்கட்டாயமானஎழுச்சியும்உள்ளன. குரு இறைத்தன்மையில், வீரத்தன்மையைச் சேர்த்து எழுதினார். 'தசம் கிரந்த்' என்ற நூலில் அவரது சொந்தப் படைப்புக்கள் தவிர, நாட்டுப்புற ஆர்வத் தாக்கத்தை உண்டுபண்ணும் அவரது காலப் பிரபலமான படைப்புக்களும் உள்ளன. அவற்றுள் பல படைப்புக்களில் பக்தி குறித்த இறைத்தன்மை உள்ளடக்கமாக இல்லை. குரு எவ்வாறு வளமான தாவரத்திற்குப் பச்சையம் முக்கியமோ அதுபோல் மனநல மேம்பாட்டிற்கு இறை உணர்வு முக்கியம் என்று கருதினார். குரு கோபிந் சிங் வீரம், அழகியல் இரண்டையும் நகைச்சுவை உணர்வுடன்கலந்துபூங்கொத்தாகக்கட்டி, அதனைஇறைத்தன்மை என்ற பூச்சாடியில் வைத்து அழகுபடுத்தினார் (சரப்-பக்ஹி நாய்க்). குருநானக் தேவ், குரு அர்ஜுன் தேவ், குரு கோபிந் சிங் முதலியோர் பற்றிய குர்பக்ஷ் சிங்கின் மேற்கூறிய கருத்துக்கள் இரண்டு சீக்கிய மத புனித நூல்கள் பற்றிய மகிழ்வுணர்வையும், ஆழமான மதிப்புகளையும் பெரிதும் காட்டுகின்றன. அவர் சீக்கிய குருக்களை மனித இனத்தின் செயல்வீரர்கள் என்று கருதினார். அவரது படைப்புக்கள் அவரது பலநூலறிவின் பேரளவினை வெளிப் படுத்துகின்றன. அவர் பல இடங்களுக்குத் தன் வாழ்வில் பிரயாணம் செய்தவர் ஆவார். பொறியியல் வல்லுநராக அவர் தன் வாழ்வில் பணியை ஏற்று ஆரம்பித்த போதிலும், அவரது திறமைகள் எழுத்தாளர் என்ற துறையின்மூலமே சிறப்பாக அமைந்தன. திருமதி மாகட்ரீ என்ற ஓர் அமெரிக்கப் பெண்மணி யின் மூலமே அவரது எழுத்துத் திறமைகள் கண்டு பிடிக்கப் பட்டன. அப்பொழுது அவர் ஓஹியோ நாட்டில் யங்ஸ்டவுன் என்ற ஊரில் ஒரு பொறியியல் நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

குர்பக்ஷ் சிங் எட்டு வயதாயிருக்கும்போதே தன் தந்தையை இழந்துவிட்டார். பள்ளியில் உருது, பெர்சியன் மொழிகளும், வீட்டில் குர்முகி மொழியும் கற்றுக்கொடுக்கப்பட்டார். மெட்ரிகுலேஷன் தேர்விற்கு அவர் படித்தபோது ஆங்கில மொழியில் நல்ல புலமை பெற்றார். அவர் தந்தை பெர்சியன், உருது, ஆங்கில மொழி நூல்கள் பல கொண்ட ஒரு சிறு நூலகத்தைத் தன் காலத்திற்குப் பின் விட்டுச் சென்றிருந்தார். அந்நூலக நூல்களுள் வாரிஸ் ஷா எழுதிய பெர்சியன் பாத்திரப் படைப்புக்களைக் கொண்ட 'அஃப்ஸனா-இ-அனஜப்' என்ற தலைப்புடைய பெரிய புதினமும் மற்றும் பல ஆங்கிலப் புதினங்களும் இருந்தன. அவ்வாங்கிலப் புதினங்களை வாசித்ததின் பிறகு இவரால் பெரிதும் விரும்பப்பட்டவர் 'ஈஸ்ட் லியன்' ஆவார். அலிஃப் என்ற இதழின் சில வெளியீடுகளை உள்ளடக்கிய ஒரு தொகுதியும் அவற்றில் இருந்தது. இவ்விதழ் சாமி ராம் தீர்த் வெளியிட்ட இதழ். இத்தொகுதியின் உள்ளடக்கம் அவரது மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. சாமி ராமகிருஷ்ணா, சாமி விவேகானந்தா ஆகியோரின் படைப் புக்களாலும் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். பின்னால் அவர் வாழ்வில் 'ஆசியாதாசனன்' என்ற தலைப்பிடப் பட்ட ஒரு நாடகம் பெரும் தாக்கத்தை அவருள் உண்டுபண்ணியது. அந்நாடகம் எட்லின் அர்னால்டின் 'ஆசியாவின் ஒளி' என்ற நாடகத்தை அடிப்படையாகக் கொண்டது.

குர்பக்ஷ் சிங் இரண்டாம் உலகப் போரின் போது ஈரானில் பணியில் அமர்ந்தப்பட்டார். அப்போது அவர் அமெரிக்கக் கிறிஸ்தவ ஊழியக் குழுவைச் சேர்ந்த பேராயரைச் சந்தித்தார். அவர் தனது நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்ள குர்பக்ஷ் சிங்கிற்கு அனுமதி அளித்தார். தான் அங்கு தங்கியிருந்த காலத்தை, அந் நூலகத்திலிருந்து ஷேக்ஸ்பியர், ஷெல்லி, பைரன், கீட்ஸ், எமர்சன், லாங்ஃபெல்லோ, வில்காக்ஸ், வால்ட்விட்மன் போன்றோரது படைப்புக்களைப் படிப்பதன் மூலம் நன்கு பயன்படுத்திக் கொண்டார். ஈராக், எகிப்து, கிரீஸ், இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிக வரலாற்றினைப் பற்றிக் கூறும் நூலும் அவரது மனத்தில ஆழ்ந்த பாதிப்பை உண்டுபண்ணிய நூல்களில் ஒன்று. அவர், ''இக்கல்வி இவ்வுலக மனிதர்கள் மீது நான் வைத்திருக்கும் அன்பிற்கு மட்டும் வளமூட்டாமல் காடு, குகை, மரங்கள் ஆகியவற்றில் பல நூற்றாண்டுகளாக வாழும் மனிதர் களோடு

எனக்குள்ள பிரிக்கமுடியாத உறவு குறித்த அறிவையும் பெருக்கியது. மனிதன் பாடிய முதல் பாடல், மனிதன் வரைந்த முதல் படம், மனிதனால் செய்யப்பட்டு ஒரு பெண் அணிந்த முதல் நகை (வேட்டையாடப்பட்ட கொடிய விலங்குகளின் பற்களால் செய்யப்பட்ட கழுத்தாரம்) போன்ற மனித வரலாற்றின் சாதாரண சம்பவங்கள் என்னை இரவுப் பொழுதுகளில் விழித்திருக்கச் செய்தன. அது எத்தகையதெனில் எனது இளம் வயதில் இராமலீலாவில் பாரத் கடவுள் ராமனைச் சந்தித்த நிகழ்ச்சி, இராவணன் சீதையைக்கவர்ந்த முறை, செயல், கடவுள் இராமனின் ஆழ்ந்த துக்கம் போன்றன குறித்த நினைவுகள் என்னை வியப்பிலாழ்த்தியதற்கொப்பானது.

1922-23ஆம் ஆண்டில் குர்பக்ஷ் சிங் அமெரிக்காவில் இருந்தபோது ஆங்கிலத்தில் எழுத ஆரம்பித்தார். அப்பொழுது அவர், விக்டர் ஹீகோ, மேடர்லிங்க், இப்சன், டால்ஸ்டாய், எச். ஜி.வெல்ஸ், தாம்ஸன் ஹாட்டி, ஜோஸப் கான்ரேட், அனதோல் ஃப்ரான்ஸ், வால்ட் விட்மன், எமர்சன், ஒமர் கய்யாம், நெய்ட்ஸ்ச், கொதே, கந்த், ஸ்கில்லர் போன்ற பலரது நூல்களைப் பேராவலுடன் படித்தார். குர்பக்ஷ் சிங் ஆங்கிலத்தில் எழுத ஆரம்பித்தாலும், அவர் தனது தாய்மொழியாம் பஞ்சாபி மொழியில் சிறந்த உரைநடை யாளர் என்று கருதப்பட்டார். தனது நாட்டு மக்களுக்காக 40 வருடங்களுக்கும் மேலாக உழைத்தார். பஞ்சாபிச் சகோதரர்கள் மீது அவரது உழைப்பின் தாக்கம் பரந்துபட்டதாய் அமைந்தது. பழைய, நிலப்பிரபுத்துவ, மரபுவழிப்பட்ட பண்பாட்டு மதிப்புக்களை மாற்ற அவர் தன்னால் இயன்ற அளவு முயன்றார். பஞ்சாபி மொத்தப் பண்பாடு குறித்த தன் எண்ணங்களை அவர் தன் எழுத்தில் வடித்தார். அவர் கலை, இலக்கியம், கல்வி, சமயம், நீதி, உடல் நலம், விவசாயம், பால்உணர்வு முதலியன பற்றி எழுதினார். அவரது நூல்கள் அவரது பரந்துபட்ட நூல் அறிவை வெளிப் படுத்தின. கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் உள்ள அறிஞர்களின் கூற்றுக்களை அடிக்கடி மேற்கோள் காட்டி எழுதினார். தன் காலப் பல்வேறு இயக்கங்களைப் பற்றிப் பரந்த விழிப்புணர்வு கொண்டிருந்தார். அவரது நூல்கள் அவரது பல நூல்கள் கற்ற அறிவை மட்டும் வெளிப்படுத்தவில்லை. அவரது பல்வேறு நாடுகளைப் பார்வையிட்ட சொந்த அனுபவத்தையும்

வெளிக் காட்டின. அமெரிக்கா, இரஷ்யா மற்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட வாழ்வு பற்றிய புதிய மதிப்புகள், சீக்கிய குருக்களால் போதிக்கப்பட்ட நிலைத்த சமய மதிப்புக்கள் முதலியன இவரது வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்கின. இவரது அன்பு குறித்த தத்துவம், அமெரிக்கப்பண்பாட்டிற்கும் மார்க்ஸியச் சிந்தனை குறித்த முன்னேற்றமான கொள்கைக்கும் கடப்பாடு உடையது. அவரது எண்ண வெளிப்பாட்டிற்குக் கருவியாக அமைந்த 'ப்ரீத் லாரி' என்ற இதழின் பல்வேறு பிரசுரங்களில் எமர்சன், பெர்னாட்ஷா, ரொமெய்ன் ரோலண்ட், டால்ஸ்ட்டாய், மெஸின்ஸி, பெர்ட்ரன்ட் ரஸ்ஸல், விக்டர் ஹீகோ முதலியோரின் பல்வேறு பகுதிகளை அவர் மேற்கோள் காட்டியிருப்பதை நாம் காணலாம். மார்க்ஸ், லெனின் ஆகியோரது படைப்புக்களையும் ஆங்காங்கே அவர் சுட்டிச் செல்கிறார்.

குர்பக்ஷ் சிங்கின் பல்வேறு படைப்புக்கள் அவரே எழுதிய அவரது சொந்தப் படைப்புக்களே. எனினும் சில மொழி பெயர்ப்புப் பணிகளையும் அவர் செய்திருக்கிறார். அவர் மேல் நாட்டாரின் படைப்புக்களுள் மிகச் சில படைப்புக்களை மட்டுமே பஞ்சாபி வாசகர்களுக்கு மொழிபெயர்த்துத் தரும் தகுதியுடையது என்று கருதினார். எட்வின் அர்னால்டு எழுதிய 'ஆசிய ஜோதி' என்ற பெரிய விளக்கக் கவிதையையும் வால்ட் விட்மனின் புதுக் கவிதைகளையும் (கான் டியான் படியன்), பல்வேறு எழுத்தாளர் களின் சிறுகதைகளையும் (ஆக்ரி ஷபத்), பிரெஞ்சு நாடக மொலீயரின் இரு நாடகங்களையும் (மொலீயர் டி நாடக்) மொழிபெயர்த்துள்ளார். 'ஜஷ்க் ஜின்ஹன் டி ஹட்டின் ரஹியா' என்ற தலைப்பில் அமைந்த தொகுப்பில் அவர் உரீர்-ரஞ்சா, ஸோஹ்வி-மஹிவால், சஸ்லி-புன்னு, மிர்ஸா-சஹிபான், ஷிரின் -ஃபர்ஹத், லைலா-மஜ்னு ஆகிய காதலர்களின் காதல் வாழ்வை மீண்டும் கூறுகிறார்.

வாழ்க்கை, இலக்கியம் இரண்டையும் பற்றிக் கூறும்போது, குர்பக்ஷ் சிங் பின்வருமாறு கூறுகிறார். எந்த ஒரு வாழ்க்கைக் கலையும் அறிவு ஜீவிகளின் ஆசான் என்றோ அல்லது இலக்கியம் என்றோ கணிக்கப்பட முடியாது. எந்தச் சமுதாய மதிப்பும் இலக்கிய மதிப்புக்கள் அளவிற்கு நிலைத்து வாழ்வதில்லை. இலக்கியங் களால் என்றும் காட்டப்பட்டு வந்த உயர்வு எல்லாக் காலங்களிலும் மதிப்புடன் போற்றப்படுவனவாகச் சமுதாய

நடைமுறையில் இல்லை. காளிதாஸ், ஷேக்ஸ்பியர், கொதே, தாந்தே, விட்மன், கார்க்கி, தாகூர் ஆகியோர் மனத்தின் ஆசான்களாகவும் கலை யாகவும் எல்லாக் காலத்திலும் கருதப்படுவர். இதற்குக் காரணம் என்னவெனில், இலக்கியம் என்பது மனிதாபிமானத்தின் நிலைத்த மதிப்புக்களுக்குத் தீர்ப்பளிப்பதாயும், சொற்களைக் கொண்ட மந்திரவாதியாகவும் விளங்குவதே. நிலைத்த மதிப்புக்கள் மாறாமலேயே இருக்கின்றன. சொல்லோவியங்களும் இணை யற்றவையாகவே இருக்கின்றன. மனித மனத்தின் மகத்துவம், எப்பொழுதுமே புத்துணர்வுடன் இருக்க ஆர்வம் கொள்ளல், மரபுவழிப்பட்ட மதிப்புக் களுக் கிடையே தொடர்ந்து மோதல் நிகழ்த்துதல், முன்னேறுவதற்காக ஏங்குதல், தடைகளுக்கெதிரான உறுதி கொள்ளல், இதயத்தை மீறிய வெற்றி குறித்த ஆழ்ந்த ஆவல் கொள்ளல், அழகு குறித்த காதல் கொள்ளல், இறுதிவரை ஒழுங்கு பற்றிய நம்பிக்கையுடனிருத்தல், வெற்றிவிழைவு, ஆகிய இத்தகைய மனித மதிப்புக்கள் எப்பொழுதும் மாறாமல் இருக் கின்றன என்றும் மாறாமல் இருக்கும். இம்மதிப்புக்கள் குறித்துப் பேசும் இலக்கியமும் என்றும் நிலைக்கும்.''

(ஜிந்தகி டி ராஸ் தே ஹொர் லேக்ஹ்).

2. வாழ்க்கை

குர்பக்ஷ் சிங் எழுதிய அவரது சுயசரிதமாகிய என் வாழ்க்கைக் கதை (மேரி ஜீவன் கஹானி) என்ற நூலின் இரு தொகுதிகள் முறையே 1959, 1964ஆம் ஆண்டுகளில் வெளியாயின. 1978ஆம் ஆண்டில் அவரது இறப்பிற்குப் பின் மூன்றாம் தொகுதி வெளியானது. முதல் தொகுதி அவரது பிறப்பில் ஆரம்பித்து அதாவது 1895ஆம் ஆண்டு முதல் 1924ஆம் ஆண்டுவரையும், இரண்டாம் தொகுதி 1924ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரையும், மூன்றாம் தொகுதி 1947ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரையும் உள்ள அவரது வாழ்க்கையைப் பற்றி முழுமை யாகக் கூறுகின்றது. இத்தொகுதிகள் அனைத்துமே உண்மையில் அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவ்வவ்வாண்டுக் குறிப்புக் களுடன் கதை வடிவில் கூறும் கட்டுரைகளைக் கொண்டவை. அக்கட்டுரைகள் அனைத்தும் குர்பக்ஷ் சிங் எழுதியவை ஆகும். இவ்வாறு அவரது பிறப்பிலிருந்து 1960ஆம் ஆண்டு வரையுள்ள அவரது வாழ்க்கையைப் பற்றி அவரே எழுதிய குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன. 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ஆம் நாள் அவர் இறைவன் திருவடி சேர்ந்தார். அவரது மகன் அவரிடம் அவரது மூன்றாம் தொகுதி வெளிவந்த இரண்டு ஆண்டுகளுக்குள் அவரது 1961ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரையுள்ள அவரது முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய 4ஆம் தொகுதியும் இறுதித் தொகுதியுமாகிய வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவதாக உறுதி அளித்திருந்தார். ஆனால் அவரது நோய்வாய்ப்பட்ட நிலையும் இறப்பும் தன் வாக்குறுதியை நிறைவேற்ற இயலாமல் ஆக்கி விட்டது. மூன்றாம் தொகுதி முன்னுரையில் அவரது மகன் நன்தேஜ் சிங் தனது தந்தை குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார். ''அவர் உலகில் இருக்கும் இலக்கியம், மொழி, வாழ்வு முதலியவை எப்படிப்பட்டவையாக இருப்பினும் அவற்றில் புரட்சிகரமான மாற்றங்களையும் புதுமைகளையும் கொண்டு வந்தார். அவரது நூல்கள் பல இன்றும் நம்மிடம் இருக்கின்றன. அவை இன்றும் இலக்கியம், மொழி, வாழ்க்கை முதலியவற்றை நன்முறையில் உருவாக்கும் வல்லமை. பெற்றவை''.

குர்பக்ஷ் சிங் சியல்காட் என்ற ஊரில் (இப்பொழுது பாகிஸ்தானில் உள்ள ஊர்) 1895ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் நாள் ஒரு நடுத்தர சீக்கியக் குடும்பத்தில் பிறந்தார். அவர் சர்தார் மிஷ்ளரா சிங் அவர்களின் குடும்பத்தில் பிறந்த முதல் ஆண் குழந்தை ஆவார். குர்பக்ஷ் சிங்கின் தந்தையான பஷெளரா சிங்கும் மூன்று சகோதரர்கள் கொண்ட அவரது குடும்பத்தில் முதல் ஆண் குழந்தையாகப் பிறந்தவர். எனவே இயல்பாகவே குர்பக்ஷ் சிங் மீது வீட்டில் உள்ள அனைவரும் கவனத்தையும் அன்பையும் தாராள மாகப் பொழிந்தனர். குர்பக்ஷ் சிங்குக்கு எட்டு வயதாயிருக்கும் போது அவரது தந்தை அவரது முப்பத்து நான்காம் வயதில் காலமானார். சர்தார் பஷெளரா சிங் அரசாங்கத்தில் துணை மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்தார். இருந்தபோதிலும் அவர் ஓய்வுபெறும் காலத்திற்கு முன்பாகவே ஓய்வு பெற்றுக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டு அத்துறையில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முயன்றார். அப்போதுதான் சாவின் கொடிய கரம் அவரை இவ்வுலகிலிருந்து பிரித்துக் கொண்டது.

கொலாபூருக்கு அருகில் உள்ள ஃபேட்ஹபாத் என்ற ஊரில் குர்பக்ஷ் சிங் ஒரு தொடக்கப் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியைப் பயில ஆரம்பித்தார். பேட்ஹபாத் அவரது தந்தை பணியாற்றிக் கொண்டிருந்த ஊர். பின்னர் அவர்கள் அம்ரிட்ஸரில் சில காலமும் அதன் பின் ஸியல்காட்டிலும் வாழ்ந்தனர். தனது தந்தையின் இறப்பிற்குப் பின்னர் குர்பக்ஷ் சிங் மிகுந்த பொறுப்புடைய வரானார். ஸியல்காட்டில் மிகக் கடினமாக உழைத்து உயர் நிலைப் பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அவரது குடும்பத்தில் அப்போது அவரது மூத்த சகோதரி ஒருவரும் திருமணமாகாத ஒரு இளைய சகோதரியும், இரண்டு இளைய சகோதரர்களும் இருந்தனர். எனவே அவர் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடவும் தனது குடும்பத்தினர் நல்வாழ்வு வாழ்வதற்காகப் பணம் சம்பாதிக்கவும் விரும்பினார். ஆனால் அவரது தாத்தா அவரது கருத்தை அங்கீகரிக்காமல் தானே அவரது மேற்படிப்புக்குப் பொறுப் பெடுத்துக் கொண்டார். எனவே குர்பக்ஷ் சிங் ஸியல்காட்டை விட்டு வெளியேறி லாகூரிலுள்ள ஃபார்மன் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனாலும் மேலும் தீவிரமாக மறு சிந்தனை செய்து வீட்டுக்குத் திரும்பினார். தன் தாத்தாவை மீண்டும் சந்தித்துத் தான் படிக்க வேண்டும் என்ற தன் முன்னோர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகத் தான்

உழைக்காமல் இருப்பதற்குத் தனக்கு உரிமையில்லை என்று வலியுறுத்தினார்.

திரும்பி வரும்போது குர்பக்ஷ் சிங் ஒரு வேலை தேடுவதில் மிகவும் தீவிரமாக இருந்தார். அப்பொழுது சிங் சபை இயக்கம் முழு வேகத்துடனும் பிரபலத்துடனும் இயங்கி வந்தது. ஸியல்காட்டில் சீக்கியக் கல்வி மாநாடு நடைபெறுவதாக இருந்தது. அக் கல்விக் குழுவிற்குத் தனது மாநாட்டுக் கணக்குகளைப் பராமரிக்க ஒரு கணக்காளர் தேவையாய் இருந்தது. குர்பக்ஷ் சிங் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்திற்கு ஒத்துக்கொண்டு அப்பணியில் சேர்ந்தார். அப்பொழுது இத்தொகை நான்கு அல்லது அய்ந்து பேர் அடங்கிய ஒரு குடும்பத்தைப் பராமரிக்கப் போதுமானதாக இருந்தது. இப்பணியை ஏற்றுக்கொண்ட சில காலத்திற்குப் பின் 1912ஆம் ஆண்டு ஷின்தயேவை மணந்தார். ஷின்தயே சிறுவயதிலேயே அவருக்கு மனைவியாக நிச்சயம் செய்யப்பட்ட பெண்மணி ஆவார். இவரது மனைவியின் தாயும் இவரது தாயும் நெருங்கிய தோழியர். மேலும் அவர் பாபா கரத் சிங் எனப்பட்ட மிகப் பிரபலமான சீக்கிய சுதந்திரப் போராட்ட வீரரின் மாமா மகளும் ஆவார். திருமணத்திற்குப்பின் ஷின்தயே 'ஜக்ஜித் கௌர்' என்று வேறு பெயரிடப்பட்டு குர்பக்ஷ் சிங்கால் அன்புடன் 'ஜீடி என்று அழைக்கப்பட்டார். அவர் தன் மனைவிக்கு எழுதிய கடிதங்களில் 'ஜீடி' என்று விளித்து எழுதியிருக்கிறார். தன் திருமணத்திற்குப் பின் மிக விரைவில் தேரா இஸ்மாயில்கான் என்ற இடத்தில் உள்ள மத்திய அமைச்சரகத் துறையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள் வழங்கும் பிரிவில் மாதம் ரூபாய் முப்பது சம்பளத்தில் பணி கிடைத்துப் பணிப் பொறுப்பேற்றார். அவரது சொந்த ஊரில் இருந்து இவ்விடம் மிகத் தூரமாய் இருந்தது. இருப்பினும் அவர் மிகச் சில மாதங்களிலேயே இப்பணியை விடுத்து, ரூர்கே பொறியியல் கல்லூரியில் மேற்பார்வையாளர் பயிற்சி வகுப்பிற்காக விண்ணப்பித்துக் கொண்டு முதலாவதாகத் தேர்ச்சியும் பெற்றார். இவ்வாறு இவரது கல்வி ரூர்கேயில் ஆரம்பித்தது. தனது கல்வி தொடர்பான செலவுகளுக்காக அவர் தனது மனைவியின் நகைகளை விற்றார். 1917இல் தனது கல்வியை வெற்றிகரமாக முடித்த பின்னர் முதன் முதலில் கல்கத்தாவில் அவருக்கு வேலை கிடைத்தது.

1914ஆம் ஆண்டில் ஆரம்பித்த முதல் உலகப் போர் அப்போது உச்சக்கட்டத்தில் இருந்தது. வெளி உலகத் தொடர்பு கருதி குர்பக்ஷ்

சிங் போர் நிகழும் ஓரிடத்தில் பொறியியல் வல்லுநராகப் பணியாற்ற விண்ணப்பித்தார். அவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஈராக்கில் உள்ள 'பஸ்ரா' என்ற இடத்திற்கு அவர் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். சிலகாலம் 'பஸ்ரா'வில் இருந்த பின்னர் அவரை 'பாக்தாத்'துக்கு மாற்றினார்கள். தகுதி வாய்ந்த பயிற்சி மிக்க மேற்பார்வையாளர் ஒருவர் ஈரானுக்கு உடனடியாகத் தேவை எனப்பட்டதால் மிகவிரைவிலேயே அவர் 'கிர்மான்' என்ற இடத்தில் பணியில் அமர்த்தப்பட்டார். அதன்பின் கிர்மானிலிருந்து அவர் தலைமை இடத்திற்கு மாற்றப்பட்டார். 1918ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் நாள் போரின் முடிவு குறித்த செய்திகள் வந்தடைந்தன. இதற்கிடையே அமெரிக்காவில் உள்ள மிஷிகன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அமெரிக்கக் கிறஸ்தவ ஊழியக் குழுவைச் சார்ந்த ரெவரண்ட் ஸ்டீட் என்பவர் குர்பக்ஷ் சிங்குக்கு அறிமுகமாகி இருந்தார். குர்பக்ஷ் சிங் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஸ்டீட்மிஷிகன் பல்கலைக்கழகத்தில் குர்பக்ஷ் சிங் மாணவனாகச் சேருவதற்குப் பரிந்துரை செய்தார். அப்பல்கலைக்கழக அதிகாரிகள் மிகவும் இரங்கி அவரது வேண்டுதலை ஏற்றுக்கொண்டனர். குர்பக்ஷ் சிங்கின் பணிக்காலம் முடிந்ததனால் ஈரானிலிருந்து அவர் இந்தியா திரும்பினார். தான் மேற்படிப்புக்குச் செல்ல எண்ணியிருந்த இடமாகிய அமெரிக்காவுக்குச் செல்வதற்குத் தேவையான அளவு பணம் சேர்த்து வைத்திருந்தார்.

அமெரிக்காவைச் சென்று சேர்ந்தவுடனேயே அமெரிக்க மிஷிகன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரிக்ஸ் அவர்கள் குர்பக்ஷ் சிங்குக்குப் பகுதி நேரப் பணி ஒன்று கிடைக்குமாறு உதவி செய்தார். குர்பக்ஷ் சிங் மிகவும் கடுமையாக உழைத்தார். அதுமட்டுமன்றி வடிவாக்கக் கட்டுமானப் பொறியியல் துறையில் இளம் அறிவியல் பட்டம் பெறுவதற்காகப் பயின்றார். பின்னர் ஓஹியோவில் உள்ள யங்ஸ்டௌன் என்ற இடத்தில் உள்ள பொறியியல் நிலையத்தில் வேலை கிடைக்கப் பெற்றார்.

யங்ஸ்டௌன் நகரில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவருக்கு எதிர்பாராதவிதமாக நல்வாய்ப்பாக அமைந்தது. ஒருநாள் ஒரு திரையரங்கில் திரைப்படம் காணும்போது குர்பக்ஷ் சிங் தனது தலைப்பாகையுடன் அமர்ந்து பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டார். இந்நிகழ்ச்சி நடந்த பின்னர் இதனை

எதிர்க்குமுகமாக இந்நிகழ்ச்சி குறித்து உள்நாட்டுப் பத்திரி கையொன்றாகிய 'வின்டிகேட்டர்' என்ற பத்திரிகைக்கு 'உங்கள் வாசற்படியருகே ஒரு அயல்நாட்டவர்' என்ற கவர்ச்சியான தலைப்பில் கடிதம் ஒன்று எழுதினார். இக்கடிதம் கண்ட பலர் மிகவும் இரங்கி குர்பக்ஷ் சிங்குக்குப் பல கடிதங்கள் எழுதினர். திருமதி மக்கட்ரீ என்ற அம்மையார் எழுதியிருந்த கடிதமும் அவற்றுள் ஒன்று. அவ்வம்மையார் குர்பக்ஷ் சிங்கைத் தன் வீட்டுக்கு வரவேற்று எழுதியிருந்தார். இப்பெண்மணி இவரைப் பல நூல்களை மேலும் எழுதுமாறு தூண்டினார். இவரது தூண்டுதலின் பேரில் குர்பக்ஷ் சிங் பல ஆசிரியர்களின் படைப்புக்களைப் படித்தார். மேலும் சில கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள் முதலியவற்றை ஆங்கிலத்தில் எழுதினார். பின்னர் இவை பஞ்சாபி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இவர் யங்க்ஸ்டௌனைவிட்டு டெட்ரியோட்டுக்கு வந்து சேர்ந்தார். அதன்பின்னர் நயாகரா, வாஷிங்டன் மற்றும் பிற முக்கிய இடங்களை நேரில் பார்த்தார். அதன்பின்னர் லண்டன் செல்லும் ஒரு கப்பலில் ஏறி லண்டனுக்கு வந்தார். லண்டன் மக்களோடு நெருங்கிப் பழகி அவர்களைப் பற்றி அறிந்தார். மேலும் இந்தியா திரும்பும்முன் பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இத்தாலி, ஸ்விட்ஸர்லான்ட் மற்றும் சில அய்ரோப்பிய நாடுகளை நேரில் சென்று பார்த்தார்.

குர்பக்ஷ் சிங் சியால்காட்டுக்குத் திரும்பியபோது அகாலி இயக்கம் நடுக்கட்டத்தை அடைந்திருந்தது. இவரது உறவினரும் அகாலிதளத் தலைவருமாகிய கரக்சிங் சிறையில் இருந்தார். குர்பக்ஷ் சிங்குக்கு வேலை உடனடித் தேவையாக இருந்தது. வேலை காலியிருக்கும் நிறைய இடங்களுக்கு அவர் விண்ணப்பித்தார். சமுதாயத்தில் உயர் நிலையிலிருக்கும் பலரை இதன்பொருட்டுச் சந்தித்தார். அரும் பெரும் முயற்சிக்குப் பின்னர் அவருக்கு இரயில்வேயில் வேலை கிடைத்தது. டொஹிட் என்ற இடத்தில் இவர் பணி நியமனம் செய்யப்பட்டார். அங்கு இரண்டு வருடங்கள் பணியாற்றினார். காஷ்மீருக்கு இரண்டு மாதங்கள் விடுமுறையில் செல்ல அவர் திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது வடமேற்கு இரயில்வேயில் பணியாற்றுமாறு இவருக்குப் புது நியமனக் கடிதம் வந்தது. டொஹட்டிலிருந்து குயட்டாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். அதன்பின் சில காலம் கழித்து நௌஷெராவிற்கு இவர் பணி மாற்றப்பட்டார். அங்கு நான்கு வருடங்கள் பணியாற்றினார். அவரது

சுயசரிதத்தில் அவர் பின்வருமாறு எழுதுகிறார். ''இங்கு நான் கழித்த நான்கு வருடங்கள் என் வாழ்க்கையில் புரட்சிமிக்க வருடங்களாகும். பொறியியல் வல்லுநன் என்ற நிலையிலிருந்து நிலத் தொழிலாளனாகவும் நிலத் தொழிலாளன் என்ற நிலையிலிருந்து ஒரு எழுத்தாளனாகவும் ஆவதற்கான தீர்மானங்கள் இங்குதான் எடுக்கப்பட்டன.'' இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம் உச்சநிலையை அடைந்து கொண்டிருந்தது. இத்தகைய சூழலில் அரசுப் பணி மீது குர்பக்ஷ் சிங்குக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டது.

நௌஷெராவின் அருகில் உள்ள காபூல் நதிக்கரையில் உள்ள கிராமமாகிய சாபாக்கில் அகாலி பூலா சிங்கின் சபை ஒன்று உள்ளது. பல நூறு ஏக்கர் நிலங்கள் அதனோடு இணைக்கப்பட்டுள்ளன. நிலத்தை உழும் இயந்தரங்கள் பல அங்கு இயங்கிக் கொண்டிருப்பதைக் குர்பக்ஷ்ஷாகவனித்திருக்கிறார். எனவே அவர் தன் பணியிலிருந்து நீண்ட விடுப்பு ஒன்று பெற்று இந்நிலத்தில் கூட்டுப்பண்ணை அமைத்தல் குறித்துச் சோதனை செய்து பார்க்க விரும்பினார். அதன்படியே செய்தார். வேலை தொடங்கியது. ஆனால் இரண்டுமாத விடுமுறையின் முடிவில் அவர் அப்போது கட்டப்பட்டுக் கொண்டிருந்த சினியட் பாலம் தொடர்பான கட்டுமானத்தைப் பார்வையிடும் வகையில் வேலை மாற்றம் செய்யப்பட்டார். பாலம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு அவர் பஹவல்பூருக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டார். அப்பொழுது இருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக, இரயில்வே அதிகாரிகள் புதிதாகக் கட்டும் பணிகளைச் சிறிது நிறுத்தி வைக்க எண்ணினர். குர்பக்ஷ் சிங் ஏற்கனவே அகாலி பூலா சிங் சபையில் புதிய சோதனைக்காக அவரே செல்ல வேண்டும் என்று விரும்பியதால் குர்பக்ஷ் சிங்குக்கு அதிகாரிகளின் இவ்வெண்ணம் நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. ஆனால் மிக விரைவிலேயே அவர் இப்புது முயற்சியில் மிக மெதுவாக நடந்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தன் தவறான எண்ணத்தை மாற்றிக்கொண்டார்.

அயல்நாட்டு நண்பர் ஒருவர் குர்பக்ஷ் சிங்கை மாத இதழ் ஒன்று தொடங்குமாறு தூண்டினார். அதன் விளைவாக 'ப்ரீத் லாரி' (அன்புச் சங்கிலி) என்ற இதழ் தொடங்கப்பட்டது. 1933ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இதழ் வெளிவந்தது. முதலாவது ஆண்டில் அவ்விதழ் பெரும் பாராட்டுதல்களுடனும் மிகுந்த விருப்பத்துடனும் மக்களால் வரவேற்கப்பட்டது. ஆனால் குர்பக்ஷ் சிங் அவ்விதழில்

மதம் குறித்த தனது கருத்துக்களைக் கொள்கைகளாகத் துணிந்து எழுதியதால் இவ்விதழ் குறித்த பலவிமரிசனங்களைவிரைவிலேயே அவர் எதிர்கொள்ள வேண்டியவரானார். சில பேராசிரியர்களும், அறிஞர் பெருமக்களும் அவருக்கு ஆதரவாக முன்வந்தனர். ஆனால் குர்பக்ஷ்சிங் அகாலி பூலாசிங்சபை கொண்டிருந்த மதத் தொடர்புகள் காரணமாகச் சபையை விட்டு வெளியேறத் தீர்மானித்தார்.

குர்பக்ஷ் சிங் அகாலி பூலா சிங் சபையிலிருந்து வெளியேறி 1936ஆம் ஆண்டில் லாகூரில் உள்ள மாடல் டவுன் என்று அழைக்கப்பட்ட நகருக்குச் சென்றார். இங்கு அவர் 'சன்ஸார் ப்ரீத் மண்டல்' எண்ணத்தை எழுப்பினார். இச்சங்கத்தை ஆரம்பிக்கும் பொருட்டு முதலில் பதிவு செய்யப்பட்டது. பதிவாகிய பின் பலர் மாடல் நகரில் அவரோடு இச்சங்கத்தில் சேர்ந்தனர். அவர்களுள் பெரும்புகழ் பெற்ற பஞ்சாபிப் புதினஆசிரியர்நானக்சிங்கும் அவரது குடும்பத்தினரும் குறிப்பிடத்தக்கவர்கள். இச்சங்கத்தின் அலுவலகமும் இச்சங்கத்தினரின் இருப்பிடமும் நிறுவப் படுவதற்காக மாடல் நகரின் அண்மையில் உள்ள நகர்கள் பலவும் அலசி ஆராயப்பட்டன. இறுதியில் அம்ரிஸ்டர் மாவட்டத்தில் லோபொகே நகரின் அருகில் உள்ள ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டது. அவ்விடம் 1938ஆம் ஆண்டில், 'ப்ரீத் நகர்' (அன்பு நகரம்) என்று பெயரிடப்பட்டது. 1938ஆம் ஆண்டு ஜூன் மாதம் குர்பக்ஷ் சிங்கும் அவரது தோழர்களும் இப்புதிய இடத்தில் குடியேறினர்.

ப்ரீத் நகரில் அனைத்து இனத்திற்கும் பொதுவான ஒரு சமையலறை திறக்கப்பட்டது. சங்க நகரில் வசிப்பவர் அனைவரும் ஒரு குறிப்பிடத்தக்க ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு இதில் பணியாற்றினர். இப்புதுப் பரிசோதனை சிலரால் பாராட்டப்பட்டது. சிலரோ இதனை விமர்சித்தனர். இரண்டாம் ஆண்டு மாதிரிப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு 'இயக்கப் பள்ளி' என்று பெயரிடப்பட்டது. இந்த இலட்சிய நிறுவனம், நாடு பிரிக்கப்பட்ட ஆண்டாகிய 1947வரை இயங்கியது.

குர்பக்ஷ் சிங் தன்னுடைய கனவுகளை நனவாக்கப் பெரிதும் கடுமையாக உழைத்தாரெனினும் விரும்பத்தகாத சூழல்கள் அவரது பாதையில் தடையாய் நின்றன. நாட்டுப் பிரிவினையின் விளைவாக, ப்ரீத் நகர் நாட்டின் எல்லைக் கோட்டின் மிகவும் அருகில் அமைந்துவிட்டது. எனவே அங்குள்ள அமைதியற்ற சூழலின்

காரணமாகஎப்பணியும்மேலும்தொடரமுடியாமல்போயிற்று. 'ப்ரீத் லாரி' இதழை நடத்தாமல் மூடிவிடுவதைத் தவிர்க்க அவ்விதழின் அலுவலகத்தை வேறு ஏதாவது ஓரிடத்திற்குத் தற்காலிகமாக மாற்ற வேண்டி இருந்தது. குர்பக்ஷ் சிங்கின் மீது பெரிதும் மதிப்புக் கொண்டிருந்தவரும் குர்பக்ஷ் சிங்குக்கு முன்பே தெரிந்தவருமான, அப்போது டெல்லியில்துணைகமிஷனராகஇருந்தவருமானடாக்டர் எம்.எஸ்.இரந்தவா என்பவரின் உதவியால் டெல்லியில் குதுப்மினாருக்கு அருகில் ஒரு பெரிய இடவசதியுள்ள கட்டிடம் ஒன்று இரு வருடங்களுக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டது. குர்பக்ஷ் சிங் தனது குடும்பத்தினருடன் அங்கு குடியேறினார். அவரது அச்சகமும் அங்கேயே இடமாற்றம் செய்யப்பட்டது. நிலையில்லாத சூழல், மாற்றல், புது இடத்தில் அச்சகத்தை நிறுவுதல் முதலிய காரணங்களால் 'ப்ரீத் லாரி' இதழைப் பல மாதங்களுக்கு வெளியிட முடியவில்லை. குர்பக்ஷ் சிங் தனது சுயசரிதத்தின் மூன்றாம் தொகுதியில் பின்வருமாறு எழுதுகிறார். 'ப்ரீத் லாரி' பல மாதங்களுக்குப் பின்னர் வெளியிடப்பட்டது. எழுத்தாளனின் ஆன்மாவுக்கு உணவு போன்றது எழுத்து. எனது நண்பர்கள் எனது எதிர்பார்ப்புக்கெதிரான தோல்விச் சேற்றில் நான் மூழ்கிப் போகாதவாறு என்னைக் காப்பாற்றினாலும் கூட, இப்பொழுது பல மாதங்களாக நான் எந்த எழுத்துப் பணியையும் மேற்கொள்ளாததால் என் ஆன்மாவின் முந்தைய மகிழ்வான நிலை கனவாகிப் போய்விட்டது. எனக்குள் நம்பிக்கை உணர்வூட்ட விரும்பி, நவ்தேஜ் சீன சுதந்திரப் போராட்டம் குறித்த செய்திகளை எனக்கு வாசித்துக் காட்டிக்கொண்டிருந்தார். அமெரிக்கர்களுக்கு எதிராக சீனாக்காரர்கள் நிகழ்த்திய சுதந்திரப் போராட்ட வெற்றிகளும், அதற்கு உறுதுணையாக விளங்கிய சியாஸ்-கை-ஷேக் என்பவரும் என் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்திய காரணிகள். உலகின் மிகப் பெரிய நாடும், பழங்குடி மக்களைக் கொண்ட நாடும், 60 கோடி மக்களைக் கொண்ட நாடும் ஆகிய சீனா சுதந்திரம் அடையும். முதலாளித்துவத்துக்கெதிராகச் சமவுடைமை வெற்றி பெறும். சோவியத் ரஷ்யாவும், சீனாவும் இணைந்து சமவுடைமைப் பாதுகாப்புக் கோட்டையாக மாறும். உலகப் புரட்சிக்கு அடித்தளமாக அவை அமையும் என்பது தெளிவு. இவ்வெண்ணம் எனக்கு வலிமையைத் தந்தது. எனது துக்கத்தைக் குறைத்தது. 'ப்ரீத் லாரி'க்கு நான் மீண்டும் எழுத ஆரம்பித்தபோது என்னுள் ஒரு பெரிய மாற்றத்தை நான் உணர்ந்தேன்.''

1949ஆம் ஆண்டு அக்டோபரில் தன் குடும்பத்தாருடனும், அச்சகத்துடனும் ப்ரீத் நகருக்குத் திரும்புவதற்குத் திட்டமிட்டார். ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே ப்ரீத் நகருக்குக் குடும்பத்தையும் அச்சகத்தையும் மாற்றும் பணி முடிந்தது. இரண்டாம் உலகப் போரின்போது, அமெரிக்கர்களின் கருத்துக்களை எவ்விதத் தவறுமின்றி சரியாகப் புரிந்துகொண்டதனால் குர்பக்ஷ் சிங் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பாக எழுதத் தொடங்கினார். அதோடு சமாதான இயக்கத்திலும் சேர்ந்தார். சமாதான இயக்கம் அப்போது அந்நிய நாட்டார் ஆதிக்க அமைப்பினை எதிர்த்ததனால் மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றிருந்தது. குர்பக்ஷ் சிங் பஞ்சாப் சமாதான இயக்கத்திற்குத் தலைவராக 1950ஆம் ஆண்டு ஜூலை மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். அகில இந்திய சமாதானக் குழுவின் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் 1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். குர்பக்ஷ் சிங் தனது எழுத்துப் பணியின் மூலம் தனது தாய் மொழிக்குச் செய்த தொண்டினைப் பாராட்டி 1951ஆம் ஆண்டு பெப்ஸு அரசினால் கௌரவிக்கப் பட்டார். 1952ஆம் ஆண்டில் ஆசிய பஸிபிக் நாடுகளிடையேயான சமாதான மாநாடு பெய்ஜிங்கில் நடந்தது. அம் மாநாட்டில் குர்பக்ஷ் சிங் கலந்துகொண்டார். அதே வருடம் இறுதியில் அவர் வியன்னாவில் நடந்த சமாதானக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார். அப்பொழுது அவர் மாஸ்கோ உள்ளிட்ட பிற ஐரோப்பிய நாடுகளின் நகரங்களுக்கும் சென்று வந்தார். 1954ஆம் வருடம் இந்திய - சீன நட்புறவு அடிப்படையில் சீனா அறிஞர் குழு ஒன்றனை வரவேற்றபோது குர்பக்ஷ் சிங்கும் அக்குழுவில் ஒரு அறிஞராக அழைக்கப்பட்டிருந்தார். 1956ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆசிய எழுத்தாளர்கள் மாநாடு ஒன்று டெல்லியில் கூடியது. குர்பக்ஷ்சிங் அம்மாநாட்டில் பங்கு பெற்றார். 1957 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சோவியத் அறிஞர்கள் குழுவை குர்பக்ஷ்சிங் ப்ரீத் நகருக்கு வரவேற்றிருந்தார். ஆசிய, ஆப்பிரிக்க எழுத்தாளர்களின் இரண்டாம் மாநாடு சோவியத் உஸ்பெக்கிஸ்தான் நாட்டின் தலைநகரான தாஷ்கண்டில் நடந்தது. இந்திய அறிஞர் என்ற முறையில் குர்பக்ஷ்சிங் அம்மாநாட்டில் கலந்துகொண்டு அதனைப் பார்வையிட்டார். இம்மாநாட்டில் பல கலந்துரையாடல்கள் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசுவதாகவே அமைந்திருந்தன. இம் மாநாட்டிற்குப்பிறகு குர்பக்ஷ்சிங் சமர்கண்ட், ருமேனியா, ஹங்கேரி

ஆகிய நாடுகளுக்கு நேரில் சென்று தலைசிறந்த இலக்கிய அறிஞர் பெருமக்கள் பலரைச் சந்தித்தார்.

1970ஆம் ஆண்டு குர்பக்ஷ்சிங்கிற்கு 75 வயதானபோது அவரது வாழ்வின் பல்வேறு நிலைகளையும், வாழ்வின் பல்வேறு கோணங்களையும் பற்றிய கட்டுரைகள், நூல்கள் அடங்கிய அவரது நினைவு மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அதனைக் குர்பக்ஷ்சிங் பெற்றுக் கொண்டார். அவர் தொடர்ந்து இறுதிவரை எழுதிக் கொண்டே இருந்தார். அவரது இறுதி நூல் ஆகிய 'உருக்கான் டி ஜீரண்ட்' என்ற நாவல் 1973இல் வெளியானது. 'ப்ரீத் லாரி' இதழுடன் அவர் 'பால் ஸந்தேஷ்' என்ற குழந்தைகள் இதழையும் தொடங்கி நடத்தினார். அவரது வாழ்வின் இறுதிக்காலத்தில் அவரது உடல்நலம் குன்றியது. ஆனால் இறுதிவரை அவர் மனநலத்துடன் திகழ்ந்தார். 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு இரண்டாம் நாள் அவர் மாரடைப்பினால் அல்லலுற்றார். சண்டிகாருக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். இரண்டாம் முறையாக 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் நாள் மாரடைப்பு வந்து அதன் கொடிய தாக்குதலினால் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

அவரது இறப்பிற்குப் பின் அவரது மகன் நவ்தேஜ்சிங் 'ப்ரீத் லாரி' இதழை வெளியிட்டு அது தொடர்பானவற்றைக் கவனித்து வந்தார். 1981ஆம் ஆண்டு அவரும் இறந்த பின்னர் அவரது மகன் இதழ்கள் வெளியிடும் பணிகளைத் தொடர்ந்து சில காலங்கள் கவனித்து வந்தார். 'பால் ஸந்தேஷ்' என்ற இதழ் இன்றும் குர்பக்ஷ்சிங்கின் இளைய மகன் ஹிர்திபால் சிங் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. குர்பக்ஷ்சிங்கின் இரண்டு நூல்கள் தொடர்ந்து வெளியாயின. 'மேரி ஜீவன் கஹானி' என்ற நூல் 1978ஆம் ஆண்டு நவ்தேஜ் சிங் என்பவரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. 'சிதியன்ஜீதன்தேநான்' என்ற நூல் அதேஆண்டு டாக்டர் ஹர்பஜன் சிங் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

குர்பக்ஷ்சிங் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்திருந்தபோதிலும், பொறியியல் வல்லுநர், கூட்டுறவுப் பண்ணை விவசாயி, எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் அவர் ஆற்றிய பணிகளின் தனித் தன்மைகளை அவர் தனது சொந்த மாநிலமாகிய பஞ்சாப் மாநிலத்தில் விட்டுச் சென்றார் எனலாம்.

அவர் வறுமையற்ற, இல்லாமை நீங்கிய ஒரு வளமான நாட்டைத் தன் மனக்கண்களில் கண்டு களித்தார். அவரது பல கனவுகள் இன்னும் உணரப்படாமலேயே இருப்பினும் தன் கனவை உணர்த்துவதில் அவருக்கிருந்த விடாப்பிடியும், அவரது கூர்மையான அறிவும், அஞ்சாத குணநலனும், துன்பத்தைக் கண்டு தளராத மன தைரியமும் மிகவும் பாராட்டற்குரியன. அவர் நல்லவற்றையும் அழகியல்பையும் போதிப்பவராக விளங்கினார். அன்பு பற்றிய அவரது தத்துவம் தனித்துவம் வாய்ந்தது என்பதற்கு அவரது பல நூல்களே சான்றாவன.

குர்பக்ஷ் சிங்கின் மிக நெருங்கிய நண்பரும் குர்பக்ஷ் சிங் மீது மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தவருமான டாக்டர் மொஹிந்தர்சிங் இரந்தவா என்பவர் குர்பக்ஷ் சிங் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார். ''குர்பக்ஷ் சிங்கின் பல்வேறு கனவுகள் நிறைவேற்றப்படவில்லை. ஆனால், அவரது நிறைவேற்றப்படாத கனவுகள் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு ஒரு புது உத்வேகத்தைக் கொடுத்திருக்கின்றன. அவர் பஞ்சாபி மொழியில் உரை எழுதும் போக்கில் தனி நடையை உருவாக்கினார். அது எளிமையானதாகவும் விளங்கிக் கொள்ளத் தக்கதாகவும் இருந்தது. பஞ்சாபி மக்களை அவர் அவர்களின் குறுகிய நோக்கு என்ற கொள்கை வட்டத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றபோது அவர் தனது முறைப்பட்ட அறிவின் பரப்பை அவர்களுக்கு வெளிக்காட்டினார். குர்பக்ஷ் சிங்கின் முத்திரைச் சுவடுகள் என்றென்றும் பஞ்சாபி மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் படிந்திருக்கும்.''

3. பஞ்சாபி உரைநடைத் தொண்டு

குர்பக்ஷ்சிங் நவீன பஞ்சாபி உரைநடையில் தனக்கெனத் தனிப் பாணியை உருவாக்கிய மிகப் பெரிய மேதையாகக் கருதப்படுகிறார். பாய்வீர் சிங், முதல்வர் தேஜா சிங் ஆகியோர் பஞ்சாபி உரை நடையினை அதன் மரபுவழிப்பட்ட வடிவத்திலேயே தங்களது தத்துவார்த்தமுடையதும், அறிவுபூர்வமானதும், பகுத்தறிவு பூர்வமானதுமான கருத்துக்களை எளிய முறையில் பரிமாறிக் கொள்ளப் பயன்படுத்தினர் என்றாலும், குர்பக்ஷ்சிங் அன்றன்று முன்னிற்கும் விஷயங்களையும் பொதுமக்களின் ஆர்வத்தைத் தூண்டும் பிரச்சினைகளையும் எழுதிப் பொதுமக்களின் உள்ளத்தைத் தொட்டார். அவர் ஒரு சீர்திருத்தவாதியின் புதிய ஆர்வத்துடன் எழுத முற்பட்டு தனது வாசகர்களைப் புதிய சிந்தனையுலகினைக் காணும்படி விழித்தெழச் செய்தார்.

பஞ்சாபி உரைநடைத் துறையில் குர்பக்ஷ்சிங்கின் பணியாகப் பிறர் வரலாறு, தன் வரலாறு, பயண உரைகள் முதலியன அமைந்தன என்றாலும் அவரது சிறப்புத் துறையாக விளங்கிய பணி கட்டுரைகள் எழுதுதலே ஆகும். அவரது எண்ணற்ற கட்டுரைத் தொகுப்புக்களில் 'பந்தி சோர் குருநானக்,' 'ஸாராப் பக்தி நாயக்' ஆகியவை முறையே குருநானக், குரு கோபிந்த் சிங் ஆகியோரது வாழ்க்கை, பணிகள் முதலியவை பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கிய சரிதங்களாகத் திகழ்கின்றன. 'மேரி ஜீவன் கஹானி' என்ற நூல் குர்பக்ஷ்சிங்கின் சுயசரிதமாகும். இந்நூல் மூன்று தொகுப்புக்களில் அமைந்து அவரது 1895 முதல் 1960 வரையுள்ள வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுகிறது.

அவரது நூல்களின் தலைப்புக்களைச் சிறிது கூர்ந்து கவனித்தால் அவரது எழுதும் போக்கு நன்கு விளங்கும். 'ப்ரீத்' (அன்பு), 'ரோஜனா ஜிந்தகி' (அன்றாட வாழ்க்கை), 'பரம் மனுக்' (உயர்ந்த மனிதன்), 'ப்ரன் புஸ்தக்' (கொள்கைகளின் நூல்), 'ஸதி ஹோனி' (நம் விதி), 'அபுல்யாதன்' (மறக்க முடியாத நினைவுகள்), 'ப்ரஸன்லம்மி உம்மர்' (ஒரு மகிழ்ச்சியான நீண்ட வாழ்க்கை), 'ஸுப்னே' (கனவுகள்), 'ஸ்வாய்-புரந்தர்' (சுய-ஒழுங்கு), 'சங்கேரி துனியா' (நல்லதொரு உலகம்), 'ஸதே வாரிஸ்' (நமது வாரிசுகள்), 'நவான் ஷிவலா' (ஒரு

புது கோவில்), 'குவாத்ரதி மஜாப்' (இயற்கை மதம்), 'பக்தி ஜிவான் சங்கியாரி' (வாழ்வின் ஒரு உயரொளி), 'நவின் தக்ரி துனியா' (ஒரு புதிய வலிய உலகம்), 'குஷல் ஜிவான்' (ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கை), 'தீஜன்' (வாழ்த்துக்கள்), 'ஜிந்கி தி ராஸ்' (வாழ்க்கை நாடகம்), 'நாயக்' (தலைவன்), 'நவியன் தாக்டீரன்' (புதிய விதிகள்) முதலியன அவரது நூற் பெயர்கள். குர்பக்ஷ்சிங் தனது வாழ்வில் இந்தியத் துணைக்கண்டத்தின் வெவ்வேறு சாதி, மத விருப்பு வெறுப்புக்களையும், தாங்கள் இந்நாட்டில் நிலைத்து நிற்கும் சுயலாபத்திற்காக பிரிட்டிஷார் அவற்றைப் பகிரங்கப் படுத்தியதையும் நேரில் கண்கூடாகக் கண்டார். பஞ்சாபில் உள்ள இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகிய மூன்று மதத்தைச் சார்ந்த இனத்தவர்கள் அனைவரும் தங்களது பழைய பெருமையைப் பிரச்சாரம் செய்கிறோம் என்ற பெயரில் உண்மையிலேயே தன்னுடன் வாழும் நாட்டு மக்களின் உணர்வில் இன வெறுப்பை ஏற்றிக் கொண்டிருந்தனர். தன்னுடைய முதன்முதல் நூலாகிய 'ப்ரீத் மராக்' (அன்புப் பாதை) என்ற நூலில் குர்பக்ஷ் சிங் பின்வருமாறு எழுதுகிறார். ''எல்லா மதங்களும் தங்கள் கொள்கைகளைப் பரப்புவதிலேயே அதிக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றன.

எல்லாமத போதகர்களும் தங்கள் மதங்களைப் பற்றி பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற பல நிகழ்ச்சிகளின்போதும் செய்தித்தாள்கள், நூல்கள், மாநாடுகள் போன்றவற்றின்வாயிலாகவும் பிரச்சாரம் செய்கிறார்கள்; ஆனால் சண்டைகள், பிறரைத் துன்புறுத்தும் ஆசைகள், வெறுப்புகள், முரண்பாடுகள், பிறரை அவமதித்தல், அடிமைத்தனம் போன்ற செயல்களும் குணங்களும் மதப் பிரச்சாரங்களுக்கு இணையான அளவு வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இதன் மூலம் அறிஞர்கள், பெருமக்கள் விரைவான வேகத்தில் இன்று ஓடும் இந்த மதக்குதிரை குறுகிய காலத்திற்குள்ளேயே ஏதாவது அதலபாதாளத்தில் விழுந்துவிடும் என்று உணர்ந்து கொண்டுள்ளனர்''. அப்போது இந்தியா ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலம். மக்களின் அடிமைத்தன மனநிலை அவர்களது வாழ்க்கை முறையை வெகுவாகப் பாதித்திருந்தது. மக்களை ஒன்றிணைக்கும் சக்தியான அன்பு என்பது மக்களிடம் இல்லாமல் இருந்தது. அமெரிக்காவில் பல வருடங்கள் குர்பக்ஷ் சிங் வாழ்ந்ததால் அங்கு மக்களிடம் நேரில் கண்டும் அனுபவித்திருந்தாராதலால் அவ்வாழ்க்கை முறையை

மெல்ல மெல்ல இந்தியர்களிடம் தன் எழுத்துக்களின் மூலம் அறிமுகப்படுத்த விரும்பினார். ஆணும் பெண்ணும் 'காதல்' என்ற உணர்வின்றி நட்புடன் பழகும் முறையைக் குறிப்பாக அவர் அதிகமாக மக்களிடையே பரப்பினார். இத்தகைய நட்புமுறை இந்நூலில் தனியே பின்வரும் இயல் ஒன்றில் பேசப்படுகிறது.

குர்பக்ஷ் சிங் அமெரிக்க வாழ்க்கைமுறை தன்னைக் கவர்ந்தமையை அதனைப் பாராட்டுமுகத்தான் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''1919ஆம் ஆண்டில் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்த பின்னர் நான் அமெரிக்காவின் விருந்தோம்பும் நிலையம் ஒன்றை அடைந்தேன். நான் அப்போது எவ்வளவு தன்னம்பிக்கை அற்றவனாக இருந்தேன் என்பது இப்பொழுதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. எனது சொந்த நாட்டில் இருக்கும் அன்னிய அரசாங்கம் எனக்குள் தாழ்ந்த மனப்பான்மையைத் தோற்றுவித்திருந்தது. ஆனால் இந்நாட்டில் எண்ணற்ற நூலகங்கள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், விரிவுரைக் கூடங்கள் என்னுள் ஒரு புதிய நோக்கையும், தைரியத்தையும், புதிதாகச் சிந்திக்கும் முறையையும் தோற்றுவித்திருந்தன''. 1924ஆம் ஆண்டு அவர் அமெரிக்காவை விட்டு வந்தபோது அமெரிக்க மக்களின் மீது ஒரு மாறுபட்ட அன்புப் பெருக்கு அவர் உள்ளத்தில் ஏற்பட்டது. மாறாக தன் சொந்த நாடு அந்நிய நாடாக அவருக்குத் தோன்றியது. அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தபோது அமெரிக்கர்களின் உயர் பண்பையே ஒவ்வொருவரிடமும் பேசிக் கொண்டிருந்தார். இது மட்டுமல்ல; ஒவ்வொரு 'ப்ரீத் லாரி' இதழும் அமெரிக்கவாழ்க்கைமுறையின்துதிபாடும் இதழாகவே அமைந்தது. சிலர் இப் பாராட்டுரை மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்றும் அவருக்கு இருக்கும் மேல்நாட்டுத் தாக்கத்தின் விளைவே இது என்றும் கூறினர். அவர்கள் அமெரிக்காவில் உள்ள நீக்ரோ இனத்தவரின் வருந்தத்தக்க நிலையை நினைவூட்டி, அவர்கள் மீது நிலவும் நிற, இன வெறுப்புக்களையும் வேற்றுமைகளையும் கூறி அவர்கவனத்தை ஈர்த்தனர். சிகாகோவிலும், நியூயார்க்கிலும் நிலவும் வறுமையையும் மக்களது ஒழுக்க நெறிகளுக்கு முரண்பட்ட நடத்தையையும் கூடகுறிப்பிட்டனர். அவை அனைத்திற்கும் அவரது பதில், ''நீங்கள்கூறும் அனைத்தும் சரியே; ஆனால் நான்கூறுவனவும் தவறல்ல, சரியானவையே. என் மனம் அமெரிக்க நீக்ரோக்களுக்கு இழைக்கப்படும் வன்முறைக் கொடுமைகளை நினைத்து வருந்துகிறது; ஆனால் அவற்றை நான் என் கவனத்தில்

கொள்ளவில்லை. ஏனெனில் என் சொந்த நாட்டில் 9 கோடி மக்கள் தீண்டாமை என்ற பெயரில் நீக்ரோக்களைவிடக் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். அங்கு நான் சில நீக்ரோக்கள் உயர்நீதிமன்ற நீதிபதி பதவியில் அமர்த்தப்படுவதைக்கண்டேன். ஆனால் என் சொந்த நாட்டில் தீண்டப்படாதவர்கள் சாரமற்ற குப்பையைப்போல ஒதுக்கப்படுகின்றனர். உயர் சாதியினர் என்று கூறப்படும் மக்கள்நடக்கும்அதேசாலையில்நடக்கவும்கூட அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. நியூயார்க் நகரத்தில் வறுமையின் கொடுமைக் காட்சியை நான் நேரிலேயே கண்டேன் என்பதை ஒத்துக்கொள்கின்றேன். நான் அவற்றைப் பெரிதும் கண்டுகொள்ளவே இல்லை. ஏனெனில் நான் அதைவிடக் கொடுமையானவறுமையை என்சொந்த நாட்டில்கண்டிருக்கிறேன். மேலும் அந்நேரத்தில் நான் வறுமை என்பதைத் தீர்க்கமுடியாத ஒன்றாகவே கருதினேன். அதுவரை நான் 'உலகம் தழுவிய வளம்' பற்றிய தத்துவத்தை விளங்கிக் கொள்ளவுமில்லை. அமெரிக்க ஒட்டுமொத்த வாழ்க்கை முறையின் ஊடே செல்லும் வெளிப்படையாகத் தெரியும் மனித இணைப்புச் சக்தி எனக்கு என் இதயத்தில் இயல்பான ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது. பரந்துபட்ட அளவில் வாழ்க்கையைக் குறிப்பிட்ட ஒரு இலட்சியத்துக்காக அர்ப்பணித்தல், அது குறித்துத் தயார்ப் படுத்திக்கொண்டு செயல்படுதல் முதலியவற்றை நான்அங்கேகண்கூடாகக்கண்டேன். அது எனது பாடல்களில் பல் வருடங்களுக்குப் பாடுபொருளாக அமைந்தது'' என்பதாகவே இருந்தது.

குர்பக்ஷ் சிங் எங்கும் எதிலும் அன்பையும் மகிழ்ச்சியையுமே காணவிரும்பினார். இதுமனதில்கொண்டுள்ளஉயர்ந்தகொள்கைகள் நடைமுறையில் சாத்தியமானால்தான் அமைய முடியும். இவரது 'ஸன்வின் பத்ரி ஸிந்தகி' (தடுமாற்றமில்லாத சமநிலை வாழ்க்கை), 'சுகவின் சுத்ரி ஸிந்தகி' (வசதியான, சீர்திருந்திய வாழ்க்கை) என்ற இரண்டு நூல்களும் இக்கருத்து பற்றிப் பேசுவனவே. இவ்விரண்டு நூல்களுள் முதல் நூலின் கருத்துக்கள் மகிழ்ச்சி, அன்பு, முறையான சமுதாயம், வாழ்க்கைக் கலை, பேச்சுக்கலை, வெற்றி, இறப்பு முதலியன. குர்பக்ஷ் சிங் மகிழ்ச்சியை அடைதலே வாழ்வின் தலையாய குறிக்கோள் என்பதையே வலியுறுத்தினார். அவர் ''அதிருப்தி இல்லாமலும் எவரையும் புண்படுத்தாமலும் மகிழ்ச்சியாக இருத்தல் என்பதையே தலையாய குறிக்கோளாகக்

கொண்டதாகவும், எவரையும் அச்சுறுத்தும் ஆசை இல்லாததாகவும், எவரையும் ஆள்தல் என்பதில் ஆசை இல்லாமலும், இருக்கும் வாழ்வே மிக வெற்றியுடையதாகவும் தூய்மையுடையதாகவும் எனக்குத் தோன்றுகிறது; மக்கள் அப்படி வாழ்ந்தால் யாரும் யாரிடத்தும் நியாயம் கேட்கும் அவசரம் இருக்காது. யாருக்காவது நாம் பயன்பட வேண்டும் என்ற ஆசை கொண்டவர்களாகவும் வாழ்வின் ஒவ்வொரு சூழலின் அதிர்விலும் அன்பே உயிர்நாடியாகவும், அன்பான பேச்சினாலும் ஆறுதலாலும் குணப்படுத்துதலும் புன்சிரிப்பிலும், கண்களிலும் தெய்வீக அருளைக் காட்டுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார். குர்பக்ஷ் சிங்கைப் பொறுத்தவரை எல்லாம் பெற்ற ஒரு சமுதாயம் என்பது பொருட்களின் அடிப்டையில் அல்லாமல் மனிதாபிமானத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும். அத்தகைய சமுதாயத்தில் மக்கள் வெறுப்பு என்பதை முற்றிலும் நீக்கிவிடுவர்.

இரக்கம், ஏழைகளுக்கு உதவி செய்தல், பாராட்டு முதலியவையே மனித இயல்பினை அலங்கரிப்பவைகளாகக் கருதப்படும். வாழ்க்கையின் முக்கிய அங்கங்கள் திருமணம், குடும்பம், அண்டை அயலார், அன்பு, மதம், இறப்பு, துன்பம், இன்பம் முதலியன. மனித மகிழ்ச்சிக்கு அவையே முக்கிய ஆதாரங்கள். சுய விமர்சனம், கொள்கை அடிப்படையில் ஒற்றுமை, சுய கட்டுப்பாடு, நன்னடத்தை முதலியனவே வெற்றிக்கு வழிவகுக்கும் அடிப்படைக் காரணங்கள். சமமான வாழ்வுக்கு அடிப்படையான கூறுகளாக பொருளாதார, சமூக, மன, அற, இறை மேம்பாடுகளைக்குறிப்பிடுகிறார். இவ்வைந்துகூறுகள்தொடர்பாகச் சமநிலை இல்லையெனில், வாழ்க்கை என்பது மகிழ்ச்சியான அனுபவம் உடையதாக அமையாது. குர்பக்ஷ் சிங் இறப்பு பற்றிக் குறிப்பிடும் போது, எவனொருவன் இறப்பு இயற்கை என்பதைப் புரிந்துகொள்ளவில்லையோ, அவன் வாழ்வின் மகத்துவத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்பதே பொருள். மரணம் என்பதை வாழ்வின் முடிவாகக் கருதும் மக்கள் மகிழ்ச்சியான வாழ்வு நடத்தமுடியாது. அவர்கள் மரணம் குறித்து பயந்து அதைப் பற்றிச் சிந்திப்பதை அறவே விட்டுவிடுகிறார்கள். எவனொருவனுக்குத்தன் வாழ்வின்வளம் ஏன்வறண்டு போகிறது என்று தெரியவில்லையோ, அவனுக்கு எப்பொழுது, ஏன் மேகங்கள் மழைவடிவில் இறங்கி வருகின்றன என்பதுவும் தெரியவில்லை. தன் வாழ்க்கை வளம்

வறண்டு போய்விட்டது என்பதற்கு எவன் வருந்துகிறானோ அவனுக்குத் தன் தலைக்கு மேலே ஓடும் கறுத்த மேகங்களிடையே நிர்மலமான வெள்ளை மேகம் தெரியும் அதிசயத்தையும் தெரிந்துகொள்ள முடிவதில்லை'' என்று கூறுகிறார்.

'சுகவின் சுத்ரி சிந்தகி' என்ற தனது நூலில் குர்பக்ஷ் சிங் வாழ்வினை இருபது உறுப்புக்கள் கொண்ட கூட்டுத் தொகுதியாகக் கருதுகிறார். அவ்வுறுப்புக்கள் இறைவன், மனிதன், வழிபாடு, சமயம், பிறப்பிற்கு முந்திய வாழ்க்கை, இறப்பிற்குப்பிந்திய வாழ்க்கை, ஊழ்வினை, சக்தியின் வடிவம், சத்தியம், அன்பு, காதல் உணர்வு, மகிழ்ச்சி, அஹிம்சை, சுதந்திரம், மரபு, சொத்து, குடும்பம், நாட்டுப்பற்று, நிர்வாகம், இலட்சிய வாழ்க்கை முதலியன. இறைவனும் இவ்வுலகமும் ஆன்மாவும் உடம்பும்போல எனலாம். உடம்பும் ஆன்மாவும் இறைவனின் இரு சிறு பகுதிகள். பிறப்பிற்கு முன் எந்தவித மனித ஆளுமையும் இல்லை. இறப்பிற்குப் பின்னும் எந்தவித மனித ஆளுமையும் இருக்கப் போவதில்லை. நம்முடைய பாடுகள் நமது ஊழ்வினை அல்ல; நாமே நம் விதியை நிர்ணயிக்கிறோம். சமயம் என்பது உலகத்தோடு ஒன்றுபடும் உணர்வே; இறைவன் எந்தவித வழிபாட்டையும் நம்மிடமிருந்து கட்டாயமாகக் கேட்கவில்லை. எந்த மனித உருவமும் இறைவனின் மகனோ, சகோதரனோ, நண்பனோ அல்ல. உலகம் தழுவிய ஒற்றுமையுணர்வே அன்பு ஆகும். அதனால்தான் அன்பே கடவுள் எனப்படுகிறது. காதல் உணர்வு எல்லா இடத்திலும் பரந்துபட்டு இருப்பதும் வாழ்வின் அடிப்படைத் தேவையுமாகும். உலகம் படைக்கப்பட்டிருப்பதும்கூட இத்தேவையின்அடிப்படையிலேயே ஆகும். மனித உலகின் பல்வேறு பாடுகளும் துன்பங்களும் இதனோடு தொடர்புடையனவாக உள்ளன. மகிழ்ச்சி என்பது உண்மை பேசுதல், உடல்நலத்துடன் இருத்தல், அமைதியாய் வாழ்தல், மனிதர்களோடு நல்லுறவு கொள்ளல் ஆகிய பல்வேறு நிலைகளோடு தொடர்புடையது ஆகும். மகிழ்ச்சி தனித்து இயங்க முடியாத ஒன்று. அது மற்றவற்றோடு தொடர்புடையதாகத் தன்னை வெளிப்படுத்துகிறது. பூரண மகிழ்ச்சி என்பது உலகில் உள்ள அனைத்துப்பொருட்கள், ஜீவராசிகளோடு ஒற்றுமையாக இருத்தலை உள்ளடக்கியது. ஒரு சீர்திருந்திய வாழ்வின் இலட்சியம் அஹிம்சை ஆகும். ஒரு கொடூரமான செயல் நிகழும்போது அதனை எதிர்க்காமல் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு கொடூரமான செயலைச் செய்வதற்குச்

சமமானது. சமூக, பொருளாதார, அரசியல் ஆகிய மூன்றுவகைச் சுதந்திரங்கள் உண்டு. எல்லா நலனும் பெற்ற நல்லதொரு சமுதாயத்தில் யாரும் ஏமாற்றுதல், நேர்மையின்மை, அநீதி, பொய், ஒழுங்கின்மை, பித்தலாட்டம், இலஞ்சம், மற்றவர்களின் மன நம்பிக்கைகளைப் புண்படுத்துதல், சித்திரவதை செய்தல் ஆகிய குணங்களைக் கொண்டு விளங்க அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் குடிமக்கள் இயல்பாக இருத்தல், அன்பு செலுத்துதல், நட்புடன் நண்பர்களை உருவாக்கிக் கொள்ளல், தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தல், தம் எண்ணங்களைப் பரப்புதல் முதலிய குணங்கள் உடையவர்களாக விளங்க முடியும். ஒருவர் பொருளாதாரச் சுதந்திரம் உடையவராய் இருந்தால்தான் சுதந்திரம் உடையவராக ஆக முடியும். அரசியல் சுதந்திரம் இல்லையெனில் பொருளாதாரச் சுதந்திரத்தினை அடை முடியாது. பழக்கவழக்கங்கள், உரிமைகள், விழாக்கள் முதலியன தேவையற்ற எதிர்ப்பார்ப்புக்களிலிருந்து நம்மைத் தவிர்க்கவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் நமக்குச் சுதந்திரம் தருவதற்குப் பதிலாக நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் உரிமைகள் அழிக்கப்பட வேண்டும். சொத்துரிமை என்ற அமைப்பு தன் பயன்பாட்டை இழந்து விட்டது. எந்தக் குழந்தைகளுக்கும் சொத்தை வைத்துவிட்டுப் போகலாகாது. ஏனெனில் நல்ல இயல்புடைய குழந்தை கூட இத்ததைய அமைப்புக்களினால் அழிக்கப்பட்டு விடுகின்றன. குடும்பத்தில் தந்தை தன் குழந்தைகளுக்குத் தன்னை ஒரு முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக அவர்களுக்கு வாய்ப்புக்களையும் புது நோக்கங்களையும் உருவாக்க வழிவகை செய்ய வேண்டும். தன் பெற்றோரைப் போலவே சற்றும் மாறுபடாத விதிவசப்பட்ட குழந்தை வெற்றிகரமில்லாத சோதனையே ஆகும். தனது சொந்தத் தாய்நாட்டை நேசிக்கும் சமுதாயமே நாகரிகமடைந்த ஒன்றாகக் கருதப்பட முடியும். நல்லதொரு நிர்வாகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் உழைப்பதற்கும் அதன் வாயிலாக வரும் வருவாயை அனுபவிப்பதற்கும் உரிமையுடையவன் ஆவான். நல்லதொரு அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் அனைவரும் பொதுமக்களின் சேவகர்கள் ஆவார்கள். சமுதாயத்தின் அங்கங்களாகிய மக்கள் நல்ல உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டிலங்க வேண்டும்.

குர்பக்ஷ் சிங் தனது 'சன்வின் பத்ரி ஸிந்தகி' என்ற நூலில் வாழ்வின் பல்வேறு கோணங்களைப் பற்றி ஆராய்ந்திருக்கிறார்.

அவரைப் பொறுத்தவரை வாழ்வு என்பது துயரங்களின் இருப்பிடம் அன்று. சீர்திருந்திய வாழ்வே மகிழ்ச்சியான வாழ்வு ஆகும். நல்லதொரு சீர்திருந்திய, இலட்சிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குரிய வாழ்க்கைத் தன்மைகள் பலவற்றை வரையறுத்து அவை பற்றித் தனது 'ப்ரான் புஸ்தக்' என்ற நூலில் விவாதித்திருக்கிறார். இந்நூல் நல்ல ஆளுமையை வளர்த்துக்கொள்ள விரும்பும் ஒருவர் நடைமுறை வாழ்க்கையில் தன் கையேடாக வைத்துக் கொள்ளக்கூடிய பயனுடைய நூல் ஆகும்.

குர்பக்ஷ் சிங் தனது 'மனோகர் ஷக்ஸியத்' (கவர்ச்சியான ஆளுமை), 'ஸ்வப்-புரந்த டி லகன்' (சுய-ஒழுங்கு குறித்த விருப்பம்) என்ற நூல்களில் வாழ்வின் வெவ்வேறு பிரச்சினைகள் பற்றி மட்டுமன்றி நல்ல ஆளுமையை வளர்த்துக்கொள்ளல் பற்றியும் ஆராய்ந்திருக்கிறார். 'ஸ்வய்-புரந்தடிலகன்' என்ற அவரது இரண்டாம் நூல், கருணை மிகுந்த நல்வாழ்வு, சுய ஒழுங்கு, பணியைத் தேர்வு செய்தல், வாழ்க்கைக் கலை, நேரத்தின் மதிப்பு, தூய்மை, போலி வேஷம், சுய கருத்து, இலட்சியவாதம், தான் என்ற உணர்வைக் குறைத்தல் அல்லது கூட்டுதல், எளிமை, சமுதாய அநீதி, ஆழ்ந்து தியானித்தல், ஒழுங்கு, நேர்மையின்மை, நண்பர்கள், சுய உதவி, சுய கட்டுப்பாடு முதலியவை பற்றி விளக்குகிறது. சுய-ஒழுங்கு பற்றி எழுதும்போது ஆசிரியர், ''சுய ஒழுங்கு ஏற்படுத்திக் கொள்ளப் பெரிதும் ஏங்கும் ஒருவர், புகழுக்கும், செல்வத்திற்கும் அதிகமதிப்புக் கொடுக்கமாட்டார். மக்கள் புகழையும் செல்வத்தையும் ஒழுங்கின் அறிகுறிகளாக எண்ணுவதால்தான் அவை பெரிதும் விரும்பப்படுகின்றன. சாதாரண மக்கள் புகழும் செல்வமும் அடைந்த மக்களை ஒழுங்குடையவர்களாகவும், மரியாதைக் குரியவர்களாகவும் கருதுகின்றனர். இந்தத் தவறானகருத்துருவாக்கத் தின் அடிப்படையிலேயே அவர்கள் புகழையும் செல்வத்தையும் வழிபடுகிறவர்களாக ஆகிவிடுகின்றனர். உண்மையில் மனிதன் ஒழுங்கினை அடையவே பெரிதும் ஆர்வமுடையவனாய் இருக்கிறான். ஆனால் அவனது பெரு விருப்பம் கைகூடி வரும் வேளையில், செல்வம் அவன் பார்வையில் மதிப்பிழந்ததாகக் கருதப்பட்டாலும் புகழ் மீது ஆர்வம் ஏற்பட்டு அதுவே பெருந்தடையாக ஆகிவிடுகிறது. நலம் மிகுந்த உடல், விழிப்புடைய அறிவு, அடிப்படை மாற்றத்தை விரும்பும் பரந்த எண்ணம், இறை அறிவு, உலக ஆசைகள், ஆசைகளின் மீது கட்டுப்பாடு ஆகியனவே

ஒரு கவர்ச்சியான ஆளுமையைச் சிறப்பிப்பன. அச்சமில்லாததும் தன்னலமில்லாததும் உலகில் இருக்கக்கூடியதும் கவர்ச்சியானதுமான ஆளுமைக்கு நிகராக வேறு எந்த வரப்பிரசாதம் ஒப்பிடப்படமுடியும்? மனிதனே தொடர்ந்து எடுக்கும் சுய முயற்சிகள் இல்லாமல் எப்படி இத்தன்மைகளை அடைய முடியும்? ஒரு குழுவின் அங்கத்தினராக இருப்பதனாலோ அல்லது ஒரு சுதந்திர பொருளாதாரவளமுடைய நாட்டின் அங்கத்தினனாக இருப்பதாலோ அங்கு வாழ்வதாலோ இவற்றை அடைய முடியாது'' என்று குறிப்பிடுகின்றார்.

இலட்சிய உலகத்தை உருவாக்குதல் பற்றிய குர்பக்ஷ் சிங்கின் பார்வைகளும், தீர்க்கதரிசனங்களும் அவரது 'இக் துனியா டி தெரான் சுப்னே' (ஒரு உலகம் பற்றிய பதின்மூன்று கனவுகள்) என்ற நூலில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு கனவும் அவரது வாழ்வின் ஒவ்வொரு வருடத்தைக் குறிக்கின்றது. அவர் எல்லா நலனும் பொருந்திய உலகம் பற்றியும், நல்லவிதமாக வாழும் முறை பற்றியும் பதின்மூன்று வருடங்கள் எழுதிக் கொண்டிருந்தார். அவர் தனது கனவுகளில் பல்வேறு பொருள் குறித்த தனது எண்ணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். ஒவ்வொரு வருடம் துவங்கும்போதும் புதுவருடச்செய்தியாக அவர் இலட்சியவாதம், தன்னம்பிக்கை, புதிய எதிர் நோக்குகள், முதலியன அடங்கிய செய்திகளைத் தந்தார். சான்றாக 1938ஆம் ஆண்டில் அவர் தன் நாட்டு மக்களை ஒரு புதிய தீர்க்கதரிசனம், புதிய அன்பு, புதிய ஆசைகள், புதிய கருத்துக்களின் மூலம் ஈர்த்தார். 1942ஆம் ஆண்டில் அவர் சிறந்த ஆளுமை, சிறந்த கிராமம், சிறந்த இந்தியா, சிறந்த மனித இனம் இவை குறித்துப் புதிய வேகம் படைத்த கருத்துக்களைத் தெரிவித்தார். 1944ஆம் ஆண்டில் வருடத் துவக்கமாம் புதுவருடத்தில் அவர் புதிய பொற்காலம் குறித்துக்கற்பனைசெய்தார். அவ்வுலகம் முழுத்தீவிரம், முழு வாழ்வு குறித்த விருப்பம், வாழ்தலில் பெருமை, மகிழ்ச்சி, சுதந்திரம், அச்சமின்மை பற்றிய குர்பக்ஷ் சிங்கின் கனவுகளாய் அமைந்தன.

குர்பக்ஷ் சிங்கின் இயற்கை மதம் பற்றிய நோக்குகள் அவரது 'குவாத்நதி மஸாப்' என்ற அவரது நூலில் காணப்படுகின்றன. அவரது கருத்துப்படி இயற்கை மதம், என்பது தனது சாதி, நம்பிக்கைகள் முதலியன பற்றிய வேறுபாடு இல்லாமல் யாரும் தழுவக்கூடிய ஒன்று. அம்மதத்திற்கென்று சட்டங்களடங்கிய எந்தப் புனித நூலுமோ எந்தத் தீர்க்கதரிசியுமோ அல்லது எந்த அவதாரமோ

இல்லை. அம்மதம் எல்லா மத வேதங்களுக்கும் அப்பூாற்பட்ட ஒரு இயல்பான உண்மை ஆகும். எவனொருவன் ஆராக்கியமாகவும், அறிவுள்ளவனாகவும் உலகில் தற்போது நிலைத்து நிற்கும் ஒட்டுமொத்த மகிழ்ச்சியோடு முரண்படாத குடும்ப மகிழ்ச்சியைக் கொண்டவனாகவும் இருக்கிறானோ அவன் இயற்கை மதத்தில் நம்பிக்கை கொண்டு அதனைப் பின்பற்றுகிறவன் எனலாம். இயற்கை மதத்தைப் பற்றி எழுதும்போது குர்பக்ஷ் சிங் குறிப்பிடுகிறார். ''வெளிப்படுத்தப்பட்ட நூல்கள் ஏற்படுத்தும் இயந்திரத்தனமான நம்பிக்கையிலிருந்து வேறுபட்ட ஒரு உயிரோட்டமான நம்பிக்கையை இயற்கை மதம் தோற்றுவிக்கிறது. 'ஐயத்திற்குட்பட்ட நம்பிக்கை ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய ஒன்று' என்ற திட்டவட்டமான நம்பிக்கையே இம்மதத்தின் அடிப்படை ஆகும். சாமி வருதல், அற்புதங்கள் நடத்தல் என்பதையெல்லாம் ஒரு சிறிதும் நம்ப இயலாது. மதபோதகருக்கு இம்மதத்தில் இடமில்லை. மேலும் இம்மதத்தில் குறிப்பிட்ட வழிபாட்டு விதிமுறைகள் பழக்கத்தில் இருக்காது. இம்மதம் நல்லொழுக்கத்தைப் போதித்து மனித அன்பினால் மனதை ஆறுதல் படுத்தி ஒருமைப்பாடு குறித்த எண்ணத்தை அதிகப்படுத்தித்தன்னலம் குறித்த உணர்வைக் குறைக்கிறது. வரங்களைத் தருகிறது; கருணை, தைரியம் முதலியவற்றை அதிகரித்து, பிறரது உரிமையை மதித்தல் என்பதைப் போதிக்கிறது.''

குர்பக்ஷ் சிங் தனது 'நவின் தக்ரி துனியா' (ஒரு புதிய வலிய உலகம்), 'சங்கோரி துனியா' (நல்ல உலகம்) ஆகிய இரு நூல்களில் ஒரு புதிய வலிமையான நல்ல உலகம் பற்றிய தனது கொள்கைகளை விளக்கியிருக்கிறார். முதல் நூலில் ஆசிரியர் புது உலகம் பற்றிய தனது கொள்கைகளை 'சரியான சமுதாய அரசியல் அமைப்புடைய கற்பனை உலகம்' (உடோப்பியா) என்றும், அச் சமுதாயத்தை விரும்பத்தக்க கவர்ச்சியான சமுதாயம் (உடோப்பியன்) என்றும் அழைக்கிறார். அவர் மேலும், 'புதிய உலகம்' மிக வல்லமை படைத்ததாகவும், எல்லா வகையான நிறைவும் உடையதாகவும் வாழ்வதில் பெரு விருப்பம் கொள்ளல் மகத்துவம் நிறைந்தது என்று கருதப்படுதல் இல்லாமலுட இருக்கும். அச்சமுதாயத்தில் வாழும் மக்களுக்கு சக்தி பெறும் ஆசையே மீண்டும் மீண்டும் எழும். ஏனெனில் இத்தகைய ஆவல் உலகப் பொருட்களின் மீதுள்ள ஆசை குறித்து மனதைக் கட்டுப்படுத்துதல் என்பதிலிருந்து மலர்ந்ததாகும்.

சுய வெளிப்பாடு குறித்த ஆசை அவ்வுலகில் நித்தியமானது. எனவே மக்களுக்கு எவ்வித முடிவும் இருக்காது. மக்களிடையே சுய வெளிப்பாடு தொடர்பாக எந்த முரண்பாடும் இருக்காது. முழு மனித இனமுமே சுய வெளிப்பாட்டில் முழு ஈடுபாடுடையவர்களாக இருப்பர். எனவே அங்கு அன்பின் அழகு குடிகொண்டிருக்கும்'' என்று குறிப்பிடுகிறார். இந்நூலில் மிக மகத்துவம் வாய்ந்த கட்டுரை 'புதிய வல்லமை பொருந்திய உலகம் பற்றிய அறிவியல் நோக்கு' என்ற கட்டுரை ஆகும். இக்கட்டுரையில் உண்மையில் மனித இன பரிணாம வரலாறு குறித்த மனித வரலாற்று முக்கிய நடப்புச் செய்திகள் ஆறினை ஆசிரியர் விளக்கியுள்ளார். முதல் நிலை மலைவாழ் பழங்குடியியம் என்பது ஆகும். அதனைத் தொடர்வன நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், பிற நாட்டு ஆதிக்கம், பொதுவுடைமை, சமவுடைமை முதலியன. மனிதனின் அடிப்படை உரிமைகளாக இந்நூலில் குறிப்பிடப்படுபவை பின்வருவன. வேலை செய்யும் உரிமை, ஓய்வுக்கும் பொழுதுபோக்குதலுக்கும் உரிமை, நிதிநிலைப் பாதுகாப்பு உரிமை, கல்விபெறும் உரிமை, ஆணும் பெண்ணும் சமம் என்னும் உரிமை, தேசியத்திற்கும் அதன் சிறு பிரிவுகளுக்கும் சமவுரிமை, பகுத்தாராயும் விழிப்புணர்வு உரிமை, அரசியல் சுதந்திர உரிமை முதலியன.

குர்பக்ஷ் சிங், ''பொதுமக்களின் பாதுகாப்பு சமூக மதிப்புக்கள் மாறுவதைப் பொறுத்தே உள்ளது. சமூகத்தின் பழைய மதிப்புக்கள் தேவையற்ற ஒன்றாக நிரூபிக்கப்படும்போது, அவ்விடத்தில் புதிய மதிப்புக்களைப் புகுந்த வேண்டியது அவசியம். கோவில்கள், மசூதிகள், கடவுள், கடவுள் அவதாரம், தீர்க்கதரிசி, உள்ளுணர்வு, கடந்த காலங்கள், எதிர்காலங்கள், தாய் நாடு, சொந்த நாடு, பால்வேறுபாடு, அறம் போன்ற அனைத்தையும் பற்றிய நம்பிக்கைகளைப் பரிசோதிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எங்கெங்கு மாற்றம் தேவையோ, அது உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு நம்பிக்கையும் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க உதவுமா என்று உரைகல்லில் உரசிப் பார்த்து ஆராயப்பட வேண்டும். அவ்வாறு பார்க்கும்போது எது அவ்வரம்பிற்குட்படவில்லையோ அது வாழ்க்கை வட்டத்திலிருந்து தூக்கி எறியப்பட வேண்டும்'' என்று கூறுகிறார்.

குர்பக்ஷ் சிங் 'குல்தா தார்' (திறந்த கதவு) என்ற தன் நூலை எண்ணற்ற பெண்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்

திருக்கிறார். அந்நூலின் முன்னுரையில் அவர் ''எல்லோர்க்கும் திருப்தியான சரியான கொள்கைகளை வாழ்க்கையில் சுதந்திரமாகப் பெண்கள் கையாளும் போதுதான் பெண்கள் பிறருக்கு உண்மையானவர்களாக இருக்கமுடியும். மேலும் ஒரு தைரியமான குடும்பத்தை உருவாக்கவும் முடியும். உண்மையானவளாக இல்லாமல் இருக்கும் பெண்ணுக்குக் கணவனாக வாழ்வில் பங்கு பெறுவதில் எந்த ஒரு ஆணுக்கும் பெருமை இருக்க முடியாது. வீணாகத் தேவையில்லாமல் அவள்மீது பொறாமை கொள்ளும் மன உளைச்சலை அவன் ஏன் அனுபவிக்க வேண்டும்? சுதந்திரமான பெண்ணின் உண்மையே ஒரு ஆடவன் கொள்ளத் தகுந்த பொக்கிஷம் ஆகும். தேசியத்தை உருவாக்குபவர்களாகப் பெண்களைக் குர்பக்ஷ் சிங் கருதுகிறார். ஒரு நாட்டின் அரசியல் நிலை, ஒழுக்க நிலை முதலியன அந்நாட்டின் பெண்களுக்குத் தரப்பட்டிருக்கும் மதிப்பை வைத்தே பெறப்படும். எந்தச் சமுதாயத்தில் பெண்களுக்கு மதிப்பும் மரியாதையும் இல்லையோ, பெண்களுக்கு உரிமையும் அந்தஸ்தும் இல்லையோ, பெண்களுக்குச் சுதந்திரம் இல்லையோ, அந்நாட்டின் ஒட்டுமொத்த ஒழுக்கமும் மிகத் தாழ்ந்ததாக இருக்கும். நூற்றுக்கணக்கான காந்திகள் அந்நாட்டில் பிறந்தும் பயனில்லை. பெண்களை உடைமைப் பொருட்களாகக் கருதி அவர்களை நான்கு சுவர்களுக்குள் வைத்தும் முக்காடிட்டும் பிற கொடிய கண்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் வரை அந்த நாடு சுதந்திரமுடையதாகாது. எங்கே ஒரு பெண் மதக் கட்டுப்பாடுகளால் வலிந்து கட்டுப்படுத்தப்பட்டு அவளது மகள், சகோதரன், கணவன் அல்லது பிற ஆடவ உறவினரின் பாதுகாப்பில் வைக்கப்படுகிறாளோ அங்கு பெண்மையுடன் சேர்ந்து ஆண்மையும் அழிந்துவிடுகிறது'' என்று எழுதுகிறார்.

குர்பக்ஷ் சிங்கின் 'சதே வரிஸ்' (நமது பரம்பரையினர்) என்ற நூல் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது. பெற்றோர்கள் தங்கள் வாரிசுகளின் மீது அதிகப் பொறுப்புக்கள் கொண்டவர்களாக விளங்கவேண்டும் என்று அவர் கருதினார். தங்கள் குழந்தைகளை வாழ்வில் வெற்றிகரமாகத் திகழச் செய்வது பெற்றோர்களது கடமை; இது நல்ல கல்வியை அவர்களுக்குத் தருவதினாலும் குழந்தைகளது ஒழுங்கான வாழ்க்கை முறையினாலும் சாதிக்கப்பட முடியும். பெற்றோர்கள்

குழந்தைகளைப் பராமரிக்காமல் கவனிக்காமல் விட்டு விடுவதனால் குழந்தைகள் பல்வேறு அநீதிகள் தங்களை விழுங்கிவிடத் தாங்களே விரும்பி விடுகின்றனர். ஒரு குழந்தையின் எதிர்காலத்தை உருவாக்குவதில் அக்குழந்தையின் வீட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது. குழந்தைகளின் சமநிலை வளர்ச்சியில் ஆசிரியர்களுக்கும் பெரும்பங்கு உண்டு. குர்பக்ஷ் சிங் நடத்தை, சுதந்திரம், துணிச்சல், மகிழ்ச்சி ஆகிய நான்கையும் பெரிதும் வலியுறுத்துகிறார். 'சதே வாரிஸ்' என்ற தனது நூலின் முன்னுரையில் அவர் ''குழந்தைகளுக்குச் சொத்து சேர்த்து வைத்துவிட்டுப் போவது பயனற்றது; அவனுக்காகப் பணம் செலவழிக்கப்பட்டால் அது அவனுக்குச் சிறந்த கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படுவதற்கே செலவு செய்யப்பட வேண்டும். அதுவே சிறந்த பயனுடைத்து. பெற்றோர்களின் ஒட்டுமொத்த சம்மதத்தின் பேரில் அவர்கள் மேற்குறிப்பிட்ட கல்வியும் பயிற்சியும் பெறுதல் தவிர்க்கப்படாமல் அனுமதிக்கப்பட வேண்டும். குழந்தைகளின் விரும்பத்தகுந்த இயல்புகளாகக் கருணை, இனிமை, பிறரிடம் நல்முறையில் பழகுதல் முதலியன இருக்க வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார்.

குர்பக்ஷ் சிங்கின் வாழும் கலை பற்றிய சிந்தனைகள் அவரது 'ப்ரசன்ன வம்மி உம்மர்' (ஒரு மகிழ்ச்சியான நீண்ட வாழ்வு), 'பக்தி ஜீவன் சங்கியரி'(வாழ்க்கையின் ஒரு உயிரொளி) என்ற இரு நூல்களில் அடங்கியுள்ளன. முதல் நூல் உடல் இயல்பு பற்றியது. ஒரு நல்ல மகிழ்ச்சியான நீண்ட நாள் வாழ்வு வாழவேண்டுமானால் ஒரு நிலையான ஒழுங்கு முறை வாழ்வில் பின்பற்றப்பட வேண்டும். முதலாவதாக, வாழவேண்டும் என்ற ஒரு ஆசை இருக்கவேண்டும். ஒரு அழகான, ஆரோக்கியமான உடலுக்கு, நமது உடலுறுப்பின் ஒவ்வொரு பகுதியையும் வெளியே நன்றாக பராமரிப்பதைப் பற்றி மட்டும் கவனத்தில் கொள்ளாமல், உடல் வளர்ச்சிக்குரிய எளிய, ஊட்டச்சத்துள்ள உணவையும் தேர்ந்தெடுத்து உட்கொள்ள வேண்டும். உடற்பயிற்சியின் முக்கிய நோக்கங்கள் ஆரோக்கியம், தெம்பு, அழகு முதலியன. நமது இரத்தமே நமது வாழ்வின் நீரோட்டம் ஆகும். மகிழ்ச்சியான நீண்ட வாழ்விற்கு மூன்று சட்டங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அவை ஆரோக்கியமான பெற்றோருக்குக் குழந்தைகளாக இருத்தல், எதையுமே முடியும் என்று மகிழ்ச்சியாக நோக்குதல், உடல் இயங்கும் முறைகளையும் உடலை நன்கு வைத்திருக்க வேண்டிய சட்டங்களையும் அறிந்திருத்தல் முதலியன.

'பக்தி ஜீவன் சங்கியரி' என்ற நூலில் குர்பக்ஷ் சிங் ஒரு அழகிய கவர்ச்சியான வாழ்வு, ஆரோக்கியமான உடல் பற்றிய கருத்துக்களை வகைப்படுத்தி ஆராய்கிறார். தனது முன்னுரையில் அவர், ''எப்படி ஒரு கிணறோ, நீரோடையோ இல்லாத இடத்தில் தனி ஒரு மனிதனின் நீர் கொண்டுவரும் ஆசை நிறைவேறாதோ அதுபோல வாழ்வின் ஒளி என்பது தனி ஒரு மனிதனின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட முடியாது. ஆனால் அங்கு அவ்விடத்தில் உள்ள எல்லா மக்களும் ஒன்றிணைந்து அவர்களின் ஒட்டுமொத்த முயற்சியால் ஒரு அணை கட்டி மனித நீரை ஒரு ஏரிபோல தேக்கி வைப்பார்களேயானால் நீர்ப்பிரச்சினையிலிருந்து அங்குள்ள மக்கள் விடுபடுவர். ஒரு காரியம் குறித்த ஆர்வம் எப்போதுமே ஒன்றனை நல்ல முறையில் உருவாக்கும். இத்தகைய காரணமான ஆர்வத்திற்கு மகிழ்ச்சியான அரவணைப்பு தேவையானது. மகிழ்ச்சியற்ற ஆன்மா நோயுற்றதும் உற்பத்தி செய்யும் சக்தியை இழந்ததும் ஆகும். வாழ்வின் முக்கிய ஆக்க சக்திகளுள் உடல்நலம் என்பது ஒன்றெனில், மகிழ்ச்சியே உடல்நலத்தின் பிரகடனம் ஆகும். எங்கே உடல்நலமும் மனநலமும் தேவையான விகிதாச்சாரத்தில் சம அளவில் இருக்கிறதோ அங்குதான் இலட்சிய வாழ்வு உருவாக முடியும். சமநிலை என்பது ஒருவரது உடல், மூளை, மனம் ஆகிய தமக்குள்ளும் சூழலுக்கேற்பவும் ஒத்தியங்குதல் ஆகும்,'' என்று கூறுகிறார்.

எவ்வாறிருப்பினும் இரண்டாம் உலகப் போரின் பின்னர் குர்பக்ஷ் சிங்கின் சிந்தனைகளில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. முன்பு தனது பேச்சுகளிலும் எழுத்துகளிலும் அமெரிக்க வாழ்க்கை முறையைப் புகழ்ந்தார். ஆனால் அமெரிக்கர்கள் ஜப்பான்மீது அணுகுண்டைப் போட்டு, பத்து லட்சம் ஜப்பானிய மக்களைக் கொன்றும் உடல் ஊனமுற்றோராகக் குற்றுயிராகவும் ஆக்கிய போது குர்பக்ஷ் சிங் மிகவும் மனம் உடைந்து வருந்தினார். அமெரிக்கா குறித்த தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டார். தனது சுயசரிதையின் மூன்றாம் தொகுதியில் அவர் எழுதுகிறார்: ''திறனாய்வாளர்கள் என்னிடம் பிலிப்பைன்ஸ் தீவுகளில் அமெரிக்காவின் செயல் பற்றித் தெரிவித்தனர். எவ்வாறிப்பினும் அச்செயல் ஆங்கிலேயர்களின் எளிதான காலனி ஆதிக்கத்திற்கெதிராக அமெரிக்கர்கள் தங்களது சுய ஆர்வத்தில்

எடுத்த முடிவு என அச்செயலை நான் மன்னிக்க முடியும். இரண்டாம் உலகப் போரின் முடிவு வரை நான் அமெரிக்க நிறுவனங்களையும், அமெரிக்கர்களின் எளிமை, நேர்மை, கடின உழைப்பு, தன்னம்பிக்கை முதலிய இயல்புகளையும் புகழ்ந்து கொண்டிருந்தேன். ஆங்கிலேய அரசு மீது அவர்களது அநீதி, துர்நடத்தை காரணமாக ஆழ்ந்த கோபம் எனக்கிருந்தது; எனக்கு அந்நாட்டின் மீது எந்தவித நல் விருப்பமும் கொள்ள முடியாமல் இருந்தது. ஆனால் அமெரிக்க ஐக்கியக் குடியரசும் சோவியத் குடியரசுகளும் இணைந்து இங்கிலாந்துடன் கூட்டுச் சேர்ந்துகொண்டபோது நான் சோவியத் ரஷ்யா, அமெரிக்கக் கூட்டு வெற்றி பெறும், ஏனெனில் அப்பக்கமே நியாயம் இருக்கிறது என்று சொல்வதுண்டு; ஆனால் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இறப்பின் பிறகு புதிய ஜனாதிபதி ட்ரூமன் அமெரிக்க பலத்தை சோவியத் ரஷ்யாவுக்குக் காட்டும் பொருட்டும் தனது விஷ ஆயுதத்தைப் பரிசோதனை செய்து பார்க்கும் பொருட்டும் இரண்டு அணுகுண்டுகளை ஹிரோஷிமா, நாகசாகியின் மீது போட்டுப் பல லட்சம் அப்பாவி மக்களைக்கொன்றும் உடற் குறையுடையவர் களாகவும் ஆக்கிய போது எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் அமெரிக்கா மீது உள்ள உறவை முறித்துவிட்டது. அகில உலக நீதியின் இணையற்ற வீரன் என்று எந்த நாட்டை நான் கருதினேனோ அந்த நாடு இப்போது எனக்கு உலக நாடகத்தின் எதிர்நிலைப் பாத்திரமாகத் தோன்றுகிறது.''

இதனைத் தொடர்ந்து குர்பக்ஷ் சிங் அமைதி இயக்கத்தில் சேர்ந்து இந்திய அமைதிக் குழுவின் உறுப்பினராக சோவியத் குடியரசு நாடுகளையும், சீன நாட்டையும் பார்வையிட்டார். இரஷ்யாவைக் குறித்து அவரைப் பெரிதும் ஈர்த்த விஷயங்கள் இரஷ்ய நாட்டின் பெண்கள், குழந்தைகள், பொருட்களின் விலை மலிவு, உபயோகமான கட்டிடங்களைப் புதிய வடிவில் மிக வேகமாகக் கட்டுதல், மக்கள் கருத்து வளர்ச்சி குறித்து மக்களிடையே நிலவும் பரந்துபட்ட விருப்பம் முதலியன. அவரது 'நவியன் தாக்கீரண்டி பூல் கியரி' (புதிய விதிகளின் மலர்ப்படுக்கை) என்ற நூல் 1978ஆம் ஆண்டில் அவரது இறப்பிற்குப் பின் வெளியானது. இந்நூல் இரஷ்யாவைப் பற்றிய நாற்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளைக் கொண்டுள்ளது. அக்கட்டுரைகள் அவர் 1941ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டு வரையுள்ள காலங்களில்

எழுதியவை. அவரது 'முதலாளித்துவத்தின் கல்லறையின்மீது புதிய விதிகளின் மலர்ப்படுக்கை' என்ற கட்டுரையில் அவர் சோவியத் இரஷ்யா பற்றிய எண்ணங்களைத் தந்துள்ளார். இரஷ்யாவில் உள்ள மதம் பற்றி குர்பக்ஷ் சிங் ''நாங்கள் அங்குள்ள மதம் பற்றிப் பல்வேறு விதமான கருத்து வேறுபாடுகளைக் கொண்டவர்களாய் ஆழ்ந்து விசாரித்தோம். நாங்கள் பாதிரியார்கள், பேராயர்கள், தேவாலயத்தின் பிரதான மந்திரி, நபிகள், இஸ்லாம் இறைக்கோட்பாட்டு வல்லுநர்களாகிய முல்லாக்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினோம். அதன் விளைவாக, ஒரு மதச்சார்பற்ற நாடே எல்லா மதங்களுக்கும் நீதி செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்தோம். மதம் என்பது பொதுப் பள்ளிக் கூடங்களில் போதிக்கப்படுவதில்லை. ஆனால் தேவாலயங்கள் அவர்களுக்கேயுரிய பள்ளிகளை நடத்துகின்றனர்.

பொதுப்பள்ளியில் கல்வி கற்று முடித்த ஒரு குழந்தை பொது மதம் தொடர்பான கல்வியை ஒரு கிறிஸ்தவ ஆலயப் பள்ளியில் படிக்கலாம். மதம் தொடர்பான செய்தித்தாள்கள், இதழ்கள், மதம் சார்ந்த நிறுவனங்களால் வெளியிடப்படுகின்றன. கிறிஸ்தவ ஆலயங்களை, மசூதிகளைப் பழுதுபார்க்கும் செலவுகளை அரசு மேற்கொள்கிறது. பாதிரியார்களின் மாத வருமானம் குறித்த செலவுகளுக்கான பணம் பக்தர்களிடமிருந்து பெறப்படுகிறது. ஒருவர் வேலை தேடும்போது அவர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்று கேட்கப்படுவதில்லை'' என்று குறிப்பிடுகிறார்.

குர்பக்ஷ் சிங்கால் எழுதப்பட்ட உரைநடைப் பகுதிகள் பெரும்பாலும் முன்பு வெளியான 'ப்ரீத் லாரி' இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்டவையே. இந்தக் கட்டுரைகள் நான்கு முக்கிய பிரிவுகளில் அமைகின்றன. அவையாவன: 1) அடிப்படை மனித மதிப்புக்கள், அதிலும் குறிப்பாக அன்பைப் பற்றிப் பேசுவன; 2) ஒரு நல்ல ஆளுமைக்குரிய தன்மைகளும் அறமும் பற்றிப் பேசுவன; 3) பல்வேறு நாடுகளையும் அவ்வந்நாட்டு மக்களைப் பற்றிய அவரது எண்ணங்கள் பற்றியன; 4) கலை, இலக்கியம் பற்றிய திறனாய்வுகள் பற்றியன. குர்பக்ஷ் சிங் பல்வேறு கருத்துக்களைப்பற்றி எழுதியிருக்கிறார். பல்வேறு எழுத்தாளர்கள் உலகத் தலைவர்கள் பற்றி அவர் எழுதிய குறிப்புக்கள் உலகின் பல்வேறு பெரிய இலக்கியங்களிலிருந்தும், தத்துவ நூல்களிலிருந்தும் திரட்டப்பட்டவை. அவர் உலகின் பல்வேறு

பகுதிகளில் பிரயாணம் செய்திருக்கின்றாராதலால் அவரது படைப்புக்கள் பல்வேறு அனுபவங்களைக் கொண்டனவாகவும் குறிப்பிட்ட கருத்துக்களின் பன்முகப் படிமங்களாகவும் விளங்குகின்றன. தனது எழுத்துப் பணி பற்றி அவரே, ''நான் எனக்காகவோ பிறருக்காகவோ ஒருபோதும் எழுதியதில்லை; என்னுடைய எழுத்துக்களின் ஒவ்வொரு பகுதியும் சமூகத்தில் புரையோடிப்போன தீய மதிப்புக்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ எதிர்ப்பவை. மனிதனாலேயே பிரச்சாரப்படுத்தப்படும் தீய மதிப்புக்களைத் தவிர மனித விதியில் வேறு எந்தத் துன்பமும் இல்லை என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும் ஒவ்வொருவரது வாழ்க்கையும் ஒரு ஆர்வத்தையூட்டும் அனுபவங்களைக் கொண்டவையே. பிறப்பிற்கு முன் எந்தத் துன்பமும் இல்லை. இறப்பிற்குப் பின்னும் எந்தத் துன்பமும் இருக்கப்போவதில்லை. மனிதனே தவறான சமூக மதிப்புக்களினாலும் தவறான மதிப்பீடுகளாலும் துன்ப வலையைத் தன்னைச் சுற்றிப் பின்னிக் கொள்ளுகின்றான். இவ்வலையை உடைத்தெறிய அவன் தைரியம் கொள்ளும்போது வாழ்வு என்பது அவனுக்குத் தனிப்பட்ட அனுபவமாகத் தோன்றும்'' என்று குறிப்பிடுகிறார். குர்பக்ஷ் சிங்கின் கட்டுரைகள் அனைத்தும் ''மனத்தின் தளர்ந்த தாக்குதல்'' அன்று. மாறாக, அவை அனைத்தும் செறிவான படைப்புக்கள். அவை ஒருங்கிணைந்த முழுமையைத் தோற்றுவிப்பன. பொதுவாகப் பல கட்டுரைகளில் அவர் நடப்பியல் பிரச்சினையுடன் கூடிய பகுதியைக் கட்டுரையின் தொடக்கமாக அமைக்கிறார். அப்பகுதி கட்டுரையை வாசிப்போர் மனதில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது. அதனைத் தொடர்ந்து அது தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. கட்டுரையைப் படிப்போர் தொடர்ந்து வரும் பகுதிகளால் அப்படியே ஈர்க்கப்படும் வண்ணம் கட்டுரைப் பகுதிகள் சுவையான உணவு போல கவரும் சிந்தனைகளுடனும் பொருத்தமான, விளக்கமான சொல்லாட்சியுடனும் தரப்படுகின்றன.

அவரது முறையானதும் பகுத்தறிவுடன் கூடியதுமான கட்டுரைகள் அவரது மெருகூட்டப்பட்ட மொழி நடையினால் பொதுவாகக் கவிதைத் தன்மை பெறுகின்றன. அவர் சொற்களைக் கொண்டு ஜாலங்கள் பல செய்பவரும் கருத்துக்களின் மூலம் மக்களை மயக்கும் மந்திரவாதியுமாவார். அவரது அணுகுமுறை

அவருக்கே உரிய அணுகுமுறை. அவரது கட்டுரைகளின் இறுதிப் பத்தி அவரது கருத்துக்களைக் கலைநயத்துடன் தொகுத்துத் தருகிறது. குர்பக்ஷ் சிங் ஒரு இலட்சிய உலகம் பற்றிக் கற்பனை செய்கிறார். அக்கற்பனைப் புது உலகில் நுழையும் வாசகர்களுக்குத் தனது கற்பனைகளை அள்ளி வீசுகிறார். அவை அவர்களுக்குத் தங்களது சொந்தக் கற்பனை உலகம் என்று தோன்றச் செய்யுமளவிற்குத் துணைபுரிகின்றன.

குர்பக்ஷ் சிங் மேலைநாட்டுத் தாக்கத்தின் காரணமாக நிலைநிறுவப்பட்ட மதத்தின் மரபுவழிப்பட்ட பழக்கவழக்கங்களையும் சடங்காச்சாரங்களையும் எதிர்த்துப் பேசுகிறார். ஏனெனில் அப்பழக்கவழக்கங்களே தனக்குப் பல எதிரிகளைத் தோற்றுவிக்கின்றன என்று கூறுகிறார். அவர் தனது நூலாகிய 'பரம் மனுக்ஹ்' என்ற நூலினை வெளியிட்டபோது பஞ்சாபில் உள்ள மிகுந்த மதப்பற்றுள்ள சீக்கிய மதத்தினரோடு அவருக்கு மோதல் ஏற்பட்டது. இந்நூலினை குருநானக் தேவ், குரு அர்ஜுன் தேவ், குரு கோபிந் சிங் ஆகியோரைப்பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கி 'குருபானி'யின் வல்லமைக்கு ஏற்றபடி அவர் எழுதினபோதிலும் நிலைநிறுவப்பட்ட மதத்தைப் பின்பற்றுவோர் அனைவரும் அவரைத் தவறாகப் புரிந்துகொண்டனர்; அவரது கருத்துக்களைத் தவறாக விளக்கினர்; ஆனால் அவரது கருத்தைப் புரிந்துகொண்ட சீக்கிய மத வல்லுநர்கள் அவரது கருத்தை விளக்கி அவருக்குத் துணை செய்தனர். காஷ்மீரைச் சேர்ந்த பாய் ஸாஹிப் ஷெர் சிங் என்பவர் 1955ஆம் வருட மார்ச் மாதம் 5ஆம் தேதி 'அகாலி பத்திரிகா' என்ற இதழில், ''நான் சில இல்லங்களில் வசிக்கும் மக்கள் பார்வையில் நன்கு ஆழ்ந்துணர்ந்த கருத்துப்பகுதிகளே விமர்சனத்திற்கு ஆட்படுகின்றன என்பதறிந்து வருந்துகிறேன். அது பதிப்பாசிரியரை ('ப்ரீத் லாரி' இதழில்) அதைரியப்படுத்தி விடாது என்று நம்புகிறேன்'' என்று எழுதுகிறார். குர்பக்ஷ் சிங் எழுதியவை அனைத்தும் சுவை பயப்பனவாக அமைந்தன. தரமில்லாத உணர்வுகளைச் சிறப்பிக்கும் நோக்கில் அவர் எழுத்துக்கள் அமையவில்லை. எந்த ஒரே விஷயத்தையும் எந்த இரு மனிதர்களும் ஒன்றுபோல் நோக்குவதில்லை. மிகச் சில வேறுபாடுகளாவது இருவரது நோக்கிலும் காணப்படும் என்பதையும் புதிய, நவீன, தற்காலத் தேவைக்கேற்ற கருத்துக்களையும் தனது நெடிய ஓட்டத்தில் 'ப்ரீத் லாரி' நமக்கு

நல்கியது. பத்தாவது குரு ஒரு புது மதத்தைத் தோற்றுவிக்க விரும்பினார். புதிய மதம் என்பது சொந்தச் சிக்கல் தொடர்பான முயற்சிகளிலிருந்து விடுவிப்பது என்பதைக் குறிக்கும் என்றார். இது இல்லையென்றால் எல்லா மதமும் இதய அளவில் ஒன்றே என்றார். இத்தகைய புயல்கள் ஓய்ந்தபின், குர்பக்ஷ் சிங் 'பந்தி சோர் குருநானக்' என்ற குருநானக் பற்றிய நூலும் 'சாராப்-பக்தி நாயக்' என்ற குரு கோபிந் சிங் பற்றிய நூலும் ஆக இரு நூல்களை வெளியிட்டார்.

'மேரி ஜீவன் கஹானி' என்ற அவரது சுயசரிதை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. அத்தொகுதிகள் பல்வேறு காலங்களில் அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்புக்களையும் கொண்டிருக்கின்றன. 'இக் ஜத் புரப் பச்சம் தி' (மேற்கு, கிழக்கு நாடுகள்-ஒரு கண்ணோட்டம்)என்ற அவரது பயணக் கட்டுரையும் மேற்கூறிய முறையிலேயே அமைந்த நூல். அவரது விளக்கங்கள் முழுவதும் ஆர்வமூட்டும் பகுதிகளைக் கொண்டவை. அவை செய்திகளைத் தருபவையாகவும் அறிவுறுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

அவரது எழுத்துக்கள் முழுவதிலும் காணப்படும் அவரது அறிவுத் திறமை நம்மை வியக்க வைக்கிறது. அவரது மெருகூட்டி எழுதும் மொழி நடை பல்வேறு உருவங்களை நம் கண்ணெதிரிலே சித்திரித்துக் காட்டுகிறது. அவரது ஏவலுக்குப் பணிந்து சொற்கள் காத்துக் கிடக்கின்றன என்று சொல்லும் அளவிற்கு மிகச்சிறந்த சொல்லாட்சி அவரது படைப்புக்களில் காணப்படுகிறது. இந்தி, உருது, ஆங்கிலம் போன்ற பிற மொழிச் சொற்கள் தகுந்த சொற்களாக அமையுமானால் அவற்றைக் கையான அவர் தவறவில்லை. அவர் பிற மொழிகளில் காணப்படும் மரபுச் சொற்களையும், மரபுச் சொற்றொடர்களையும் தேவைப்பட்டால் மொழிபெயர்த்தும் பயன்படுத்துகிறார். அவர் காலத்திற்கேற்ற நவீனச் சொற்களைப் பயன்படுத்தி எளிய முறையில் சிறு சிறு சொற்றொடர்களாக எழுதியிருக்கிறார். சொற் சிக்கனம் காரணமாக அவரது படைப்புக்கள் வல்லமை படைத்தனவாய் உள்ளன. அவரது எழுத்துக்களில் நல்ல கருத்தோட்டம் அமைந்திருக்கிறது. அவரது எண்ணஓட்டங்கள் சங்கிலிபோல் தொடர்ந்து அமைந்ததால் வாசகரின் ஆர்வம் சற்றும் குறையாமல் கட்டுரைகளைப் படிக்க

ஏதுவாக இருக்கின்றன. அவரது விவாதங்கள் ஏற்புடைத்தாகவும் அவரது சிந்தனைகள் ஒரு நிலைத்த தத்துவத்தை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

1960ஆம் ஆண்டு ஜனவரி மாத வெளியீடான 'அலோச்னா' என்ற இதழில் 'நான் எப்படி எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் குர்பக்ஷ் சிங், என்னுடைய படைப்புக்களுக்கான அடிப்படைக் காரணம் அன்பு குறித்த ஏக்கமே ஆகும். நான் வெறும் உணவோடு திருப்தியடைந்து விடுவதில்லை. நான் என்னுடைய சாப்பாட்டு அறைக்கான நல்ல மலர்களைக் கொண்டு வருகிறேன். நல்ல உணவைத் தெரிந்த பின் அது பளபளக்கும் வெள்ளித் தட்டில் மகிழ்ச்சியானவர்கள் அருகிருக்க நல்ல சூழலில் பரிமாறப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதேபோல் வெறுமனே எழுதுதல் மட்டும் என் அன்பிற்கான ஏக்கத்தைத் தீர்த்துவிட முடியாது. நான் சிறந்த சொற்கள், எளிய, ஒலி அழுத்தமுடைய சொற்களைப் பெரிதும் விரும்புகிறேன். சொல்லலங்காரப் பயன்பாடு பற்றி எனக்கு எப்பொழுதுமே ஐயம் இருந்து வந்திருக்கிறது. நான் பெண்களை விரும்புகிறேன். ஆனால் நகை அலங்காரம் செய்த பெண் எனக்குள் எந்த அதிர்வையும் ஏற்படுத்தியதில்லை. அதேபோல் என் காதுக்கு வெற்று ஆரவாரச் சொற்களாக அமைந்து கேட்போரைத் தாக்கும் கருத்தாழம் இல்லாத சொற்களையும் மதத் துரய்மையைப் பிரதிபலிக்கும் வேகமில்லாமல் ஒரு தூய உள்ளத்தின் உணர்ச்சியைத் தூண்டும் சொற்களையும் நான் அத்தகைய அலங்காரம் செய்த பெண்ணிற்கொப்பாகவே கருதுகிறேன். எனக்கு எந்தச் சொல் மீதும் இன அடிப்படையிலோ வட்டார அடிப்படையிலோ உணர்ச்சிப் பெருக்கு என்பதில்லை. நடைமுறை, அல்லது இதயத்தின் விருப்பு, இயக்கம் போன்றவற்றைப் பாதிக்கும் வகையில் வெளிப்படுத்தும் எந்தச் சொல்லுக்கும் நாம் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம். மேம்பட்ட அறிவோ அல்லது மேதைத்தனமோ முற்றிலும் சரியானவை என்று நான் கூற வரவில்லை. நான் நேசிப்பது சொற்களை அல்ல. நான் சொற்களைக் கொண்டு அன்பாகிய ஒரு கழுத்தாரம் பின்னி அதை என் அன்புக்குரியவர்களுக்கு அணிவிக்கிறேன். நான் அவர்களது கடனாளி, இரசிகன்; ஆனால் வழிபாட்டுக்குரியவன் அல்ல. நான்கு மணிக்கு நாள் விடியும்முன்பே வீட்டில் உள்ள அனைவரும் உறங்கிக்

கொண்டிருக்கும்போது நான் அன்புச் சந்திப்பிற்காகத் தயாராகி அமைதியாக வந்து என் மேஜையில் அமர்ந்து விடுகிறேன்.

தயாராதல் என்பது முகம் கழுவி, என் தலைமுடியையும் தாடியையும் ஒழுங்குபடச் சீவி, ஆடை மாற்றி நான் ஒரு அன்புக் கடிதம் எழுதவேண்டியிருக்கிறது என்ற உணர்வுடன் எனது அன்பிற்குரியவரின் எதிரிலே அமர்ந்து கொண்டிருக்கிற உணர்வுடன் எழுத ஆரம்பித்து விடுவதைக் குறிக்கும். ஒவ்வொரு கடிதத்தையும் நான் இருமுறை எழுதுகிறேன். முதல் முறை எனக்குள் கருத்து தொடர்ந்து எழுவதை அதே முறையில் எனது எழுதுகோலின் உதடு வழியே பாய விடுகிறேன். அதன்பின் சில மணி நேரங்களுக்குப் பின் அல்லது அடுத்த நாள் மீண்டும் அதை எழுதுகிறேன். பொருத்தமான சொல் தேவை என்பதற்காக எங்கே நான் ஓர் ஒளி மிகுந்த அல்லது கனமான சொல்லைப் போட்டிருக்கிறேனோ அங்கு நான் வெகு நேரச் சிந்தனைக்குப் பின் தகுந்த சொல்லைச் சேர்க்கிறேன். அதற்காக அதிக நேரம் செலவானாலும் நான் அதனைப் பொருட்படுத்துவதில்லை. முதல் படி எடுக்கும்போது நான் அதிகம் நிறுத்தி யோசிக்காமல் தொடர்ந்து எழுதுகிறேன். இரண்டாம் முறை எழுதும்போது ஒவ்வொரு வரியையும் மெருகுபடுத்துகிறேன்'' என்று குறிப்பிடுகிறார்.

4. பஞ்சாபிப் புனைகதைத் தொண்டு

குர்பக்ஷ் சிங் தன்னை உரைநடையாளர் என்று வெளிப்படுத்தியது மட்டுமின்றி உரைநடைப் புனைகதைகள் எழுதுவதில் வல்லவர் என்ற புகழையும் மக்களிடையே பெற்றவர். இவ்வகையில் இவர் சிறுகதைகள், புதினங்கள் ஆகிய இருவகை இலக்கியங்களையுமே படைத்திருக்கிறார். இருப்பினும் அவரது மேலான பங்கு பஞ்சாபிச் சிறுகதைகளை நோக்கியே அமைந்திருந்தது. அவர் சிறுகதைகள் எழுத ஆரம்பித்தபோது இவ்விலக்கியவகையில் சிறந்த சிறுகதைகளை எழுதிக் கொண்டிருந்த சிறுகதை ஆசிரியர்கள் சரண்சிங், ஷாஹித், நானக் சிங், ஹிர சிங் தார்ட், மோகன் சிங் வைட் போன்றோர் ஆவர். 'ஷாஹித்' என்ற சிறுகதை ஆசிரியரைத் தவிர பிற சிறுகதை ஆசிரியர்கள் அனைவரும் உணர்ச்சி வேகத்திலும் சீர்திருத்த நோக்கிலும் பரந்துபட்ட அளவில் எழுதிவந்தனர். ஷாஹித் மேல்நாட்டுச் சிறுகதை உத்திகளைக் கையாண்டு தம் சிறுகதைகளைப் படைத்தார். குர்பக்ஷ் சிங்கும் ஆங்கில மொழி வாயிலாகப் பல மேலைநாட்டு இலக்கியங்களைப் பரந்துபட்ட அளவில் அதிகமாகப் படித்திருந்ததனால் மேலைநாட்டுச் சிறுகதை உத்திகளின் தாக்கத்திலேயே சிறுகதைகள் எழுதிவந்தார். திருமதி மகட்ரீயின் தாக்கத்தினால் குர்பக்ஷ் சிங் ஆங்கிலத்தில் ''பசித்த ஆத்துமா'' என்ற தலைப்பில் ஆங்கிலச் சிறுகதை ஒன்றை எழுதினார். அச்சிறுகதை ''புக்க ஸரீர் தே புக்கி ஆத்மா'' (பசித்த உடலும் பசித்த ஆன்மாவும்) என்ற தலைப்பில் ஆசிரியராலேயே அவரது தொகுப்பாகிய 'வினா-வினோத்'-இல் வெளியிடப்பட்டது.

குர்பக்ஷ் சிங் ஒன்பது சிறுகதைத் தொகுதிகள் எழுதியிருக்கிறார். 'ப்ரீத் கஹானியன்' 1937ஆம் ஆண்டிலும், 'அனோக்ஹ் தே இகல்லே' 1940ஆம் ஆண்டிலும், 'நாக் ப்ரீத் தா ஜாது' 1940ஆம் ஆண்டிலும், 'வினா-வினோத்' 1942 ஆம் ஆண்டிலும், 'ப்ரீதன் டி பெஹ்ரீதர்' 1946 ஆம் ஆண்டிலும் 'பாபி மைனா' 1946ஆம் ஆண்டிலும், 'ஷ்பனம்' 1955ஆம் ஆண்டிலும், 'ஸிந்கி வாரஸ் ஹாய்' 1960 ஆம் ஆண்டிலும், 'ரங் ஸேஹ்கதா தில்' 1970 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. மேலும் அவர் மேலைநாட்டு இலக்கியங்

களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு மொழி பெயர்க்கப் பட்ட சிறுகதைகளை உள்ளடக்கிய 'அஸ்மானி மஹன் நாதி' (1940), 'ஆக்ஹ்ரி பைக்' (1949) என்ற தலைப்புகளிலான இரு சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டார். 'இஷ்க் ஜின்ஹன் டி ஹத்தின் ரசியா' என்ற தலைப்பிலான பஞ்சாபிய பழங் காதல் கதைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட மற்றொரு தொகுதியும் குர்பக்ஷ் சிங்கின் படைப்பு ஆகும்.

காதல் பற்றிய இவரது புதுக் கருத்தாகிய 'ஸாகஜ்-ப்ரீத்' பற்றி குர்பக்ஷ் சிங் தனது உரைநடைப் படைப்புக்களில் கூறியிருந்தார். தனது சிறுகதைப் படைப்புக்களையும் இதே புதுக்கருத்தின் அடிப்படையில் எழுத ஆரம்பித்தார். தனது முதல் சிறுகதைத் தொகுதிக்கு 'ப்ரீத் கஹானியன்' (அன்பின் கதைகள்) எனப் பெயரிட்டார். 'ஸாகஜ் ப்ரீத்' (இயற்கை அன்பு என்பது பொருள்) பற்றி அவர், உடைமைப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இருவருக்கிடையே தோன்றியிருக்கும் அன்பு காதலர்களுக்குத் தரும் ஒரு உணர்வை இயற்கைக் காதல் எனக்குத் தந்திருக்கிறது என்று நான் கூற முடியாது. ஆனால் இயற்கைக் காதல் நான் வாழும் வாழ்க்கையைத் தகுதியுள்ளதும் வாழ்வை ஆர்வமுடையதாகவும் ஆக்கியிருக்கிறது என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. நான் காதல் என்ற உணர்வின்மூலம் உடைமை உணர்வையோ, இறப்பையோ, நெருங்கியவர்களையோ அதிகாரமாகக் கேட்கவில்லை. எனது வாழ்க்கையில் நான் கொண்டிருக்கும் திட்டவட்டமான அன்பு வாழ்க்கைப் பாதைமீது ஒளிவீசச் செய்யும் ஒளி விளக்கை மட்டுமே உரிமையுடன் கேட்டிருக்கிறது. எனது முதற்காதல் ஒரு பெண் மீது ஏற்பட்டது. ஆனால் அந்தப் பெண் என்னுடையவளாக ஆக முடியாமல் ஆகிவிட்டது. எனவே எனது இந்த இயற்கைக் காதலாகிய ஆழ்ந்த அன்பு எதையெல்லாம் இதன்மூலம் பெறமுடியுமோ அதையே பெறமுடியும் என வலியுறுத்துகிறேன். அதற்கேற்ப என்னை எனது வாழ்க்கை முழுவதும் தயார்ப்படுத்திக் கொள்ளும் முறையைக் கையாளுகிறேன். இம்முறை எனக்கு எனது உணர்வு வளத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் தந்தது. எல்லாவற்றிற்கும் மேல் எனக்கு மன அமைதியைத் தந்தது. நிலையான மன அமைதியினால் உலகின் பலவித கருத்துக்கள் எனது அன்பின் பிரதிபலிப்புக்களாகவே எனக்குத் தோன்றுகின்றன. பெரிய அறிஞர்கள் அன்பு என்பதைக் கடவுளோடு

ஒப்புமைப்படுத்தியிருக்கின்றனர். ஆனால் அன்பிற்குரிய ஒருவர்மீது கொண்ட காதல் எப்படி கடவுளின் அன்போடு ஒப்பிடப்படமுடியும் என்பது எனக்குப் புரியவில்லை. இயற்கை அன்பு இந்தப் பொன்னான உண்மையை எனக்குத் தெளிவுறுத்தியது. உன்னை ஒருவர் (அவன் அல்லது அவள்) அதிகமாக விரும்பும்போது அந்த அவன் அல்லது அவள் உனது இதயத்தில் பரவி நிற்க, அதனால் நீ உலகைப் பெரிதும் நேசிக்க ஆரம்பிக்கிறாய். இதுவரை உன்னோடு மட்டுமே தொடர்புடைய உனது தன்னல ஆசைகள் இப்போது தியாகத்தோடு கூடிய அர்ப்பணிக்கும் ஒன்றாக மாறுகிறது. காதல் என்பது ஒரு பைத்தியக்காரத்தனமான, பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காத திடீர் உணர்ச்சி வேகமல்ல. அது ஒரு தெய்வீக ஒழுங்கு-அந்த அர்ப்பணிப்பில் முதல் கடவுள் ஒரு அழகிய பெண்ணாக இருக்கலாம். ஆனால் மெல்ல மெல்ல அவளோடு தொடர்புடைய எல்லாமே தொலைவிலிருந்தாலும் மிகத் தொலைவிலிருந்தாலும் கூட மிக அழகானதாகத் தோன்றுகின்றன. எனவே இவ்வுலகில் உள்ள அனைத்துப் பொருட்களுமே அழகானவையதாகத் தோன்றுகின்றன. எல்லா ஆடவர்களும் முதற்கடவுள்போலவே அன்பு செலுத்தத் தகுதியுடையவர்களாகவும், போற்றப்படத் தகுதியுடையவர் களாகவும் காணப்படுகின்றனர். இந்த நிலை அன்பை மாற்றிக் கடவுளை நோக்கிச் செலுத்தும் நிலை எனப்படலாம். உடைமைப்படுத்திக் கொள்ளும் அன்பானது ஏதாவது தாழ்ந்த ஒன்றினோடு தன்னைக் கட்டாயம் பிணைத்துக் கொள்ளும். அப்படி இல்லையெனில் அது வியப்பிற்குரிய ஒன்றே எனலாம். அப்படிப்பட்ட அன்பு இறுதியில் உடைமைப் படுத்திக் கொள்ளாத அன்பாகக் கடவுளை நோக்கிச் செலுத்தப்படுகிறது. அதுவே 'ஸகஜ் ப்ரீத்' அல்லது இயற்கை அன்பாக ஆகிறது. இந்த அன்பு, சற்றும் எந்த உடைமையையோ, நேசிப்பவரின் நிலைத்த அன்பையோ நாடாது. மாறாக ஆன்மாவில் தன்னைப் பிணைத்துக் கொள்ளுதலே போதும் என்று கருதும் இயல்புடையது'' என்று கூறுகிறார். 'ப்ரீத் கஹானியன்' என்ற தொகுப்பில் உள்ளகதைகளைப் பற்றி அவர், ''இக் கதைகள் அன்பே வாழ்வின் ஒளிவிளக்கு என்ற எனது மனநிலை பற்றியன; இக்கதைகள் ஏதாவது இலக்கியப் படைப்பினால் ஏற்பட்ட தூண்டுதலோ அல்லது ஆர்வமூட்டும் சம்பவங்களை விளக்கும் பொருட்டோ எழுதப்பட்ட தொகுப்பு அல்ல. மாறாக, எனது காலத்தவர்களிடம் ஒரு நல்ல சுகமான

அனுபவத்தைக் கூறவும் செம்மையான வாழ்க்கைக் கட்டிடத்தை அமைக்கவும் நல்ல நடத்தையுடைவர்களாவதற்கும், உலகத்தோடு ஒன்றுபட்டு ஒழுகவும் அன்பாக இருப்பதைப் போலச் சிறந்தது வேறு எதுவும் இல்லை என்று கூறுதற்கு எடுத்த முயற்சிகள் ஆகும்'' என்று கூறுகிறார்.

இத்தொகுப்பில் எட்டுக் கதைகள் உள்ளன. 1913-இல் அவர் முதன்முதலில் எழுதிய 'ப்ரதிமா' என்ற சிறுகதையும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. 'ஜோஹ்ரா' என்ற மற்றொரு சிறுகதை ஷிரின் ஃபர்ஹத் என்ற தேசத்தில் போரெழுந்திருந்த காலத்தில் ஆசிரியரது மனம் காதலில் ஆழ்ந்திருந்த போது எழுதப்பட்டது. 'ரீடாவும் கூபியும்' என்ற சிறுகதை 1924ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. இக்கதை ஆசிரியரின் இளமைக்கால விருப்பத்தைச் சித்திரிக்கின்றது. இவரது 'கௌரி ஜே பக்வன் புத்' என்ற சிறுகதை எல்லோராலும் அங்கீகரிக்கப்படாமல் மறுக்கப்படும் காதலை ஆதரித்து எழுதப்பட்டது. 'ஏமா தே ஒஹ்தா அனோகா மாலி' என்ற சிறுகதை 1927-இல் அதாவது அவர் காதல் என்பதைச் சொர்க்கமாகவும் பெரும் பரபரப்பாகவும் கருதிய காலத்தில் எழுதப்பட்டது. 'ரத்னாவலி' என்ற கதை ஒரு புரட்சிப் பெண்ணைப் பற்றி விளக்குகிறது. 'கேஸ்ரி தி கதி', 'வித்வ ப்ரீத்' என்ற தலைப்புக்களைக் கொண்ட இரு சிறுகதைகள் ஆசிரியர் தனது வெற்றியடையாத காதல் காரணமாகத் தாங்கமுடியாத பெரும் துயரத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில் எழுதப்பட்டன. 'கேஸ்ரி தி கதி' என்பது அவருக்குப் பெரிதும் பிடித்த சிறுகதை. எந்த வயதானாலும், வண்டியோட்டியாக ஆகவேண்டும் என்ற கேஸரியின் ஆசை குர்பக்ஷ் சிங்குக்குள் ஆடிக்கொண்டிருந்தது. இக்கதைகளில் ஆசிரியர் உண்மையிலேயே தனது சொந்த காதல் கதையைச் சித்திரித்திருக்கிறார்.

அவரது அடுத்த சிறுகதைத் தொகுப்பாகிய 'அனோக் தே இகல்லே' (அபூர்வமான்தும், தனிப்பட்டதும்) அபூர்வமான தனிப்பட்ட பாத்திரங்களைப் படைத்துக் காட்டியுள்ளது. இத்தொகுதியில் அடங்கும் சிறுகதைகளைப் பற்றி ஆசிரியர் ''இத்தொகுதியில் விலைமகளிர், நமது புதினங்களில் காட்டப்படும் உண்மையற்றதும் அந்த நேர மகிழ்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஆண் பெண் நட்பு, மனைவி அல்லது தனக்கென

நிச்சயிக்கப்பட்ட பெண்ணிடம் ஒரு கணவன் காட்டும் அன்பு போன்ற வெளிப்படையாகப் பேசக்கூடாததாகச் சமுதாயத்தில் கருதப்படும் செய்திகள் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருக்கலாம். வீடுகளில் பெண் மக்கள் முன்னும் சகோதரிகள் முன்னும் கெட்ட சொற்கள் பேசப்பட்டாலும் பேசப்பட்டுவிடலாம். ஆனால் கணவன் மனைவியரிடையே உள்ள காதல் உறவை வெளிப்படுத்துதல் என்பது பாவமாகக் கருதப்படுகிறது. எனது எல்லாச் சிறுகதைத் தொகுதிகளிலும் உள்ள பல சிறுகதைகளுக்கான அடிப்படை நிகழ்ச்சிகள் உலக மக்களின் வாழ்விலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவை. சிறுகதையின் உண்மைப் பாத்திரங்களின்மீதும் இயற்கைக் காதலின் அல்லது உயிர்க் காதலின் தாக்கம் காணப்படும். எனவே நான் எவ்விதத் தயக்கமுமின்றி தன்னம்பிக்கையுடன் இக்கதைகளைப் பொதுமக்களுக்கு அளிக்கிறேன்'' என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர் நமது சமுதாய மதிப்புக்கள் பெரிதும் வியப்பிற்குரியன என்று வருந்துகிறார். அதுமட்டுமன்றி நமது பல்வேறு மத வேதங்கள் பெரு மதிப்பிற்குரிய நிலையில் நடந்திருந்தாலும் பிறர் கேட்கச் சத்தமாக வாசிக்க முடியாதவை. நமது வீடுகளில் அன்றாடம் நடக்கும் பல நிகழ்ச்சிகள் நமது முன்னோரால் அனுமதிக்கப்பட்டு நமது வாழ்வின் முக்கிய பங்காகி இருந்தாலும் அப்படியே உள்ளபடியே வெளிப்படுத்தப்பட முடியாது என்றும் குறிப்பிடுகிறார்.

இத்தொகுப்பு பதினான்கு சிறுகதைகளைக் கொண்டது. 'பியார் கப்ஸா நஹின், பெஹ்ச்சன் ஹாய்' (காதல் என்பது உடைமைப்படுத்தல் அல்ல; அங்கீகரித்தல்) என்ற அவரது சிறுகதையும் இத்தொகுப்பில் அடங்கும். இக்கதையின் தலைமைப் பாத்திரமான இளவரசர் இயற்கைக் காதலின் தத்துவத்தைப் போதிக்கிறார். படைத்தளபதி ஸ்வீட்டி இளவரசரின் கருத்துக்களை எதிர்த்துப் பேசுகிறான். இக்கதையில் வரும் அரசன் உலகப் பொருள் வளத்திற்கான குறியீடு. ஹெலனா என்பவள் அரசனின் மனைவி. இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக இருந்தாலும் தனது வாழ்க்கை வெறுமையானது என்று உணர்கிறாள். படைத்தளபதி ஸ்வீட்டி இவ்வெறுமையை அவள்மீது தான் செலுத்தும் அவளை உடைமைப்படுத்திக்கொள்ளக்கூடிய ஆழ்ந்த அன்பினால் நிரப்புகிறான். அக்காதல் அழகை ஆக்கிரமித்துக்கொள்ளும் அன்பாக இருக்கிறது. இந்த அன்பு கிடைத்தும் ஹெலனா அதிருப்தி யுள்ளவளாகவே இருக்கிறாள். இக்கதையில் அவள் பாதி வெற்றி

கொள்ளுதல் என்பதற்குக் குறியீடு. படைத்தளபதி ஸ்வீட்டி ஹெலனா உயிர்க்காதலின் குறியீடான இளவரசருடன் அன்பால் நெருங்குவதை விரும்பவில்லை. ஆனால் இறுதியில் அவள் இளவரசரின் அன்பிலேயே முழுமையான திருப்தி காணுகிறாள். படைத்தளபதி ஸ்வீட்டி அவள் மூலம் இளவரசரின் கருத்துக்களுக்குத் தலைவணங்குகிறான். ''இயற்கைக் காதல் ஒருபோதும் எந்தவிதக் குழப்பத்தையும் யாருடைய வாழ்விலும் உண்டு பண்ணுவதில்லை; இயற்கைக் காதல் கணவன் மனைவியைப் பிரித்து வைக்காது; அவர்களை அன்பால் ஒன்றிணைக்கும். இது வாழ்வின் உண்மைக்கும் மனிதனுக்குமிடையே ஏற்படும் ஒப்பந்தத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை'' என்ற இளவரசரின் உண்மை குறித்த வாதம் நிரூபிக்கப்படுகிறது.

இத்தொகுதியிலடங்கும் மற்ற இரு கதைகள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. அவை 'ப்ரேம் பூங்க்ரா', 'தேஷ் பந்து' என்ற பெயருடையன. இவ்விரு கதைகளின் தலைமைப் பாத்திரங்களும் பிறருக்கு நன்மை செய்யும் இலட்சியப் பாத்திரங்கள். அவர்களது இலட்சியம் அவர்களுக்குப் பல விரோதிகளைத் தேடித் தருகிறது.

பிற சிறுகதைத் தொகுதிகள் 1947ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டன. அத்தொகுதிகள் 'நாக் ப்ரீத் தா ஜாது', 'வினா-வினோத்', 'ப்ரீதன் தி பெஹ்ரதர்', 'பாபி மைனா' என்பன. இத்தொகுதிகளில் உள்ள பல கதைகள் 'ஸாகஜ் ப்ரீத்' என்ற இயற்கைக் காதலை மையக் கருவாகக் கொண்டவை. பல கதைகள் ஆசிரியரின் உண்மை அனுபவங்களின் அடிப்படையில் எழுந்தவை. சில கதைகள் பிற மொழிகளிலிருந்து தழுவியவையாக அல்லது மொழி பெயர்க்கப் பட்டவையாக அமைந்துள்ளன. 'நாக் ப்ரீத் தா ஜாது' என்ற தொகுதியில் உள்ள 'மேரி நான்ஹி விலாஹ்' என்ற சிறுகதை குர்பக்ஷ் சிங் அமெரிக்காவில் வாழ்ந்தபோது அங்கு அவர் சந்தித்த ஒரு சிறுமியைப் பற்றிய கதை. அவர் ஆங்கிலத்தில் எழுதிய முதல் சிறுகதையாகிய 'புக்கி ஆத்மா' பின்னர் பஞ்சாபி மொழியில் எழுதப்பட்டு அவரது 'வினா-வினோத்' தொகுதியில் வெளியிடப் பட்டுள்ளது. 'வினா-வினோத்' தொகுதிக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில், ''இத் தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதைகள் 1940 ஆம் ஆண்டுக்கு முன்னர் எழுதப்பட்டவை. அவற்றுள் 'புக்கா சரீர் தே புக்கி ஆத்மா' என்ற கதை எனது முதல் சிறுகதை; அச் சிறுகதை

1922-இல் எழுதப்பட்டது. இக் கதையை வாசித்த பின்னர் ஒரு அமெரிக்கப் பெண்மணி என்னை மேலும் எழுதுமாறு ஊக்குவித்தார். இத் தொகுதி வெளியிடப்படுவதற்கு முன் ஏற்கனவே காதல் குறித்த 'ப்ரீத் கஹானியன்', 'அனோக் தே இகல்லே' ஆகிய இரு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இக் கதைகள் பொதுமக்களின் பெரிதான வரவேற்பைப் பெற்றமை உத்திகளும், அறிவுத் திறமையும் ஒரு நல்ல இலக்கியத்துக்குத் தேவை என்றாலும் எந்த இலக்கியவாதியும் தன் படைப்பில் முழு மனதுடன் ஆழ்ந்து ஈடுபட்டால் அவனது படைப்பில் உத்தியில் குறைபாடுகள் சில இருப்பினும்கூட அவன் கதை மக்களால் பெரிதும் விரும்பி வாசிக்கப்படும் என்பதில் எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. இக்கதைகளில் என்னுடைய தனித்தன்மையையோ அல்லது கலைத்தன்மையையோ வெளிப்படுத்துவது எனது நோக்கமன்று. எனது சமகாலத்தவர்களுக்குச் சமூக மதிப்புக்களைப் பற்றிய உணர்வை ஏற்படுத்துதலே நோக்கம். எனது கருத்துக்கு ஆதரவாக எங்கு கருத்துக்கள் கிடைத்தாலும் நான் அதை அப்படியே தழுவியும் சிலவிடத்து மொழிபெயர்த்தும் பயன்படுத்தியிருக்கிறேன். வாழ்வில் ஏற்படும் பல்வேறு துன்பங்கள் மனிதன் தன் சொந்தச் செயல்களினால் ஏற்படுத்திக் கொண்டவையே என்பதை நான் கண்டிருக்கிறேன். மனிதன் காதல் குறித்த தனது உள்ளுணர்வுகளிலிருந்து தவறான பல கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு, முறையான வழிபாடுகளுள்ள மதமாவது காதல் என்பதிலிருந்து வேறுபட்டது என்று தவறாகப் புரிந்து கொள்ளுகிறான். இவ்வகையில் காதல் என்பதும் சமயம் என்பதும் இரண்டும் தத்தமக்குரிய பொருளை இழந்து நிற்கின்றன. காதல் என்பது பாவமாகவும் மதம் என்பது உண்மைக்கு அப்பாற்பட்டதும் உண்மை வாழ்விலிருந்து வேறுபட்டதும் ஆகிவிடுகிறது. காதல், சமயம் இரண்டும் ஒன்றே; இரண்டும் மனிதனின் உள்ளுணர்வுகளே என்று என்னால் உணர முடிந்தது. காதல் மனிதனை மனிதனோடு இணைக்கிறது; மதம் மனிதனை உலகம் முழுவதுமோடு இணைக்கிறது. இரண்டன் நோக்கமுமே மனிதனை அவன் விரும்பும் ஒன்றனோடு இணைத்து மகிழ்ச்சிப்படுத்துதலே ஆகும். இந்த நம்பிக்கையோடு நான் இக்கதைகளை மொழிபெயர்த்தும் எழுதியும் இருக்கிறேன்'' என்று குறிப்பிடுகிறார்.

இயற்கைக் காதல் குறித்து தீவிரமாகப் போதிப்பவராக மட்டுமன்றி குர்பக்ஷ் சிங் ஒரு சீர்திருத்தவாதியாகவும் இருந்தார்.

தன் கதைகளில் அவர் படைத்துள்ள இலட்சியப் பாத்திரங்கள் அனைவரும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர். அப்பாத்திரங்கள் அங்கதத்தையே தம் ஆயுதங்களாகப் பயன் படுத்தியிருக்கின்றனர். சமுதாயத்தின் பல்வேறு தளங் களிலிருந்து அவர் தன் பாத்திரங்களைப் படைத்துக் காட்டி யிருக்கிறார். அவரது காதல் பாத்திரங்கள் அபூர்வமானவர்களாகவும் தனிப் பட்டவர் களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட பாத்திரங்கள் 'ப்ரீதன் டி பெஹ்ரதர்' என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள 'ப்ரீதன் டி பெஹ்ரெதர்', 'கந்ரன் டி யுஸாரி', 'முபினா கி சுகினா', 'பாம் பஹதூர்' ஆகிய கதைகளிலும், 'பாபி மைனா' என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள 'பாபி மைனா', 'ரைசதா பிதி சந்த்', 'நீரு தி நர்தன்', 'போடா பந்தி' ஆகிய சிறுகதைகளிலும் உள்ளனர். எனவே அக்கதைகள் நம் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கின்றன. தனது சொந்த நாட்டைச் சீர்த்திருத்துவதற்கு அயல்நாட்டுப் பண்பாடுகள் ஆசிரியருக்கு உதவுகின்றன. அவரது சில கதைகளில் அவர் அயல்நாட்டு வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டியுள்ளார். சான்றாக, இத்தாலிய வாழ்க்கை முறை அவரது கதையாகிய 'சபர் கிரிசல்தா'விலும், பிரெஞ்சு வாழ்க்கை முறை 'அனோக் நஸ்தக்' என்ற சிறுகதையிலும், சீன வாழ்க்கை முறை 'கன்வல் கலி' என்ற சிறுகதையிலும் ஆங்கிலேய வாழ்க்கை முறை 'ரீடா தே கூபி' என்ற சிறுகதையிலும் காட்டப்பட்டுள்ளன.

1947ஆம் ஆண்டுவரை குர்பக்ஷ் சிங் அமெரிக்க வாழ்க்கை முறையை மிகவும் திருப்தியான வாழ்க்கையாகவும் ஆனால் இரண்டாம் உலகப் போரின் பின்னர் அவர் அவ்வாழ்க்கை முறை உண்மையற்றது எனவும் கருதினார். இந்த கருத்து முரண்பட்ட இடைப்பட்ட காலநிலை அவரது 'ப்ரீதன் டி பெஹ்ரெதர்', 'பாபி மைனா' ஆகிய இரு தொகுதிகளில் வெளிப்படுகின்றன. இத்தொகுதிக் கதைகள் காதல் பற்றிய அவரது முந்தைய காலக் கருத்துக்களையும், அமைதி, பொதுவுடைமை ஆகியவற்றின் தாக்கத்தினால் ஏற்பட்ட பிந்திய காலக்கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன. 'பாபி மைனா' என்ற தொகுதியில் உள்ள 'தோ யாத்கரி அன்சூ' என்ற கதையும், 'ப்ரீதன் டி பேஹ்ரெதர்' என்ற தொகுப்பில் உள்ள 'கந்ரன் டி யுஸாரி', 'முபினா கி சுகினா' என்ற இரண்டு சிறுகதைகளும் இவரது இடைப்பட்ட காலக் கருத்து வளர்ச்சிநிலையை விளக்கும் நோக்கில் எழுதப்பட்டவை. 1950

-ஆம் ஆண்டில் 'அனோக் தே இகல்லே' என்ற புது நூல் வெளியானபோது அவர் அந்நூலின் முன்னுரையில், ''நான் இந்நூலின் சில கதைகளுக்கு அச்சுப்பிழை திருத்தும்போது அக்கதைகள் நான் இப்போது மனித இன எதிர்காலம் குறித்த தெளிவு கொண்டிருப்பது போல இல்லாத அக்காலத்தில் எழுதியவை என்று உணர்ந்தேன். அக்காலத்தில் என் படைப்பின் நோக்கம் மத்திய தரவர்க்கத்தினரிடையே இம்சையை அனுபவிப்பவர்கள் குறித்து இரக்கத்தை உண்டுபண்ணுதலும் சமூகத்தில் வெளிப்படுத்தப்படக் கூடாது என்றிருக்கும் மரபை உடைத்து இதயத்தைப் பிளக்கும் சில செய்திகளை வெளிப்படுத்துதலுமாக இருந்தது. ஆனால் இப்போது மக்களைப் பார்க்கும்போது அவர்கள் மிகுந்த உணர்வுடன் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. அத்தகைய வல்லமை கருணையைச் சார்ந்து இருக்கமுடியாது. நான் பொருளாதாரப் பொறாமையையும் சமுதாயத்தில் வெளிப்படுத்தப்படாத செய்தியாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன். இப்பொறாமை மக்களின் பொருளாதாரக் குழப்பங்களிலிருந்து தோன்றி பொருளாதார வளத்தில் முடிகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை'' என்று எழுதுகிறார். இவ்வாறு குர்பக்ஷ் சிங்கின் கதைகள் இரு காலகட்டங்களைச் சேர்ந்தன என்று வரையறுக்க முடியும். முதல் காலகட்டம் 1947ஆம் ஆண்டில் முடிகிறது. இரண்டாம் காலக்கட்டம் அதனையடுத்துத் தொடர்கிறது.

குர்பக்ஷ் சிங் 1947ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறமொழித் தழுவலாக இல்லாமல் தாமே எழுதிய மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டார். 'ஷப்னம்' என்ற தொகுதி 1955இலும், 'ஸிந்தகி வாரஸ் ஹாய்' என்ற தொகுதி 1960-இலும், 'ரங் சேகதா தில்' என்ற தொகுதி 1970-இலும் வெளியாயின. ஷப்னம் என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளின் போக்கு பற்றி ஆசிரியர், ''எனது கதைகள் பொழுபோக்கு என்ற நோக்கத்தை எல்லையாகக் கொண்டு எழுதப்படாமல் புதிய தரமான நல்ல பழக்கங்களைக் கூறி பழைய நடைமுறைகள் பற்றிய தவறான கருத்துக்களை நீக்கும் போக்கில் எழுதப்பட்டுள்ளன'' என்று குறிப்பிடுகிறார். எவையெல்லாம் மறைபொருளாக உள்ளனவோ அதை மக்களின் பார்வைக்குக் கொண்டுவருதல் எழுத்தாளனின் கடமை. 'ஷப்னம்', 'ராதர்' என்ற இரு சிறுகதைத் தொகுதிகளில் அடங்கிய சிறுகதைகள் ஆசிரியரின் ஆளுமையையே கவர்ச்சியான முறையில் கூறுகின்றன. ஆனால்

அதை வெளிப்படுத்தும் நோக்கிலேயே கதையின் இயல்பான கருத்தோட்டம் இல்லாமல் ஆகிவிடுகிறது. 'ஸிந்தகி வ்ராஸ் ஹாய்' என்ற சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் குர்பக்ஷ் சிங், ''என் கதைகளில் உள்ள மிகை இயல்பான பாத்திரங்கள் சிலருக்கு அசாதாரணமானதாகத் தோன்றலாம். ஆனால் நான் அவர்களை நம்மைச் சுற்றியுள்ள வாழ்விலிருந்தே தேர்ந்தெடுத்திருக்கிறேன். நாம் வாழ்வில் முக்கியமல்ல என்று ஒதுக்கும் விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. பொதுவாக நமது அன்றாட வாழ்க்கை நமது சிந்தனைக்குட்பட்டே இருக்கிறது. ஆனால் பொதுமக்களைப் பற்றி எழுத முற்படும்போது அவர்களும் அசாதாரணமானவர்களாய் அமைந்து அவர்களைப் பற்றி எழுத முற்படும்போது, வாழ்க்கை வட்டம் மட்டும் விரிவுபடுத்தப்படுவதில்லை; உலகில் உள்ள தனிமை உணர்வும் குறைக்கப்பட்டுவிடுகிறது. வாழ்க்கையை நேசிப்பவனாக இருப்பதால் எனக்கு ஒவ்வொரு முகமும் அன்புடையதாகவும் பெருவிருப்பமூட்டுவதாகவும் தோன்றுகிறது. இக்காரணத்திற்காகவே நான் சாதாரண, அசாதாரண மக்களின் இன்ப துன்பங்களை வெளிப்படுத்துவதில் திருப்தியடைகிறேன்'' என்று கூறுகிறார்.

இரண்டாம் காலகட்டத்தில் குர்பக்ஷ் சிங் எழுதியுள்ள கதைகள் கருத்து வளர்ச்சியுடையனவாய் இருக்கின்றன. அவற்றுள் அமெரிக்கச் சிந்தனைகள் நீக்கப்பட்டும், இந்திய மக்களின் நிலையும் அதுகுறித்த வருத்தமும் விளக்கப்பட்டுள்ளன. இக்கதைகளை வாசித்தால் இக்கதாசிரியர் தனது சொந்த நாட்டுமக்களின் தாழ்ந்த நிலை குறித்து ஆழ்ந்த வருத்தம் கொண்டிருக்கிறார் என்பதை வாசகர்கள் உணர முடிகிறது. குர்பக்ஷ் சிங் இந்திய மக்களின் பிரச்சினைகளை மிகுதியும் ஆழ்ந்து ஆராய முயன்றிருக்கிறார். அவரது புதிய கதைகளில் அவர் முதலாளித்துவத்திற்கு எதிராகப் பொதுவுடைமையை மிகுதியும் புகழ்ந்து விளக்கமாகவும் தெளிவாகவும் பேசுகிறார்.

குர்பக்ஷ் சிங்கின் கதைகள் உத்திகளைப் பொறுத்தவரை பெரிதும் வெற்றியடையவில்லை. இதனை அவரே கூறியிருக்கிறார். இதற்குக் காரணங்கள் அவரது கதையை விளக்கிச் சொல்லும் திறமை, அவரது கருத்துக்களில் காணப்படும் ஆழம், செறிவு முதலியனவே எனலாம். சில நேரங்களில் அவர் தம் கதைகளில்

வேண்டாத விளக்கங்களைக் கூற ஆரம்பித்து விடுகிறார். அவற்றைக் குறுநாவல்கள் போலச் சொல்வதால் அது கதைப்பின்னலின் எல்லையை மீறிவிடுவதாக அமைகிறது. தனது சிறுகதைகளை ஆர்வமூட்டுவதாகவும் ஈர்க்கும் தன்மையுடையனவாகவும் அமைக்கத் தகுந்த சொற்களை அவர் உரைநடையில் கையாளுவது போலவே கையாளுகிறார். இவ்விலக்கிய வகையைப் பொறுத்தவரையில் இவர் மொழியைச் சிறப்பாகக் கையாண்டு பிற எழுத்தாளர்களைவிடச் சிறக்கிறார் எனலாம். இவர் வாசகர்களைக் கவரும் வகையில் கற்பனையைக் கையாளுவதால் இவரது சிறுகதை விவரிப்பு என்பது கவிதை என்ற எல்லைவரை போய்விடுகிறது. கவிஞரைப் போல இவர் தமது விளக்கத்தை உவமைகள், உருவகங்களால் அழகுபடுத்துகிறார். தனது பாத்திரங்களுக்குக் குறியீட்டுப் பெயர்கள் தருகிறார். 'பஞ்சாபி கஹனிகர்' (பஞ்சாபி சிறுகதை ஆசிரியர்கள்) என்ற நூலின் ஆசிரியரான டாக்டர் எஸ்.எஸ். உப்பாஸ் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். ''குர்பக்ஷ் சிங்கின் முக்கியமான தொண்டு நானக் சிங் போல பஞ்சாபிச் சிறுகதை வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றியதே; பஞ்சாபிச் சிறுகதையின் ஆரம்ப கால எழுத்தாளர்களில் ஒருவராக இருந்து அதன் வளர்ச்சியிலும் அவர் முக்கிய பங்கு வகித்திருக்கிறார். பஞ்சாபிச் சிறுகதைத் திறனாய்வாளர்கள் யாரும் இதனை மறுக்க முடியாது.''

சிறுகதைகளுக்கும் மேலாக,குர்பக்ஷ் சிங் ஒரு குறுநாவலும் ஒரு புதினமும் எழுதியிருக்கிறார்.அவை முறையே 'அன்வியாஹி மான்' (திருமணமாகாத தாய்),'ருக்கான் டி ஜிரன்ட்' (மரங்களின் சகிப்புச்சக்தி)என்பனஆகும்.அன்வியாஉறி மான் என்பது முதலில் 1938-இல் 'ப்ரீத் லாரி'யில் வெளியிடப்பட்டது. அதன்பின்னர் 'ப்ரீத் கஹானியனி'லும் அதன்பின் 1942-இல் தனி நூலாகவும் வெளியிடப்பட்டது. 1956 -ஆம் ஆண்டிலும், 1966ஆம் ஆண்டிலும் அதுவே திருந்திய பதிப்பாக மீண்டும் வெளியிடப்பட்டது. நான்காம் முறையாக 1943இல் வெளியிடப்பட்டபோது இந்நூல் பெரும் விமர்சனத்திற்குள்ளானது. இந்நூலின் முன்னுரையில் ஆசிரியர், ''என்னுடைய கதைகள் எதுவும் விமர்சனம் இல்லாமல் வாசிக்கப்பட முடியாது. ஏனெனில் இன்றுவரை நான் எனக்காக எதுவும் எழுதவில்லை. எனது எழுத்துக்களின் ஒவ்வொரு பகுதியும் சமுதாயத்தின் தவறான மதிப்புக்களில் உள்ள குறைகளை

நேரடியாகவோ மறைமுகமாகவோ சுட்டுவன. மனிதனே பிரச்சாரப்படுத்திக்கொள்ளும் தவறான மதிப்புக்கள் தவிர மனிதனது விதிகளில் எந்தவித துன்பமும் இல்லை என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். வாழ்வு என்பது ஒவ்வொருவருக்குமே மிகவும் விருப்பமான சம்பவம் ஆகும். வாழ்வதற்கு முன்பும் எந்தவிதப் பாடும் இல்லை; வாழ்விற்குப் பின்னும் எந்தவித துன்பமும் இருக்காது. துன்பத்தின் மொத்த வலையும் மனிதனாலேயே அவனது தவறான மதிப்புக்களாலும் நிரூபிக்கப்பட முடியாத, ஆதாரமற்ற மதிப்புக்களாலும் பின்னப்படுகின்றன. அவ்வலையை உடைத்தெறிய அவன் முற்படும்போதெல்லாம் அவனது வாழ்வு ஒரு தனிப்பட்ட படைப்பாக ஆகும்'' என்று கூறுகிறார். குறுநாவலின் முக்கிய பாத்திரமாகிய பிரபா தன்னுடன் முன்பு படித்த சித்தரஞ்சனைக் காவல் துறையினரின் கண்காணிப்பில் காணுகிறாள். அவன் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவன் என தவறாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறான். மறுநாள் காலை அவனைத் தூக்கிலிட இருக்கின்றனர். அவள் அவனுடன் சிறைக்குச் சென்று ஒரு தனிமனிதன் அநீதியின் காரணமாகத் துன்பம் அனுபவிக்கிறான் என்ற மனிதாபிமானத்தின் அடிப்படையில் அவனுடன் அந்த இரவில் தங்குகிறாள். ஆசிரியர், ''நாம் சிறிதளவாவது வென்றோம் என்ற நம்பிக்கை இல்லாவிடில் தூக்கிலிடப்பட்டு இறப்பது எவ்வளவு கடினமானது? சித்தரஞ்சனுக்கு இந்நம்பிக்கை ஊட்டுவதற்காகவே பிரபா அவளுக்குச் சற்றுமுன் வரை சித்தரஞ்சன் எந்த உறவுமில்லாதவனாக இருந்தும் தனது வளமான எதிர்காலம் முழுவதையும் அவனுக்கு அர்ப்பணிக்கிறாள். பிரபா தனது விருப்பத்திற்கேற்ப ஒரு கணவனைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அவள் யாரையாவது விரும்பினால் அந்நபரின் சம்மதத்தை அவள் எளிதில் பெற்றிருக்கக்கூடும். அவள் அன்றுவரை தனது இதயத்தை யாருக்கும் தராதவளாய் தனது உடலையும் யாருக்கும் அர்ப்பணிக்காதவளாய் விளங்கினாள். ஆனால் அவள் தனது முழு வாழ்க்கையையும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட ஒரு சிறைக் கைதியின் தனிமையான இரவுடன் அர்ப்பணிக்கத் தயாரானாள். அவனது இந்தத் தீர்மானத்தில் பாலுணர்வு குறித்த உள்ளுணர்வு இருந்திருக்குமேயானால், அவள் இந்த பெரிய தியாகத்துக்குத் தன்னை அர்ப்பணித்திருக்க முடியாது. அவளது வினோதமான இந்த

முடிவு அவளது தாம்பத்திய வாழ்வு ஒரே ஒரு முறைதான்; அதோடு முடிவுபெற்றுவிடும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இந்த இரவுக்குப் பின்னர் அவள் மீண்டும் யாருடனாவது உறவுகொள்ள விரும்பவில்லையெனில் அவள் காலம் முழுவதும் ஒரு விதவையாகவே காலம் கழிக்க வேண்டி இருக்கும். அவள் கருவுற்றாலும்கூட எல்லாவித பின் விளைவுகளையும் கருதியே ஒரு விதவையாக வாழத்தீர்மானிக்கிறாள்'' என்று எழுதுகிறார்.

சித்தரஞ்சனின் இறப்பிற்குப் பின்னர் தான் கருவுற்றிருப்பதை அவள் அறிந்தபோது அவள் தந்தை கருவைக் கலைத்துவிடுமாறு வற்புறுத்துகிறார். ஆனால் அவள் தன்னுள் வளரும் குழந்தையையே தனது நம்பிக்கையாகக் கருதி உலகை மனத்தெளிவுடன் எதிர்க்கத் தயாராகிறாள். ஆசிரியர், ''நம் சமுதாயத்தில் இப்படி மன வலிமையுடையவர்களாய், புனிதத்துவம் வாய்ந்தவர்களாய், தியாக உணர்வுடையவர்களாய் பிரபாவைப்போல எத்தனை பெண்களைப் பார்க்கமுடியும்? பிரபா என்ற இச் சான்று மனிதர்களை வலுவுள்ளவர்களாக்குகிறதா? அல்லது அழித்து விடுகிறதா?'' என்று கேட்கிறார். பிரபாவும் பெரிதான கோபத்துடன் எதிர்த்து ''சொல்லுங்கள்....சொல்லுங்கள் நான் ஒரு கறைபட்ட பெண்ணா? எனக்கு ஏன் நீதி இல்லை; நான் என்ன தவறு செய்தேன்? என்று வினாவெழுப்புகிறாள்.

ஒரு வகையில் பார்த்தால் இக் குறுநாவல் பிரபாவைப் போன்ற பெண்களுக்கு இடமில்லாததும் பிரபா போன்ற அழகான பாத்திரத்தை மதித்துப் போற்ற முடியாததுமான இச் சமுதாயத்திற்கு ஒரு சவால்.

குர்பக்ஷ் சிங் 'ருக்கன் தி ஜிரண்ட்' என்ற புதினத்தை 1973இல் எழுதினார். 'அன்னியாஹி மான்' என்ற குறுநாவலின் விரிவாக்கம் போல இப்புதினத்தின் கரு தோற்றமளிக்கிறது. புதினத்தின் முன்னுரையில் ஆசிரியர் எழுதுகிறார்: ''காதல் பற்றிய எனது கொள்கையைப் பற்றிப் பலர் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். சிலர் இக்கருத்து பிளேட்டோவின் கருத்தையே வெளிப்படையாகப் பாராட்டும் ஒன்று; ஆனால் அவருக்கு யாரையாவது அதன்மூலம் பெற்றுக்கொள்ளும் பெரு விருப்பம் இல்லை; அதில் பாலுணர்வு குறித்த திருப்தியை அவர் காணவில்லை என்று கூறுவர். சிலர் இதனைப் புதுக் கலப்பு என்றனர். ஆனால் என்னைப் பொறுத்தவரை எல்லாம் அதில் உள்ளடங்கியுள்ளன. காதல் வேறெதைப்

போலவுமல்லாமல் இயற்கையைப் போல மட்டுமே நிலைத்த கொள்கைகள், கருத்துக்களின் அடிப்படையில் எழுந்தது. காதலில் அளவுக்கு மீறிய ஆறுதலும், ஆன்மாக்களின் ஒற்றுமையும், நல்ல போக்கும், எதிர்பார்ப்புக்களும், ஒருவித போதையும் இருக்கின்றன. வாழ்க்கையில் வாழும் உண்மைப் பாத்திரங்களின் காதல் உணர்ச்சிக்கு நான் புதின வடிவைக் கொடுத்துப் படைத்திருக்கிறேன். எனது இப்புதினம் எனது நம்பிக்கையாகிய காதல் என்பது உடைமைப்படுத்த முயற்சிக்கும் ஒன்று அல்ல; ஆனால் அது ஒரு அங்கீகரிக்கும் செயல் என்பதைத் தெளிவாக்கி, காதலர்களின் சகிப்புத்தன்மைச் சக்தியின் இரகசியத்தை விளக்கமாகக் காட்டுமேயானால் நான் பெரிதும் திருப்தியடைவேன்.''

மூன்று இலட்சியப் பாத்திரங்களான பரோ, ரச்னா, தில்தார் ஆகியோரின் வாழ்க்கைப் போராட்டம் இப் புதினத்தில் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது. இப்புதினத்தில் நிகழும் கதையின் காலம் முப்பது ஆண்டுகள் ஆகும். இவரது பல கதைகளைப் போலவே இந்நாவலின் கருவும் இயற்கைக் காதலின் மேன்மையைக் காட்டுதலும் மக்களிடம் எவ்விடத்தும் காணப்படும் தவறான சமூக மதிப்புக்களின் தவற்றை நிரூபித்தலுமே ஆகும். 'பரோ' என்பவனே இப்புதினத்தின் தலைமைப் பாத்திரம் ஆவான். அவள் அவளது குழந்தைப் பருவத்திலேயே பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு ஒரு விலைமாதாகக்கூடிய பல்வேறு சூழல்களின் கட்டாயத்திற்குள்ளாகிறாள். அடிசன் என்பவன் ஒரு அழகான இளமையான பெண்ணைத் தன்னுடன் கூ'_வே எப்போதும் வைத்துக்கொள்ளும் விருப்பமுள்ள ஒரு ஆங்கிலேய அதிகாரி. அடிசனின் வேண்டுதலின் பேரில் ராய் சாகேப் என்பவன் பரோ அவனுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்கிறான். இதற்கிடையில் அவளுக்கு அந்த அதிகாரியின் மீது இயற்கைக் காதல் ஏற்படுகிறது. சில காலத்திற்குப் பின்னர் ராய்சாஹிப்புக்கு அவள் டில்தர் என்ற மகளைப் பெற்றெடுக்கிறாள். சில காலத்திற்குப் பின் ராய்சாஹிப்பின் மனைவி ரச்னா என்ற ஒரு பெண் குழந்தையைப் பெறுகிறாள். டில்தரும் ரச்னாவும் பெரியவர்களாக வளர்கின்றனர். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். ஆனால் ராய்சாஹிப் தன் மகளை ஒரு விலைமாதின் மகனுக்குத் திருமணம் செய்துதர விரும்பவில்லை. இப்புதினம் மொத்தத்தில் 'அன்னியா

மான்' என்ற குறுநாவலில் வரும் பிரபா திருமணம் என்ற சடங்கினின்றும் மீறி ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதைப் போலவே, பரோவின் இயற்கைக் காதலைச் சித்தரிக்கிறது. டிவ்தர், ரச்னா இருவருக்கிடையே எழும் இயற்கைக் காதலும் விளக்கமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அன்னியாமானுக்கும் இப்புதினத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு யாதெனின் குறுநாவலில் கதை பிரபாவின் மகன் பிறப்போடு முடிகிறது. ஆனால் புதினத்தில் பரோவின் மகன் ரச்னாவின் மீது ஆழ்ந்த காதல் கொண்டவனாக இறப்புவரை காட்டப்படுகிறான். தன் வாழ்க்கை முழுவதும் திருமணம் செய்யாதவனாகவே அவள் காலம் கழிக்கிறான். குர்பக்ஷ் சிங்கின் சிறுகதைகளைப் போலவே அவரது புதினமும் அபூர்வ, தனிப்பட்ட பாத்திரங்களைக் கொண்டு விளங்குகின்றன. அவரது சிறுகதைகளைப் போலவே புதினத்திலும் காதல் சித்திரிப்பும் அவரது விளக்கும் திறமையும் புதினத்தின் சிறப்புப் பண்புகளாக விளங்குகின்றன. பஞ்சாபி நாவல்களில் குர்பக்ஷ் சிங்கின் புதினங்கள் கருத்திலும் கருத்துவகைப்பாட்டிலும் தனிப்பட்டவை எனலாம்.

5. பஞ்சாபி நாடகத் தொண்டு

பஞ்சாப் மாநிலம் நாடகத் துறையைப் பொறுத்தவரை ஒரு பாரம்பரியமான நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. ஹரப்பா, மொஹஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியின்போது, மேடை அமைப்புக்களைக் கொண்ட நாடக அரங்கங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரமும், காளிதாசர் இயற்றிய சமஸ்கிருத நாடகங்களும் பிறவும் வடமேற்கு இந்திய சமஸ்கிருத அரங்க நாடகங்களின் பொற்காலத்திற்குத் தெளிவான சான்றுகளாவன. வேற்றுநாட்டுப் படைகள் அடிக்கடி பஞ்சாப்மீது நிகழ்த்திய படையெடுப்புக்களின் காரணமாக சமஸ்கிருத நாடகங்களின் வளர்ச்சி தடைப்பட்டு வீழ்ச்சி ஏற்பட்டது. 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நாட்டுப்புற நாடக மரபு ஒன்று வளர்ச்சியடைந்தது. அக்காலகட்டத்தில்தான் நாக்ல்ஸ், இராஸ்-லிலாஸ், இராம் லிலாஸ், நௌடன்கிஸ் முதலிய நாட்டுப்புற நாடகங்கள் தோன்றின. மேலும் நாட்டுப்புற மேடைகளில் கோபிசந்த், பர்தாரி ஆகியோரின் சிறுகதைகள் நடிக்கப்பட்டன.

1880இல் பம்பாயைச் சேர்ந்த நாடகக் கம்பெனிகள் பஞ்சாபிற்கு வருகை புரிந்தன. அக் கம்பெனிகள் ஆங்கில நாடகங்களின் தழுவல் நாடகங்கள், பௌராணிக் கதைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நாடகங்கள்,காதல் நாடகங்கள் முதலியவற்றை முதன்முதலாக உருது மொழியில் மேடைகளில் அரங்கேற்றின. இக் கம்பெனிகளில் மிகவும் பிரபலமடைந்த பல பெரிய தலைநகரங்களிலும் நகர்ப்பகுதிகளிலும் மேடைகள் போடப்பட்டன. இச் சூழல் 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நிலவியது. ஆங்கில ஏகாதிபத்தியச் சட்டம் விதிக்கப்பட்டபோது ஒரு புதிய இலக்கிய, பண்பாட்டு உணர்வு தலைதூக்கியது. சில ஆங்கில, சமஸ்கிருத நாடகங்கள் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. காளிதாசரின் 'சாகுந்தலம்' நாடகமும், 'ஒத்தெல்லோ', 'மெர்ச்சன்ட் ஆஃப் வெனிஸ்' நாடகங்களும் ஷேக்ஸ்பியரின் 'காமெடி ஆஃப் எரர்ஸ்' என்ற நாடகமும்

இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. பஞ்சாபி மொழியிலேயே சில சொந்த நாடகங்களும் இக்காலகட்டத்தில் எழுதப்பட்டன.

பஞ்சாபி மொழியில் எழுதப்பட்ட முதல் நாடகம் ஜியானி தித் சிங் (1849-1898) எழுதிய 'சுபன் நாடக்' என்ற நாடகம் ஆகும். இவரே 'ராஜ் ப்ரபோத் நாடக்' என்ற தலைப்பிலான கவிதை நாடகமும் எழுதினார். 1893இல் கிறிஸ்தவ மத ஊழியர் குழு 'மால்கா அஸ்தர்' என்ற தலைப்பிலான நாடகத்தை வெளியிட்டது. 1896இல் கால்ஸா ட்ராக்ட் ஸொஸைடி, 'ஸுக்வந்தி அதே சிந்தாமணி' என்ற குழந்தை மணம் குறித்த சிக்கல் தொடர்பான நாடகத்தை வெளியிட்டது. ஆனால் பாய் வீர்சிங் என்பவர் எழுதிய 'ராஜ லக்தத் சிங்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட நாடகத்தின் உள்ளடக்கம் மதம், சீர்திருத்தம் தொடர்பானதாகவும் அரங்க நாடக அமைப்பில் குறைபாடு உடையதாகவும் இருப்பினும் முதல் இலக்கியத் தரம்வாய்ந்த நாடகமாக அமைந்தது. இக்காலத்தில் பாவா புத் சிங், லாலா கிர்பா ஸாகர், ப்ரிஜ்லால் ஸாஸ்திரி ஆகியோரும் சில நாடகங்கள் எழுதினர். பாவா புத் சிங்கின் நாடகப் பாத்திரங்கள் புதுமைப் படைப்புக்களாக இருந்தபோதிலும் அவரது நாடகங்கள் அரங்க நாடகக் கோணத்தில் எழுதப்படவில்லை. லாலா கிர்பா சாகர் எழுதிய நாடகங்கள் ஆங்காங்கே ஆர்வமூட்டும் காட்சிகளையும் மெல்லிசைப் பாடல்களையும் கொண்டு விளங்கும் வரலாற்று நாடகங்களாய் அமைந்தன. ப்ரிஜ் லால் ஸாஸ்திரி நான்கு நாடகங்களை எழுதினார். அவற்றுள் இரு நாடகங்கள் கவிதை நாடகங்கள். இந்நாடகங்களுக்கான கதைகள் இந்திய வரலாற்றிலிருந்தும், இந்தியப் பழங்கதைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

பஞ்சாபி நாடகங்களில் சீர்திருத்தம் ஏற்படுத்திய பெருமை 'நோரா ரிச்சர்ட்ஸ்' என்ற பெண்மணியைச் சாரும். அவ்வம்மையார் 1911ஆம் ஆண்டில் தன் கணவருடன் இந்தியாவிற்கு வந்தார். அவரது கணவர் லாகூரில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவ்வம்மையார் புதிய போக்குகளைத் தம் நாடகத்தில் ஏற்படுத்தி மக்களுக்குத் தம் நாடகத்தில் ஆர்வம் ஏற்படுத்தினார். பஞ்சாபி நாடகங்கள் பலவற்றைக் கல்லூரி அரங்கங்களில் இயக்குனராக இருந்து மேடையேற்றினார். பேராசிரியர் அய்ஷ்வர் சந்தர் நந்தா நோரா ரிச்சர்ட்ஸின் நாடகங்களை விரும்பி அவற்றால்

ஈர்க்கப்பட்டவர். நோரா ரிச்சர்ட்ஸ், 'துல்ஹான்', 'பேபே ராம் பஜ்ஸி' என்ற இரு நாடகங்களை எழுதினார். சரஸ்வதி நாடகச் சங்கம் நோரா ரிச்சர்ட்ஸ் அம்மையாரால் 1914இல் லாகூரில் நிறுவப்பட்டது. அவரது கணவரது இறப்பிற்குப் பின்னர் திருமதி ரிச்சர்ட்ஸ் கங்ரா பள்ளத்தாக்கில் உள்ள அந்த்ரெடா என்ற ஊரில் தன் இறுதிக்காலம் வரை வாழ்ந்தார். அவர் தொடர்ந்து நடத்திய நாடகக் கழகம் பஞ்சாபி நாடக ஆசிரியர்களுக்குத் தூண்டு கோலாய் அமைந்தது.

பேராசிரியர் ஐஷ்வர் சந்தர் நந்தா (1892-1966) நவீன பஞ்சாபி நாடகத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். அவர் பஞ்சாபிச் சமுதாயத்தை ஊடுருவிச் சென்று கண்டு நடப்பியல் சார்ந்த நாடகங்களைத் தயாரித்தார். அவரது நாடகங்கள் ஓரங்க நாடகங்களாகவும், முழு நீள நாடகங்களாகவும் அமைந்தன. அவரது நாடகங்கள் பெரும்பாலும் மத்தியதர வர்க்கத்தின் பிரச்சினைகளைக் கருத்தாகக் கொண்டு விளங்கியதால் இவரது நாடகங்கள் வெற்றிகரமாக அரங்கேறின. ஐஷ்வர் சந்தர் நந்தாவுக்குப் பின்னர் குர்பக்ஷ் சிங் பஞ்சாபி நாடகத்தைப் பொறுத்தவரை மிக முக்கிய இடம் வகித்தார். நந்தா ஒரு நடப்பியல்வாதி. ஆனால் குர்பக்ஷ் சிங்கோ ஒரு இலட்சியவாதி. குர்பக்ஷ் சிங் பஞ்சாபி உரைநடையிலும், பஞ்சாபிச் சிறுகதையிலும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்ற சிறந்த எழுத்தாளராக மட்டுமல்லாமல் பஞ்சாபி நாடகத்திலும் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பெற்றவரும் ஆவார். அவர் ஒரு முழுநீள நாடகமும் பன்னிரெண்டு ஓரங்க நாடகங்களும் எழுதியிருக்கிறார். அவரது முழு நீள நாடகமாகிய 'ராஜ்குமாரி லதிகா' 1935இல் வெளியிடப்பட்டது. அவரது ஓரங்க நாடகங்கள் 'ப்ரீத் முகத்' (அன்புக் கிரீடம்) 1936ஆம் ஆண்டிலும், 'ப்ரீத் மணி' (அன்பு அணிகலன்) 1940ஆம் ஆண்டிலும், 'புரப் பச்சம்' (கிழக்கும் மேற்கும்) 1940ஆம் ஆண்டிலும், 'சதி ஹோன தா லிஷ்கரா' (நமது விதியின் ஒளிக்கீற்று) 1946ஆம் ஆண்டிலும், எட்டு ஓரங்க நாடகங்களாகிய 'ஜல்-புத்ரி தா வயா' (அலைமகளின் திருமணம்), 'தோ ரதன்' (இரு இரவுகள்), 'சதுர் காமா' (புத்திசாலி வேலைக்காரன்), 'வில்லியம் டெல், தில்ராணி, கோத்ரே தி ரோட்டி' (சிறு தானிய ரொட்டி), 'தோடியா கபா தி ஜ' (ஓ! பஞ்சு மொட்டு!), 'விசாரியன்-மிலானி குர்சி' (பிரிந்தவர்களை ஒன்றிணைக்கும் நாற்காலி), அனைத்தும் 'கோத்ரே தி ரோட்டி தே ஹொர் இகாங்கி' என்ற தலைப்பிட்ட நூலில் வெளிவந்துள்ளன. ஓரங்க

நாடகங்களடங்கிய இத்தொகுப்பில் இத்தொகுப்பு வெளியான வருடம் குறிப்பிடப்படவில்லை.

'ராஜ்குமாரி லதிகா', 'ப்ரீத் முகத்', 'புராப் தே பச்சம்', ஆகிய நாடகங்கள் ஒரு அமெரிக்க நாடகச் சங்கத்திற்காக 1923இல் எழுதப்பட்டவை. அதைத் தொடர்ந்து பஞ்சாபி மொழியில் இவை மொழிபெயர்க்கப்பட்டு 'ப்ரீத் லாரி'யின் முதல் தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளன. அவை குர்பக்ஷ் சிங் மிக இளமையாய் இருந்தபோது அதாவது அவருக்கு இருபத்தெட்டு வயது மட்டுமே ஆனபோது காதல், இலட்சியம் முதலியவற்றால் மனச் சங்கடத்தில் ஈடுபட்டிருந்தபோது எழுதப்பட்டவை. 'ராஜ்குமாரி லதிகா' என்ற நூலின் முன்னுரையில் குர்பக்ஷ் சிங், ''ராஜ்குமாரி லதிகாவின் சில கால வாழ்க்கை ஒரு கதையல்ல. பொழுதுபோக்கிற்காகப் புனையப்பட்ட ஒரு பின்னல் அல்ல. அது அன்புக்காக ஏங்கிய ஒரு இதயத்தின் துடிதுடிப்பு ஆகும். லதிகா போன்றோர் பிறந்திருத்தல் என்பது (வாழ்க்கை நிலைப்பாடு) வாழ்தல் என்பதற்காக மட்டுமோ அல்லது அமுங்கிப்போன உண்மையை வெளிப்படுத்தும் வெற்றியல்லாத முயற்சியுடைய ஒரு குழுவின் பணியை முடிக்கவோ அல்ல. அவர்கள் தங்களைச் சுற்றியிருக்கும் சூழலில் ஒரு இயக்கத்தை ஏற்படுத்தவும், பழைய கரைகளினிடையே ஓடும் ஆழ்ந்த நடப்பு வாழ்க்கையோடு புது நிலங்களிலே வெள்ளப் பெருக்கெடுத்து ஓடச்செய்யவும் மனித மனத்தின் தளர்ந்த நரம்புகளை இறுக்கி அதன்மூலம் புதிய இசையையும் புது அன்புகளையும் புது சோகங்களையும், புது ஆசைகளையும் உருவாக்கவுமே வந்தனர். அவர்களுக்குள் அனைவரையும் தங்களுக்குப் பிடித்தவர்களாக்கும் ஒரு செய்தித் துடிப்பு இருந்துகொண்டே இருந்தது. அவர்களது துடிதுடிப்பிற்குப் பின்னர் அவர்கள் இறந்தனர். அவர்கள் சாலையின் ஓரத்தில் உள்ள மின்விளக்கு வழிப்போக்கர்களுக்காக வழியைப் பிரகாசிக்கச் செய்வது போன்றவர்கள் அல்ல. அவர்கள் வானில் தோன்றி இருட்டுலகில் சரியான வழியைத் தேடி அலைபவர்களுக்கு வழியைக் காட்டும் ஒளி வெள்ளம் போன்றவர்கள்'' என்று குறிப்பிடுகிறார்.

அவரது 'ராஜ்குமாரி லதிகா' நாடகத்தின் மூலம் அரசன் பால்ராஜின் மகள் லதிகா என்பவள், படித்த முற்போக்கு இளைஞனாகிய மந்திர் என்பவன் ஆகிய இரு இலட்சியப்

பாத்திரங்களைப் படைத்துக் காட்டியிருக்கிறார். மக்கள் மந்திர் பக்கம் இருக்கின்றனர். மன்னனின் ஆட்கள் குறிப்பாக மன்மத் என்ற அமைச்சன் மந்திரின் செயல்களை வலுவிழக்கச் செய்கின்றான். அந்த இளம் வயது முற்போக்குவாதி மன்னனின் ஆட்களால் காயப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு மன்னனின் மகள் வருந்துகின்றாள். இளவரசியின் உதவியுடன் மந்திர் பெரிய மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகிறான். இளவரசி அவன் மீது காதல் வயப்படுகிறாள். அவள் இறந்துபோன தன் தாயைப் போலவே, தனது நாட்டு மக்களின் நலம் விரும்புபவள். அவள் ஒரு கொடியைப் போல (லதா), ஒரு நின்று நிலைத்த மரத்தின் (மந்திர்) துணையைப் பெறுகிறாள். தனது மகளின் எண்ணத்தினை அறிந்த மன்னன், மந்திர் தனது சீர்திருத்தச் செயல்களை விட்டுவிடுவதானால் தன் மகளை மந்திருக்கு மணம் முடித்துத் தர இசைகிறான். மந்திர் மன்னனின் விருப்பத்தை மறுத்து, ''அரசே, இளவரசி நான் அடையக் கூடியவள் அல்ல. அவளிடமிருந்து வரும் சில அன்புக் கதிர்கள் எனக்கு உயிரூட்டுகின்றன. ஆனால் அவளது கையின் எஜமானனாக இருப்பது என்பது சூரிய நெருப்பைக் கையில் பிடிப்பதற்கு ஒக்கும். அவளது அன்பே எனக்கு அவளிடமிருந்து கிடைத்த பரிசாகும். அதையே நான் எடுத்துக்கொள்ள முடியுமே தவிர அவளை அல்ல'' என்று கூறுகிறான். அரசன் அவன் தன் எதிரில் தைரியமாக வந்தாலும் கூட, அவனைப் பல கொடிய அச்சுறுத்தும் சம்பவங்களினால் அச்சுறுத்துகிறான். ஒருநாள் லதிகா, மந்திரைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தபோது மன்னன் அதை அறிந்து லதிகாவின் வன்மையான எதிரப்புக்கிடையிலும் அவளைச் சுட்டுக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்துகிறான். மந்திரைக் காப்பாற்றும் முயற்சியில் லதிகா தானே தன் தந்தையின் குண்டுக்கு இரையாகிறான். மன்னன் தான் என்ன செய்துவிட்டோம் என்று அறிந்து உணர்விழந்து கீழே விழுந்தான். மந்திர் அவனது கைத்துப்பாக்கியை எடுத்து இரண்டாவது குண்டினால் தன்னைத் தானே கொன்று கொள்கிறான்.

இந்நாடகத்தில் லதிகா தன் கொள்கையிலிருந்து சற்றும் பின்வாங்காத, தளராத ஒரு பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளாள். அவள் தன் தோழி ஆஷாவை விளித்துப் பின்வருமாறு கூறுகிறாள். ''நான் பச்சை வயல்வெளிகளின் வரப்புகளில் நடக்க விரும்புகிறேன். நான் பெர்சியன் வாகன ஆசனத்தில் அமர விரும்புகிறேன்; நான் உழைக்கும் மக்கள் வாழும் பகுதியில் உள்ள

மந்திரின் குடிசையில் வாழவும், மந்திருக்குரிய மதிய உணவை அவனது வயலுக்கு எடுத்துச் செல்லவும், அவனது துணிகளைச் சலவை செய்யவும், அவனது கிராமத்தில் உள்ள சகோதரிகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் கல்வி கற்றுத் தரவும் விரும்புகிறேன். அந்தக் கிராம மக்கள் அனைவரின் அன்பையும் பெற ஆசைப்படுகிறேன். அக்கிராமத்தில் மலர்ந்த ஒரு மலராக நான் இருக்க விரும்புகிறேன். ஆஷா, நான் அரண்மனையில் இருக்கும் காவலாளியைக் குறித்து அஞ்சுகிறேன். மந்திர் ஒரு மன்னனாக இருக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை. நிறைய மன்னர்கள் இருக்கிறார்கள்; ஆனால் மந்திர் அபூர்வமானவன்...இவ் வார்த்தைகள் என் இதயத்திலிருந்து வரவில்லை. அவை என் ஆன்மாவின் அழுகுரல் ஆவன. ஆன்மா கண்ணுக்குத் தெரிவதில்லை. அதன் இன்ப, துன்பங்களும் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆன்மாவின் மகிழ்ச்சி அரண்மனைகளிலோ, மந்திரின் அழகிய உடலிலோ இல்லை, மந்திர் எனது கடந்தகால வாழ்வின் மென்மையான அன்புடன் கூடிய ஏக்கம், ஆசை முதலியவற்றின் பிரதிபலிப்பு மட்டுமே. எனது வெளியில் சொல்லமுடியாத செய்திகளுக்கு வார்த்தைகளால் சொல்லப்படாத பதில் மந்திர். மந்திர் எனது வாழ்வும் இலட்சியமும் ஆவான். இந்தச் சுவர்களுக்கு நடுவில் வாழும் இம் மனிதர்கள் என்னைப் பற்றிக் கணிப்பது என் நிழலையே ஆகும். மந்திரே என் உண்மை. நான் என் இடத்தைக் கண்டுபிடித்து விட்டேன். இவ்வாழ்க்கையில் என் தேடுதல் முடிந்து விட்டது. வாழ்ந்துகொண்டே இருத்தல் என்பது பயனில்லாதது''.

லதிகாவின் மேற்கூறிய பேச்சில் அவளது இலட்சியம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இவள் உடல், உள ஆசைகளுக்கு அப்பாற்பட்டவளாக விளங்குகிறாள். மந்திர் மீது அவள் கொண்டிருந்த இயற்கைக் காதல் உண்மையில் எல்லா உடல், உள வரம்பினைக் கடந்த தெய்வீகக் காதலாகும். 'ராஜ்குமாரி லதிகா' நான்கு அங்கங்களைக் கொண்ட நாடகம் ஆகும். முதல் அங்கத்தில் ஐந்து காட்சிகளும், இரண்டாம் அங்கத்தில் இரண்டு காட்சிகளும், மூன்றாம் அங்கத்தில் நான்கு காட்சிகளும், நான்காம் அங்கத்தில் இரண்டு காட்சிகளும் உள்ளன. ஆசிரியர், பாத்திரங்கள் அனைத்திற்கும் தகுந்த பெயர்களைக் கொடுத்திருக்கிறார்.

'ப்ரீத் முகத்' என்ற நாடகத்திற்கான கதை மக்களிடையே மிகவும் செல்வாக்குப்பெற்ற இராஜா அரிச்சந்திரன் கதையிலிருந்து

எடுக்கப்பட்டுள்ளது. அரிச்சந்திரன் தன் வாழ்நாள் முழுவதும் சத்தியத்தின் பாதையில் நிலைத்து நின்றவன். மூலக்கதையிலிருந்து நாடகம் சிறிது விலகிச் செல்கிறது. மூலக்கதையில் மையப் பாத்திரம் இராஜா அரிச்சந்திரன் ஆவார். இந்நாடகத்தில் ஆசிரியர் அரிச்சந்திரன் மனைவி தாராவைத் தலைமைப் பாத்திரமாக்கி இருக்கிறார். மூலக்கதை வாழ்வில் உண்மையைக் கடைப்பிடிப்பதையும் குருவை மதிப்பதையும் போதிக்கிறது. ஆனால் இந்நாடகம் இயற்கைக் காதலையும், வாழ்வின் நம்பிக்கையையும் போதிக்கிறது. ஆசிரியர் தாராவின் தலையில் அன்பின் கிரீடத்தை வைக்கிறார். அரிச்சந்திரர் ஒரு மிகப்பெரிய நிலையை அடைந்துவிட்ட போதிலும் அவரது ஆன்மா பல அரிய பெரிய முயற்சிகளுடன் அல்லலுறுவதுபோல் தோன்றுகிறது. அவரால் தனது அரசையே துறக்கவும் தனது மனைவியையும் மகனையும் துறக்கவும் முடிந்தது. அவருக்கு உண்மையையே பேசவும், கடவுளின் விருப்பத்தையே நிராகரிக்கும் வல்லமையும் இருந்தன. ஆனால் தாரா எந்தவித தியாகமும் செய்யவில்லை. அவள் அரசையே துறந்தாளா? கடவுளின் விருப்பத்தை நிராகரித்தாளா? உண்மையில் தாராவும் அரிச்சந்திரன் செய்த தியாகத்தின் அளவுக்கே சென்றுவிட்டாள். அவள் தன் கணவனை விற்கவோ மகளை எறிந்துவிடவோ செய்யவில்லை.

நாடகத்தில் தாரா யார் யார் அன்பினால் வழி நடத்தப்படுகிறார்களோ அவர்கள் வழிதவறிப் போவதில்லை என்று அறிவிக்கிறாள். அரிச்சந்திரனது குணநலத்திற்கான மகுடம் அரிச்சந்திரன் தலையில் வைக்கப்படுகிறது. ஆனால் தாரா தன் தலையில் அன்பின் கிரீடத்தை வைத்திருக்கிறாள். அரிச்சந்திரன் விஸ்வாமித்திரரின் சீடர்; ஆனால் தாரா விஸ்வாமித்திரரின் குருவாகத் தோன்றுகிறாள். விஸ்வாமித்திரர் தாராவை வாழ்த்தி அவளிடமிருந்து வாழ்த்து வேண்டிக் கையேந்த நிற்கிறார். நாடகத்தில் அரிச்சந்திரர் தாராவை விளித்துப் பின்வருமாறு பேசும் பகுதி குறிப்பிடத்தக்கது; ''ஓ! தாரா, உனது அன்பின் நிஜமான இயற்கையும் எனது வார்த்தைகளின் உள்ளீடற்ற உண்மையும் சந்தித்து எதிரெதிரே முரண்பட்டு நிற்கின்றன. அந்த முரணின் ஓசையில் நான் பின்வரும் சப்தத்தைக் கேட்கிறேன்-வெறும் வார்த்தைகளின் உண்மையானது உண்மையில் சத்தியமன்று-அது ஒரு கெட்டதல்லாத நல்ல பழக்கவழக்கமே ஆகும்.''

நாடகம் அரசன் அரிச்சந்திரன், அவன் மனைவி தாரா, முனிவர் விஸ்வாமித்திரர் (வயதான பாத்திரமாக) ஆகிய மூன்று பாத்திரங்களைச் சுற்றிச் சுற்றியே அமைந்துள்ளது.

'புரப் பச்சம்' (கிழக்கும் மேற்கும்) என்ற நாடகமும் ராஜ்குமாரி லதிகாவைப் போலவே ஒரு ஆங்கில நாடகச் சங்கத்திற்காக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நாடகமாகும். ஆனால் 'ராஜகுமாரி லதிகா' ஒரு துன்பியல் நாடகமாகும். சங்க அமைப்பாளர்கள் குர்பக்ஷ் சிங்கை புது நாடகத்தை ஒரு வேறுபட்ட சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு எழுதித் தருமாறு வேண்டிக் கொண்டனர். இந்த நாடகத்தில் இன்றைய அமெரிக்க இளைஞர்களின் பின்விளைவை அறியாத மிகத் தைரியமான வேகத்தையும், இந்திய இளைஞர்களின் மனதின் ஆழமான ஆசைகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க இளைஞர்களின் அவசர உணர்வு அமெரிக்கர்களின் இயல்பல்ல; அவர்களின் போக்கின் வகையில் ஒருவகைப் போக்கே ஆகும். அமெரிக்கர்கள் இதுகுறித்துச் சற்றும் கவலைப்படாமல் மெல்லச் சிரித்துக் கொண்டனர். இந்த நாடகம் இந்திய மக்களின் மன ஆசைகளைப் பற்றிய சித்தரிப்பு மட்டுமன்று. இந்நாடகம் இந்தியப் பெண்களைப் பற்றியும் அவர்களது ஆதரவற்ற இழிநிலையையும் சித்திரிக்கின்றது. இராஜ் ஸாஹிப் மதன் மோகன் என்பவரது ஒரே மகனான ஷாம் சுந்தர் என்பவர் இங்கிலாந்து சென்றுதிரும்பிவரும் படித்த இளைஞர். இவர் ஏற்கனவே ஒரு இந்தியப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர். இங்கிலாந்திலிருந்து திரும்பி வரும்போது, ஒரு ஆங்கிலேயப் பெண்ணைத் தன் மனைவியாக உடனழைத்துக் கொண்டு வந்து அவளுடன் தனியே குடும்பம் நடத்துகிறார். அவரது பெற்றோர் இதுகுறித்துப் பெரிதும் வருந்துகின்றனர். அவர் தனக்குப் பண உதவி செய்யும்படிக் கேட்டுக்கொள்ளும்போது அவரது இந்திய மனைவி மட்டுமே அவரைத் தன் சொந்த தெய்வமாகப் பாவித்து அவருக்கு உதவி செய்ய முன் வருகிறாள். இறுதியில் அவரது ஆங்கிலேய மனைவி அவரைவிட்டு வெளியேறுகிறாள். அவர் மனம் வருந்தித் தன்னை உணர்ந்து அதன்பின் தன் குடுமபத்தோடு மகிழ்ச்சியாக வாழ்கிறார்.

'ப்ரீத் மணி' (அன்பின் அணிகலன்) ஓர் உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட நாடகம் ஆகும். இந்நாடகத்தின் நோக்கம் மற்றவர்கள் பார்வையில் ஒரு குழுவை அல்லது ஒரு

தனிமனிதனைக் குறைத்து மதிப்பிட வைப்பதன்று. ஒரு சிறப்பான நோக்கில் ஒரு விழிப்புணர்வை உண்டாக்குவதே ஆகும். இந்நாடகத்தின் கதை 'ஹிர்தே நாத்' என்ற ஓர் இளைஞனையும், 'ப்ரீத் மணி' என்ற ஓர் இளம்பெண்ணையும் சுற்றிச் சுற்றியே அமைகிறது. இவ்விருவரும் வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவதால் திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றனர். இருவரது உறவினர்களும் இதனை எதிர்க்கின்றனர். ஒருநாள் தனது காதலனுடன் அப்பெண் உடன்போக்கு நிகழ்த்திவிடுகின்றாள். அப்பெண்ணின் இனத்தார் இப்பிரச்சினையை நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லும் வகையில் ஒரு குழுவை உருவாக்குகின்றனர். அக்குழுவின் ஆலோசனை யின்படி சித்ராபதி என்பவன் நீதிமன்றத்தில் அப்பெண்ணைத் தன் மனைவி என்று தவறான சாட்சி சொல்கிறான். ஒரு மருத்துவரும் தானும் முன்பு சித்ராபதிக்கும் அப்பெண்ணுக்கும் நடந்த திருமணத்தில் கலந்துகொண்டேன் என்று பொய்ச்சாட்சி சொல்கிறான். இறுதியில், நீதிமன்றம் இவ்வழக்கிற்கு அளித்த தீர்ப்பின்படி அப்பெண் தன் பொய்க் கணவனுடன் போகுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறாள். ப்ரீத்மணி தற்கொலை செய்துகொள்ள முயலும்போது பொய்க் கணவன் தனது குற்றத்தைச் சாட்சியுடன் நீதிமன்றத்தில் வெளிப்படுத்த பிரச்சினை துன்பத்தில் முடிகிறது. ப்ரீத்மணி தன்னைத் தானே கத்தியால் குத்திக்கொள்ள முற்படும்போது அவள் நிகழ்த்தும் கூற்று மிகவும் மகத்தானது. அவள் கூறுகிறாள், ''நான் நீதிபதிகளின் நியாயத்தையும், மதவாதிகளின் மதத்தையும், பெற்றோர்களின் அன்பையும் கண்கூடாகக் கண்டேன். இப்படிப்பட்ட சமுதாயத்தில் எனக்கு வாழப் பிடிக்கவில்லை...நான் ஒரு சுதந்திரப் பெண்-....நான் ஒரு சுதந்திரப் பெண்ணாகச் சாகலாம்.....என் கணவர், என் குழந்தை இக்கொடுமைக்குக் கட்டாயம் பழி தீர்ப்பார்கள். உங்கள் சொந்தப் பிள்ளைகள் என் இரத்தத்திற்காக உங்களிடம் பதில் கேட்பார்கள். நான் உங்கள் குற்றங்களை அவமதிக்கிறேன்.....''

'கோத்ரே தி ரோட்டி தே ஹொர் இகங்கி' என்ற நூல் எட்டு ஓரங்க நாடகங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் 'கோத்ரே டி ரோட்டி' (சிறு தானிய ரொட்டி), 'தோ ரதன்' (இரு இரவுகள்) ஆகிய இரு நாடகங்களும் வரலாற்று நாடகங்கள். முதலாவது குருநானக்கின் வாழ்க்கையில் நடைபெற்றது ஒரு சம்பவத்தையும்

இரண்டாவது குரு கோபிந் சிங்கின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தையும் பற்றியன. இருவருமே மனித இனத்தின் தலைவர்களாக இருந்தவர்கள். நமது தேசிய வரலாற்றில் இவ்விரு தலைவர்களுமே பல புதுக் கொள்கைகள் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்கள். அவர்களது பொதுவான கண்ணோட்டத்தில் அவர்கள் சாதி, இனம் என்ற குறிப்பிட்ட வட்டத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததில்லை. அவர்களது செய்தி மனித இனம் முழுமைக்கும் உரியதாக அமைந்திருந்தது.

'கோத்ரே டி ரோட்டி' என்ற நாடகம் பல்வேறு தீய வழிகளில் சம்பாதிக்கப்பட்ட பணக்காரர்களின் உணவையும், நேர்மையாகச் சம்பாதித்துத் தேடப்பட்ட ஏழைகளின் உணவையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. குரு நானக், பாய் லாலோ என்ற உண்மையாக உழைக்கும் உழைப்பாளி ஒருவனோடு தங்குகிறார். அவ்வுழைப்பாளி தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன். மாலிக் பாகோ என்ற அரண்மனைத் தலைவர் குருவைத் தன் அரண்மனையில் தன்னால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மிகப் பெரிய விருந்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறார். குரு 'பாய் லாலோ' சமைத்துள்ள சிறு தானிய ரொட்டியை விரும்புகிறார். குரு விருந்தில் கலந்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படும்போது அவர் ஏழைகள் உணவில் பால் கலந்திருக்கிறது. பணக்காரர்களின் உணவில் இரத்தம் கலந்திருக்கிறது என்று எல்லோருக்கும் வெளிப்படுத்துகிறார். இந்நாடகத்திலிருந்து பெறப்படும் முடிவுகள் மனிதாபிமானம் மனித இனத்தின் ஒரு சிறந்த அடையாளம்; உழைப்பில் இரண்டறக் கலத்தல் என்பது பெரிய மகத்துவம் வாய்ந்தது; பிறரது கடினஉழைப்பைத் திருடுதல் என்பது இரத்தத்தைக் குடிப்பதைவிட எந்தவிதத்திலும் குறைந்ததல்ல என்பன ஆகும்.

'தோ ரதன்' இரு வெவ்வேறு இரவுகளில் நடைபெறும் இரு நல்ல செயல்களை விளக்குகிறது. முதல் நாள் இரவில் பாதன் இனத்தைச் சேர்ந்த ஒருவன் மொகலாயப் படையின் முற்றுகையின்போது குரு கோபிந்த் சிங்கைக் காப்பாற்றுகிறான். இரண்டாம் நாள் இரவில், பிரிவினையின் போது அங்கு வாழும் சீக்கியர்களால் பல இஸ்லாமியக் குடும்பங்கள் பாதனின் இனப்பற்றையும் அதேஇடத்தில் அவன் செய்த தியாகத்தையும் நினைவுகூறும் வகையில் காப்பாற்றப்படுகின்றன. இந் நாடகத்தி

லிருந்து பெறப்படும் முடிவுகள் விருந்தோம்பலின் உயர்ந்த அறம், மனித நட்த்தையின் இரக்கம், மனித இன ஒருமைப்பாடு முதலியன.

'ஜல்-புத்ரி தா வயா' என்ற நாடகம் ஓர் இளைஞனைப் பற்றிய கதை. அவன் கற்பனை உலகில் சஞ்சரிக்கும் ஒருவன் ஆவான். அவனது திருமணத்திற்கென நிச்சயிக்கப்பட்ட பெண் திருமணத்திற்கு முந்திய நாள் மாலையில் பாம்பு கடித்து இறந்துவிடுகிறாள். அவன் அவளது ஆவி ஏரியில் நீரலைகள் மீது சஞ்சரிப்பதாகக் கற்பனை பண்ணுகிறான். எப்படியோ அவள் இன்னும் உயிருடன் இருப்பதாகவே அவன் நம்புகிறான். ஜலக்கன்னியின் மீது அவன் கொண்ட அளவுகடந்த காதல் இறுதியில் அவன் தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணைப் போலவே இருந்த அவளது தங்கையை மணக்கும்போது அவளுக்குப் பரிசாக அளிக்கப்படுகிறது. 'சதுர் காமா' என்ற நாடகம் சீனக் கதையின் தழுவல். இந்நாடகம் பதவியிலிருக்கும் அதிகாரவர்க்கத்தின் கொடூரத்தனத்தைச் சித்திரிப்பதுடன் விதியின் உதவியற்ற தன்மையையும் சித்திரிக்கிறது. 'வில்லியம் டெல்' ஒரு ஸ்விஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு வீரனையும் அவன் வேற்று நாட்டவர்களின் கொடூர அதிகாரத்தினின்று தனது நாட்டை மீட்ட தேசப்பற்றையும் காட்டுகிறது. அவன் வில்வித்தையில் தேர்ச்சிபெற்ற சிறந்த வில்லாளனும் குறிபார்த்துச் சுடுவதில் வல்லவனும் ஆவான். இந் நாடகம் வேற்றுமை பாராட்டுதல் கூடாது என்ற உணர்வை நம்முன் தோற்றுவிப்பதுடன் தன்னம்பிக்கை, இயற்கையின் மீது காதல், புகழ்மீது பற்றின்மை, மக்கள் சக்தியில் நம்பிக்கை முதலிய உணர்வுகளையும் நம்முன் எழச் செய்கிறது.

'தில் ராணி' ஓர் இளவரசியின் உண்மையையும் அரண்மனைச் சேவகனின் உண்மையின்மையையும் காட்டுகிறது. 'தோடியா கபா திஅய்' என்பது ஒரு சிறுநாடகம். பருத்தி மொட்டு, சூரியன், வசந்தம் முதலியவற்றைக் கொண்டும் இளைஞர்களைப் பாத்திரங்களாகக் கொண்டும் படைக்கப்பட்டுள்ள நாடகம் ஆகும். இளைஞர்கள் பருத்தி மொட்டை நாட்டின் வளம் சேர்க்க மலரவேண்டுமாய் வரவேற்கின்றனர். 'விச்சரியின்-மிலானி குர்சி' மீண்டும் வெள்ளையர் ஆண்ட இந்தியாவைக் காட்டி அக்காலத்தில் ஆங்கிலேய வாழ்க்கைமீது இந்திய அதிகாரிகளுக்கு இருந்த மோகத்தைக் காட்டுகிறது. இரு தம்பதிகள் மற்றொரு

தம்பதியரைப்போலத் தாங்களும் வாழவிரும்பி அவர்கள் வாழ்க்கைமுறையைத் தாங்களும் பின்பற்றுகின்றனர். அதன் விளைவு குடும்ப வாழ்வில் அமைதி குலைகிறது. இறுதியில் ஒரு சிறு விபத்து மேலைநாட்டுப் பண்பாட்டினால் விளையும் குறைபாடுகளைக் காட்டி, இல்லத்தில் அமைதி நிலவ உதவுகிறது. 'கோத்ரே தி ரோட்டி தே ஹொர் இகாங்கி' தொகுப்பில் அடங்கும் மேலே குறிப்பிட்ட எட்டு சிறு நாடகங்களும் இயற்கைக் காதலின் வெவ்வேறு கோணங்களைச் சித்திரித்துக் காட்டுகின்றன.

'சதி ஹோனி தா விஷ்கரா' (நமது விதியின் ஒளிக்கீற்று) என்ற நாடகம் ஆசிரியரின் பரந்த பார்வையைக் காட்டுகிறது. இந்நாடகம் 1946ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் ப்ரீத் நகரில் ஆண்டுவிழாவின்போது நடிக்கப்பட்டது. ஆசிரியர் இந்நாடகத்தில் உழைக்கும் வர்க்கத்தினர் தங்கள் உரிமைக்காகப் போராடும் போராட்டத்தினைக் காட்டுகின்றார். அவர்கள் முதலாளித்துவப் பிரபுக்களையும், மத குருமார்களையும் சந்திக்கும் துணிச்சல் உடையவர்களாக விழிப்புணர்வு உடையவர்களாகக் காட்டப்படுகின்றனர்.

6. இதழாளராக

ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் பஞ்சாப் இணைக்கப்பட்ட பின்பு, கிறிஸ்தவ மத ஊழியர் குழு செல்வாக்குப் பெற்றது. மேலும் புதிய அரசின் 'பிரிவினை ஆட்சி' கொள்கையினால் பல்வேறு மதங்களுக்கிடையே நாட்டில் எதிரெதிர் மோதல்கள் நடைபெற்றன. மதம் குறித்த புது விழிப்புணர்வு, அச்சகங்கள் நிறுவப்பட்டமை முதலியன பஞ்சாபில் இதழியல் தோன்றக் காரணமாயிற்று. சிங் சபை இயக்கம் சீக்கியர்களிடையே அவர்களது மதப்பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திற்று. இதற்காக பஞ்சாப் செய்திப் பத்திரிகைகளின் வெளியீடு அவசியமாயிற்று. செய்திப் பத்திரிகை லாகூரில் உள்ள ஓரியண்டல் கல்லூரிப் பேராசிரியர் குர்முக்சிங் என்பவர் குர்முகி அக்பர் என்பவருடன் இணைந்து பணியாற்றியதால் தோற்றம் பெற்றது. பல்வேறு மதங்கள், சீர்திருத்தங்கள், கல்வி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் 19ஆம் நூற்றாண்டின் கடந்த இரு பத்தாண்டுகளில் வெளிவந்தன. மிகவும் பிரபலமான பஞ்சாப் வார இதழாகிய 'கல்சா சமாச்சார்' 1899இல் தோன்றியது. அகாலி இயக்கம், இந்திய சுதந்திர இயக்கம் முதலியவை மேலும் பஞ்சாப் இதழியலை வளர்த்தன. 1926இல் 'மௌஜி' என்ற இதழும் அதன்பின் ஒரு வருடம் கழித்து 'ஃபடே' என்ற இதழும் தோன்றின. இவ்வார இதழ்கள் கட்டுரைகள், கவிதைகள், வேறுபட்ட கருத்துக்கள் முதலியவற்றை வெளியிட்டு பஞ்சாபி மொழியும் இலக்கியமும் பெரிதும் வளரக் காரணமாயின. மாத இதழ்களாகிய 'ப்ரிதம்' 1923ஆம் ஆண்டிலும் 'புல்வாரி' 1924 ஆம் ஆண்டிலும் ஆரம்பமாயின. இவ்விதழ்கள் பல பஞ்சாபி எழுத்தாளர்கள் பலரை முன்னுக்குக் கொண்டுவரவும் அவர்களை உருவாக்கவும் உதவின. வேறு பல இதழ்கள் குர்பக்ஷ் சிங் தோற்றுவித்த பிரபல அங்கமாகிய 'ப்ரீத் லாரி'க்கு முன் தோன்றின.

குர்பக்ஷ் சிங்கின் அமெரிக்க நண்பர்களில் ஒருவரான திரு ஹெரால்டு இயாகோ, குர்பக்ஷ் சிங்குக்கு 1933இல் ஒரு கடிதம் எழுதினார். அதில் ஒரு சிறுகதைத் தொகுப்பைத் தான்

வெளியிட்டதாகவும் அதில் குர்பக்ஷ் சிங்கின் 'உண்மையுடனிருத்தல்' (வாஃபா) என்ற சிறுகதை இடம் பெற்றிருப்பதாகவும் அத்தொகுப்பு முதல் பரிசு பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் மாத இதழ் ஒன்றை வெளியிடுமாறும் அவ்விதழில் கிழக்கு நாடுகள், மேலைநாடுகள் குறித்த வினாக்கள் சிறப்புற அமையும் வகையிலும் வெளியிடுமாறு வற்புறுத்தினார். உண்மையில், பல்வேறு இந்திய நண்பர்கள் இதே வினாவை இதற்குமுன் அவரிடம் கேட்டிருந்தனர். இக் காலகட்டத்தில் குர்பக்ஷ் சிங் பஞ்சாபி இதழியலில் மிகவும் ஒன்றிப் போயிருந்தார். அவர் பாய் வீர் சிங் எழுதிய 'சுந்தரி', 'பிஜய்சிங்' என்ற இரு பஞ்சாபி நூல்கள் மட்டுமே படித்திருந்தார். பஞ்சாபி வார இதழான 'கல்சா சமாச்சார்' பற்றியும் அவர் கேள்விப்பட்டிருந்தார். அவ்விதழில் 1911ஆம் ஆண்டில் அவரது கவிதை ஒன்று வெளிவந்திருந்தது. பஞ்சாபி மாத இதழான 'ப்ரிதம்' இதழின் பதிப்பாசிரியர் எஸ்.லாப்சிங் நாரங் அதன் சந்தா தொகைக்காக முன்பு அவர் இல்லத்திற்கு வந்திருந்தார். இவ்விதழ்கூட பஞ்சாபி மொழியில் மேலும் நூல்கள் பல கற்கும் ஆர்வத்தைத் தூண்டவில்லை. எப்படியாயினும் ஹரால்டு இயாகோவின் ஆலோசனை அவரது கவனத்தை ஈர்த்தது. குர்பக்ஷ் சிங், ''எனது மாத இதழ், எனது கற்பனைக் கருவில் இருந்துகொண்டே இருந்தபோதிலும் அவ்விதழுக்கு என்ன பெயர் வைப்பது என்று நான் தேடினேன். அதற்கான பெயர் கண்டுபிடிக்கப்பட்ட உடனேயே நான் அதன் செய்திக் கூறுகள் அனைத்தையும் சித்திரித்தேன். நான் லாகூர் சென்றேன். எனது பெரு விருப்பத்திற்குரிய ஓவிய ஆசிரியர் தனது அரசாங்கப் பணியை விட்டுவிட்டு படங்களுக்கான அச்சு செய்யும் பணியை ஆரம்பித்திருந்தார். எனது ஆசிரியர் என்னைக் குறித்து எப்போதும் பெரிதும் பாராட்டுபவர். எனது கருத்தையும் தீர்மானத்தையும் கேட்டு அவர் பெரிதும் மகிழ்ந்தார். அவர் 'ப்ரீத் லாரி'க்காக ஒரு மூன்று வண்ணப் படம் தயாரித்துத் தந்தார். எனக்கு அது பெரிதும் பிடித்தது. 'வாஸிர் ஹிந் பிரஸ்' எனது கற்பனையை நிறைவு செய்யும் வகையில் செயல்பட்டது. முதல் இதழ் ஐநூறு பிரதிகள் அச்சிடப்பட்டன. இருநூறு பிரதிகள் ஆர்ட் தாளிலும் முந்நூறு பிரதிகள் சாதாரண செராம்பூர் தாளிலும் அச்சிடப்பட்டன. மூன்றில் ஒரு பகுதி வெளியீடு ஆங்கிலத்தில் அமைந்திருந்தது. நான் ஒவ்வொரு இதழையும் வெளியிடும்போதும் திரு ஹெரால்டு

இயாகோ எனக்கு ஒரு பரிசை அனுப்புவது வழக்கம். அத்துடன் அமெரிக்க நண்பர்களின் பாராட்டுதல்களையும் தெரிவிப்பார். பாராட்டு அனுப்பும் நண்பர்களுள் திருமதி மகட்ரியும் ஒருவர். சர். ஜோகிந்த்ர சிங், பாய் ஸாஹிப் பாய் கான் சிங் ஆகிய இருவரின் பாராட்டுக்கள் மனதுக்கு இதமானவையாக இருக்கும். இலக்கிய வெற்றிக்குரிய வழிகள் ஒன்றும் எனக்குத் தெரியாததால் நான் இலக்கியவாதிகளுக்கோ, பத்திரிகைகளுக்கோ எனது எந்த ஒரு இதழையும் அனுப்பவில்லை. என்னுடைய நலத்தில் நாட்டமுடைவர்களுக்கு மட்டுமே அனுப்பினேன். ஆனால் ஏறக்குறைய எல்லா பஞ்சாபிச் செய்திதித்தாள்களும் என் இதழ்கள் குறித்துப் பாராட்டி விமர்சனம் எழுதியிருப்பதை அறிந்து நான் பெரிதும் ஆச்சரியப்பட்டேன். தானி ராம் சதிரிக், நானா சிங், சர்தார் ஜி.பி. சிங், ஜ்யானி ஹிர சிங் தார்ட், சர்தார் சரண்சிங் ஷாஹித், எம்.எஸ் இரந்தவா மற்றும் பல பிரபலமடைந்தவர்களும் மதிப்பிற்குரிய இலக்கியவாதிகளும் எனது இதழை அவர்களாகவே படித்துவிட்டு எனக்குப் பெரு விருப்புடன் பாராட்டிக் கடிதங்கள் எழுதினார்,'' என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர், ''ப்ரீத் லாரி வெளிவந்த முதல் வருடம் எனக்குப் பாராட்டுக் கடிதங்கள் மட்டுமல்ல அவற்றோடு ஆழ்ந்த அன்பும் தெரிவிக்கப்பட்டது. பல இளைய இதயங்கள் தங்களது இரகசியங்களை என்னோடு பகிர்ந்துகொண்டனர். பல உயர்ந்த சிந்தனையாளர்கள் நான் கூறிய ஆழ்ந்த காதலாகிய இயற்கைக் காதல் போதிய அளவு சிக்கல் நிறைந்ததும் விளங்கிக்கொள்ள முடியாததுமாகிய பிரச்சினை என்றனர். என்னெழுத்துக்களைப் பற்றிய அவதூறுப் பேச்சு ஒரு புயல்போல் அடித்து என் காலை மண்ணிலிருந்து அடியோடு பறித்தபோது நான் வலுக்கட்டாயமாகப் பாராட்டுத் தென்றலைப் சுதந்திரமாகச் சுவாசித்தேன். எனது கதைகளில், கடவுள் போன்ற புனிதத்துவத்தை மிகுதியும் மதிப்புடன் அணுகாத போக்கும் உலகப் பிரகாரமான பருப்பொருட்களே நேரில் காணப்பட இயலும்; கடவுள் காணப்பட இயலாத ஒன்று என்று பேசிய போக்கும் காணப்பட்டமையால் எனது கதைகள் காட்டுத் தீ போல எல்லாப்பக்கமும் பரவின'' என்று எழுதுகிறார்.

அவதூறுப் பேச்சு என்று இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது 1935 ஆம் ஆண்டு ஜனவரி மாத 'ப்ரீத் லாரி' இதழில் 'பரம் மனுக்' என்ற தலைப்பில் வெளிவந்த ஒரு கட்டுரையைப் பற்றியது ஆகும். இக்கட்டுரையில் குர்பக்ஷ்சிங் பத்தாவது குருகோபிந் சிங்கின் உண்மையான மதம் பற்றிய கருத்தினை விளக்கியிருந்தார். குருகோவிந்சிங்கின் மதம் பற்றிய கருத்தினை ஒவ்வொரு உண்மையான பக்தனும் தன் மனதினில் கொண்டிருக்கவேண்டும் என்று குர்பக்ஷ்சிங் விரும்பினார். இன்னமதம் என்று வெளிப்படையாகத் தெரியும் அடையாளங்களும், சடங்காச் சாரங்களும் அவர் விரும்பாதவை. எனவே அவற்றை மறுத்துப் பேசினார். ஆனால் குர்பக்ஷ்சிங் தந்த விளக்கங்களும் விமர்சனங்களும் சிலரால் தவறாகத் திரித்து விளக்கப்பட்டன. உயர் கல்வி கற்றுப் பெரிய அரசாங்கப் பதவிகள் வகிக்கும் பல சீக்கிய அறிஞர்கள் குர்பக்ஷ்சிங் சார்பில் பரிந்து பேசினர். அவர்களும் பாய் ஜோத் சிங், கல்லூரி முதல்வர் தேஜா சிங் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இறுதியில் அவருக்கெதிரான புயல் ஓய்ந்தது. ஆனால் அப்புயல் அவரை மேலும் அறிவுள்ளவராக்கியதுடன் அவரது நோக்கங்களை அவர் தீர்மானித்துக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தவும் உதவிற்று. அவர் எழுதுகிறார்: ''ப்ரீத் லாரி வெளியீட்டின் நோக்கங்கள் அது ஆரம்பிக்கப்பட்டபோதே அறிவிக்கப்பட்டன. அந்நோக்கங்கள் போதாது என எனக்குத் தோன்றுகிறது. நான் மக்களுக்குக் காதலின் மகத்துவத்தை விரிவாக விளக்கிவிடலாம் என எண்ணியிருந்தேன்.... ஆனால் இல்பொழுது கடந்த காலத்தின் சிறப்புக்களைப் புகழ்ந்து கொண்டிருப்பதற்குப் பதில், புதிய எதிர்காலத்திற்கான ஆக்கவழிகளை உருவாக்கவேண்டும் என்று புரிகிறது. வாழ்க்கைப் பாதையிலிருந்து இறந்துபோன பழக்கவழக்கங்கள் முதலில் நீக்கப்படவேண்டும். இச்செயலில் ஒருவர் அழிவுதரக்கூடிய பழைய பழக்க வழக்கங்களின் பிடியில் ஆர்வத்துடன் சிக்கி எந்த விதப் புதிய நம்பிக்கைகளும் இல்லாமல் இருக்கக்கூடிய சூழலைச் சந்திக்க நேரிடலாம். இப்போராட்டத்தில் ஒருவர் ஆக்கவேலை தொடங்கப்படும் முன்பே இறந்துபடக்கூடநேரிடலாம். அழிவுக்குரியவற்றை அழிக்கும் பணி புதியதை ஆக்கும் பணியின்று எவ்விதத்திலும் குறைந்ததல்ல.....''

நான்கு பத்தாண்டுகளுக்கும் மேலாக, குர்பக்ஷ் சிங் பஞ்சாபி

இதழியலில் பரவலாகப் பணியாற்றியுள்ளார். அவர் கூறிய செய்திகள் பஞ்சாபி மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டன. அவர் தன் இலட்சியங்களைப் பரப்பும் ஒரு இலட்சியவாதியாக விளங்கினார். அவர் நேரடியாக, சுதந்திரமாகத் தன் எண்ணங்களை எழுதினார். முன்னேறிய மேலைநாட்டு மக்களின் நிலையைவிடத் தன் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்விதத்திலும் குறைந்ததாக இருக்கக் கூடாது என்ற உண்மையான விருப்பம் அவர் மனதில் இருந்துகொண்டே இருந்தது. எல்லாத் திட்டங்களிலும் அவர் தன் நாட்டுமக்களின் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்டிருந்தார். ப்ரீத் லாரியின் முதல் இதழ் வெளியீட்டின்போதே அதில் அவர், ''நான் அமெரிக்காவில் எட்டு வருடங்கள் இருந்தேன். அப்போது நல்ல கருணையுள்ளம் கொண்ட பல பெரிய மனிதர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களது நட்பில் நான் நல்ல சகோதரத்துவத்தை உருவாக்கிக் கொண்டேன். 'ப்ரீத் லாரி' என்ற பெயர் இச் சகோதரத்துவத்திற்குத் தரப்பட்ட பெயர். கடவுளை மனிதாபிமானத்தில் கண்டவர்களும், மலர் போன்ற சுயதியாகத்தில் தங்கள் மகிழ்ச்சி இருப்பதாகக் கருதியவர்களும், நன்மை, கருணை, தேசப்பற்று குறித்து எந்தவிதத் தவறான நம்பிக்கையும் கொள்ளாதவர்களுமான கருணையுள்ளம் கொண்ட அவர்களை அன்பு என்ற கயிற்றால் ஒன்றிணைப்பதே எனது நோக்கமாக இருந்தது நான் என் நாட்டிற்குத் திரும்பி வந்தபோது நான் அரசுப் பணியில் சேர்ந்தேன். நான் பல ஆசைகளும் திட்டங்களும் என் மனதில் வைத்திருந்தேன்....என் நண்பர்கள் பலமுறை என்னிடம் நான் மாத இதழ் ஒன்றனைவெளியிட ஆரம்பித்தால் அதுவே நம் சார்பில் தூதுவனாக வெளிநாடுகளுக்குச் செல்லும் என்று கேட்டார்கள்....ஆனால் இப்பொழுது நான் அலுவலகம் என்ற குறுகிய சுவர்களின் வெளியே வந்து திறந்தவெளியில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, நான் என்னுள் ஒரு இனிமையான கணவினை உணர்ந்தேன். சில உள்ளங்களில் உருவாகிய அன்புப் பிணைப்பு என்பது எல்லாத் திசைகளிலும் பரவவேண்டும் என்று விரும்பினேன். 'ப்ரீத் லாரி' என்ற பெயரில் இருந்த இத் தூதுவன் உங்களை ஒவ்வொரு மாதமும் வந்தடையும். 'ப்ரீத் லாரி'யின் திட்டமே கவிதைகள், கதைகள், நாடகங்கள், தரம் வாய்ந்த படைப்புக்களின் மொழிபெயர்ப்புக்கள், பழைய புதிய உலகில் தேர்ந்தெடுத்த கருத்துக்கள் முதலியவற்றை

வெளியிடுவதன்மூலம் வாழ்க்கையை வசதியுள்ளதாக, தூய்மையானதாக ஆக்கிக்கொள்ள உதவுவதே எனலாம். மதம், நாடு, தாய்நாடு, அயல்நாடு என்ற கோணத்தில் இவ்விதழ் எல்லோர்க்கும் பொதுவானதாகவும் கருத்துக்களை விரைவாகத் தருவித்துப் பிறரிடமிருந்து விரைவாகப் பெற்றுக்கொள்வதிலும் ஆவதற்கு முயற்சி செய்யும். மொழியைப் பொறுத்தவரை, பொதுச் சொற்களை அதாவது கற்ற மக்கள் பயன்படுத்தும் பேச்சுச் சொற்களைப் பயன்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்படும். இவ்விதழ்மூலம் இலாபம் சம்பாதிப்பதோ, வாழ்க்கைக்குத் தேவையானவற்றிற்காகச் சம்பாதிப்பதோ எனது நோக்கம் அல்ல. இத் தூதுவன் நமது சிறிய சகோதரத்துவ வட்டத்தை விரிவாக்குவதில் வெற்றி பெற்றால் நான் அதிகம் மகிழ்வேன்'' என்று கூறுகிறார்.

குர்பக்ஷ் சிங் வாசகர்களின் கருத்துக்களைச் சுதந்திரமாகவும் நேரடியாகவும் கவனித்து அவை குறித்துத் தன் கருத்தைக் கூறும் வாசகர்களுடனான நேரடிப் பேச்சுப் பாங்கு 'ப்ரீத் லாரி' இதழின் தனித்தன்மை ஆகும். இதற்காக அவர் 'ஸ்நேகியன் தா பன்னா' (நலம் விரும்பிகளின் பக்கம்) என்ற தலைப்பில் நான்கு அல்லது ஐந்து பத்திகளை ஒதுக்கி இருந்தார். வாசகர்கள் மத்தியில் அப் பக்கம் மிகவும் பிரபலமாகி இருந்தது. முதன் முதலில் 'ப்ரீத் லாரி' இதழ் வெளிவந்தபோது குர்பக்ஷ் சிங் அதில் கவிதைகளை எழுதியதைக் கண்ட வாசகர்கள் இதுவரை குர்பக்ஷ் சிங் சிறுகதைகள், நாடகம் முதலியவற்றை மட்டுமே எழுதி வந்ததைப் பார்த்திருந்ததனால் மிகவும் ஆச்சரியப்பட்டனர்.

'ப்ரீத் லாரி' யின் மூலம் குர்பக்ஷ்சிங் உடலாலும் உள்ளத்தாலும் கஷ்டப்படும் மக்களுக்காக இரக்கப்பட்டு மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுதலைப் பற்றி மட்டும் பேசாமல் விலங்குகளுக்கும் இரக்கம் காட்டுதல் குறித்துப் பேசியிருக்கிறார். தளர்ந்துபோன தங்களது வாழ்க்கை நிலை குறித்து அழும் இளைஞர்களின் மன உளைச்சலை உணர்ந்து எழுதிய விசித்திரமான எழுதுகோலைக் கொண்ட அபூர்வ இதழாய் அவ்விதழ் அமைந்தது. 'ப்ரீத் லாரி' வேகமாகப் பிரபலமான போது குர்பக்ஷ் சிங், குர்பக்ஷ் சிங் என்று மட்டும் அழைக்கப்படாமல் குர்பக்ஷ் சிங் ப்ரீத் லாரி என்று அழைக்கப்பட்டார். குர்பக்ஷ் சிங்கின் பணிச் சிறப்பை வகைப்படுத்தினால் அவர் சிறந்துவிளங்கிய துறைகளுள் அவர் முதன்மை பெற்ற துறை இதழியலே எனலாம்.

அவர் மிகச்சிறந்த இதழாளராக விளங்கினார். அதற்கடுத்து அவர் சிறந்த எழுத்தாளராக விளங்கினார். அவர் எது எழுதினாலும் 'ப்ரீத் லாரி' க்காகவே எழுதினார். அவரது எல்லாக் கட்டுரைகளும், சிறுகதைகளும், நாடகங்களும் கூட முதலில் 'ப்ரீத் லாரி'யில் வெளியாயின. அதன் பின்னரே அவை தொகுதியாக வெளியிடப்பட்டன. எனவே குர்பக்ஷ் சிங்கை இதழாளர் குர்பக்ஷ் சிங், இலக்கிய எழுத்தாளர் குர்பக்ஷ் சிங் என்று தனித்தனியே பிரித்தறிவது கடினமான ஒன்றாயிற்று. அவரது இதழ்ப் பணி உண்மையில் இலக்கியப் பணியாகவே அமைந்தது. இதழின் தரத்தை இலக்கியம் அளவிற்கு உயர்த்திய பெருமை குர்பக்ஷ் சிங்கைச் சாரும்.

அவரது பரந்த உலக அனுபவக்கருத்துக்களின் காரணமாக, அவரது வாசகர் வட்டம் நாளாவட்டத்தில் விரிந்தது. வாழ்க்கை பற்றிய அவரது கண்ணோட்டம் தனித்தன்மை உடையதாக இருந்ததால் அவரது இதழ் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபலமாயிற்று. பஞ்சாப்பைத் தாய்நாடாகக் கொண்டவர்களும், வெளிநாட்டில் வசிப்பவர்களுமான மக்களும் 'ப்ரீத் லாரி' வாசகர்கள் ஆனார்கள். குர்பக்ஷ் சிங் ஒரு குறிப்பிட்ட இன, சாதி, நாட்டு மக்களுக்கு என்று எழுதாமல், எல்லா மனித இனத்திற்கும் எழுதினார். இக் காரணத்தால்தான் அவரது பத்திரிகை சீக்கியர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் அனைவராலும் விரும்பிப் படிக்கப்பட்டது. குர்முகி மொழியை வாசிக்க முடியாத மக்கள் பலர் இருந்தனர். ஆனால் அவர்கள் குர்பக்ஷ் சிங்கின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பை விரும்பினர். எனவே, இவ்விதழை இந்தி, உருது ஆகிய மொழிகளில் இந்தியைத் தேவநாகரி எழுத்திலும், உருது மொழியைப் பெர்சிய எழுத்திலும் வெளியிடுவது சிறந்தது என்று கருதப்பட்டது. ஆங்கிலம் தெரிந்த மக்களுக்காக, இதழ் ஒவ்வொரு மாதமும் சில ஆங்கிலக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. முனைவர் நரிந்தர் சிங் கபூர் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் வெளியிடப்பட்ட ஆய்வேட்டின்படி, 'ப்ரீத் லாரி'யின் முதல் 10இதழ்களின் மொத்த 818 பக்கங்களில் 718 பக்கங்கள் பஞ்சாபி மொழியிலும் (குர்முகி எழுத்து) 100 பக்கங்கள் ஆங்கிலத்திலும் அமைந்துள்ளன. 1936ஆம் ஆண்டுத் தொடக்கம் வரை ஆங்கிலக் கட்டுரைகள் அவ்விதழில் வெளிவந்தன. 1939ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'ப்ரீத் லாரி'யின் இந்தி

இதழ் இந்தியில் பிரபலமான இலக்கியகர்த்தாவான உபிந்தர் நாத் ஆஷ்க் அவர்களைச் சக-பதிப்பாளராகக் கொண்டு வெளிவந்தது. ஆனால் ஆங்கிலேயே அரசில் இரண்டாம் மொழியாக உருது மொழியே இருந்ததனால் மிகச் சிறிது காலத்திற்குள்ளேயே இந்தி இதழ் நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. உருது மொழிப் 'ப்ரீத் லாரி' பெர்சிய குணநலன்களோடு 1939ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கி 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நாட்டுப் பிரிவினை வரை தொடர்ந்தது. குர்பக்ஷ் சிங் குழந்தைகளுக்கான மாத இதழான 'பால் சந்தேஷ்' என்ற இதழையும் 1940இல் தொடங்கினார். 1962 ஆம் ஆண்டில் இவ்விதழைப் பதிப்பிக்கும் பொறுப்பு அவரது இளைய மகளான 'ஹிர்தெபால் சிங்' வசம் ஒப்படைக்கப்பட்டது. அதிலிருந்து இன்றுவரை அதன் வெளியீடு தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. குர்பக்ஷ் சிங்கால் எழுதப்பட்ட குழந்தைகள் நூல் முதலில் 'பால் சந்தேஷி'லும் வெளிவந்தன. ப்ரீத் நகரின் அன்புச் செய்தியை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு 'ப்ரீத் ஸைனிக்' என்ற பெயரில் ஒரு வாரப் பத்திரிகை 1938ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் நாளில் தொடங்கப்பட்டது. இப் பத்திரிகையின் நோக்கம் மக்களுக்கு இந்தியாவின் பிரச்சினைகளை விரிவாக விளக்கிக் காட்டுவது மட்டுமல்ல. அகில உலக விஷயங்களைப் படம் பிடித்துக் காட்டுவதும் ஆகும். முதல் இதழிலேயே 'செக்கோஸ்லாவாகியாவும் உலக அரசியலும்' என்று தலைப்பிட்ட தலையங்கம் வெளிவந்தது. இப்பத்திரிகை மக்களிடையே சமூக, பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இவ்விதழ், குருட்டுத்தனமான நம்பிக்கைகள், தவறான கருத்துக்கள் முதலிய வற்றை எதிர்த்த எதிர்ப்புக் கட்டுரைகளையும், பெண் முன்னேற்றம், குழந்தை நலன், நல்வாழ்வு குறித்த பயனுள்ள கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்தது. இவ்விதழின் ஒவ்வொரு பிரதியும் செய்திகள் நிரம்பியதாகவும் பஞ்சாபி இதழ்களிலேயே வார இதழ்களின் முதல் இலட்சிய இதழ் என்று சொல்லப்படும் அளவுக்குச் செறிவுள்ள தாகவும் வெளிவந்தாலும் சில தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களுக் கிணங்க இவ்விதழ் வெளியீடு நிறுத்தப்பட வேண்டியதாயிற்று.

குர்பக்ஷ் சிங்கால் வெளியிடப்பட்ட 'ப்ரீத் லாரி' இதழும் பிற பத்திரிகைகளும் சமகால இதழ்கள் மீதும், பத்திரிகைகள் மீதும் பெரும் பாதிப்பை உண்டு பண்ணின. அவரது உரையாடும் நடைச் சிறப்பு வாசகர்களைத் தட்டியெழுப்பி அவர்களுக்குக் குர்பக்ஷ் சிங்குடன் பெரும் நெருக்கத்தை உண்டுபண்ணியது. அதன்

விளைவாக 'ஸன்சார் ப்ரீத் மண்டலத்தில்' அங்கத்தினராகவோ அல்லது தேவைப்படும் போதெல்லாம் அவருக்கு உதவிசெய்ய முன்வரவோ அவர்கள் தயாராக இருந்தனர். அவர்கள் அவரிடம் பல்வேறு துறைகள் தொடர்பான வினாக்களைக் கேட்டு அவருக்குக் கடிதங்கள் பல எழுதினர். 'ப்ரீத் லாரி'யின் பத்திகளில் 'ப்ரீத் ஜாநோகே சோன்' (அன்புப் பலகணி வழியாக) என்ற தலைப்பில் அவர் அவர்களது கேள்விகட்குப் பதில் எழுதினார். இப்பகுதி, வாசகர்கள் மத்தியில் பிரபலமாயிற்று. குர்பக்ஷ் சிங் 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆம் நாள் இயற்கையெய்திய காரணத்தால் 1977ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இதழில் 'ப்ரீத் ஜார்கே கான்' பகுதி இல்லாதுபோயிற்று, தார் ஜி (அன்புடன் குர்பக்ஷ் சிங் அவ்வாறு அழைக்கப்பட்டார்)யின் இறுதிச் சடங்குகளுக்குச் சென்று வந்த வரும் ப்ரீத் லாரியின் வாடிக்கை வாசகருமானவருமான ஒரு பேராசிரியர் குர்பக்ஷ் சிங் இறந்ததை மறந்து எப்போதும்போல இயல்பாக 'ப்ரீத் ஜார்கே கான்' பத்தியை இவ்விதழில் தேடி அது காணப்படாதபோது மிகவும் மனம் உடைந்து போனார்.

'பிரிவினை ஆட்சி' என்ற கொள்கையினை ஆங்கிலேயர்கள் அப்போது இந்தியாவில் கையாண்டதனால் சாதி அடிப்படையில் மாறுபாடுகள் அவ்வப்பொழுது தலைதூக்கிக் கொண்டிருந்தன. அக்காலகட்டப் பத்திரிகைகள் சாதி இன அடிப்படையில் வெளிவந்து கொண்டிருந்ததனால் சாதிகளுக்கிடையே எதிரெதிராகக் குற்றங்கள் மலிந்து ஒவ்வொரு சாதியும் பிறவற்றை நோக்கி அலட்சியம், கொலை போன்ற குற்றச்சாட்டுக்களை வீசிக்கொண்டிருந்தன. 'ப்ரீத் லாரி' பத்திரிகை மட்டுமே எந்தவித விருப்பு வெறுப்பின்றி அத்தகைய சூழல்களில் அறிவையும் சகிப்புத்தன்மையையும் போதித்து வந்தது. மற்ற பத்திரிகைகள் இன வெறுப்புக்களை உருவாக்கி வந்தன. 'ப்ரீத் லாரி' மனிதனின் உண்மையான சமயம் குறித்துப் பேசியது. மதம் பற்றிப் 'ப்ரீத் லாரி'யில் எழுதும்போது குர்பக்ஷ் சிங், ''சில மாதங்களுக்கு முன் பஞ்சாபிப் பத்திரிகை ஒன்று குருத்வாரர்களின் கொள்கைகள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுமாறு என்னைக் கேட்டுக்கொண்டது. மதம் தொடர்பான விஷயங்களைப் பற்றி எழுத நான் தயங்கினேன்; ஏனெனில் எனது சுயமான நோக்குகள் பொதுவாக நிலவும் மதம் குறித்த கருத்துக்களினின்று வேறுபட்டது. ஆனால் என் கருத்துக்கள் பற்றி அறிந்திருந்தும், மதப் பத்திரிகைகள் அத்தகைய தலைப்புக்களில் என்னை எழுதுமாறு வேண்டுகின்றன என்றால்

பொதுமக்கள் எனது சிந்தனைகளில் குறைந்த அளவிலோ அல்லத பெரிய அளவிலோ நாட்டம் கொண்டிருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். இந்த நம்பிக்கையுடன் குருத்வாரர்களின் மதக் கொள்கைகள் பற்றிய என் கருத்துக்களை நான் இங்கு எழுதுகிறேன். எனது கருத்துக்கள் தற்போது உடனடியாக நடைமுறைக்கு வரமுடியாது என்று எனக்குப் புரிகிறது. என்றாலும் எனது அகக் கண்களுக்கு இக்கருத்துக்களின் வெற்றி மிக அருகில் இருப்பதாகவே தெரிகிறது. எனது கருத்துக்கள் நடைமுறையில் சாத்தியமாகும் நாள் வரை மனிதன் கடவுளின் அரசை குருத்வாரக் கோவிலில் கொண்டு வராதபோது கடவுள் மனிதனது மதக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இப்பொழுது மனிதன் மனிதனை நம்புவதுபோல மனிதன் கடவுளை முழுவதுமாக நம்பும்போது, அவனது நடத்தை கடவுளின் இயல்புகளைக் கொண்டிருப்பதற்கான அறிகுறிகளைக் கொண்டதாக விளங்கும். அப்பொழுது மனிதன் ஒவ்வொரு நிமிடமும் கடவுளுடைய பிரசன்னத்துடனேயே வாழ விரும்புவான். அப்படிப்பட்ட வாழ்க்கையில் பொய், பேராசை, தன்முனைப்பு முதலிய குணங்கள் மனிதனைவிட்டு விலகும். மாறாக, இதயத்தில் தூய்மை ஆக்கிரமித்துக் கொள்ளும். ஆசை இன்மை, ஒருமைப்பாட்டுணர்வு அதிகரிப்பு முதலியன உண்டாகும். இன்றைய மதத் தலைவர்கள் எல்லோருமே அவரவர் மதத்தைச் சார்ந்த மக்கள் மட்டுமே தங்களைப் போலச் சிறந்தவர்கள் என்றும் உலகில் உள்ள பிறர் அனைவரும் தவறான வழிகளில் வழிநடத்தப்படுகிறார்கள் எனவும் துன்பத்தில் உழல்கின்றனர் என்றும் கடவுட் பற்றின்றி இருக்கிறார்கள் என்றும் கூறுகின்றனர். ஒவ்வொரு மதத்தினுடைய மதப்பிரச்சாரம் என்பது தத்தம் மதத்தின்மீது கொண்டுள்ள அன்பைக் காட்டுகிறதே தவிர மதத்தின் உண்மையை அவர்கள் புரிந்துகொள்ளவே இல்லை. எனது எண்ணப்படி சீக்கிய ஆலயங்கள், கோவில்கள், மசூதிகள் ஆகியன கடவுள் விருப்பத்திற்கு மாறுபட்ட செயல்களைத் தங்களால் செய்ய வைத்துவிட முடியும் என்ற கடமையைத் தங்கள் தோளில் ஏற்றுக்கொள்ளக் கூடாது. கடவுள் வறட்சியை உண்டாக்க விரும்பினால், இவர்களது வேண்டுதலின் பேரில் மழைபெய்யும் என்பதுவும் கடவுள் விரும்பாதபோது தாய்மார்களின் கருப்பைகள் கருத்தரிக்கும்படி ஆசிர்வதிக்கச் செய்தல் போன்றவற்றைச் சான்றுகளாகச் சுட்டலாம். இவையெல்லாம் மனித முட்டாள்தனங்கள். கடவுளுக்கு எல்லோரது தேவையும் தெரியும்.

அவரது கருணையும் அன்பும் பரிந்துரைகளின்பேரில் வழங்கப்படுவதில்லை. சமயம் தொடர்பான நிறுவனங்களின் பணியே ஒளியைப் பரப்புதல், அச்சத்தை நீக்குதல், உடல் காயங்களை மதத்தோடு தொடர்பு படுத்தாமை, ஆன்மாவை உலகின் பிடியிலிருந்து விடுவித்தல், சமுதாய, உலக ஒற்றுமையைப் போதித்தல். ஆன்மாவின் காட்சியை விஸ்தரித்தல் முதலியன மட்டுமே'' என்று எழுதுகிறார். 'ப்ரீத் லாரி'யில் குர்பக்ஷ் சிங் எழுதிய பாணி இத்தகையதாய் இருந்தது. மதத்தில் தீவிரப் பற்றுடையவர்களால் குர்பக்ஷ் சிங்கின் பரந்த பார்வை தீவிரமாக எதிர்க்கப்பட்டாலும் குர்பக்ஷ் சிங்கின் எழுதுகோல் தன் நோக்கத்திலிருந்து பாதையைத் திருப்பிக் கொள்ளவில்லை. இதுவே அதன் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. தன்னை எதிர்ப்போரிடமிருந்து வரும் மோசமான கடிதங்களைக்கூட அவர் தன் இதழில் வெளியிட்டு அவற்றிற்குத் திட்டவட்டமான வாதங்களை வைத்து நயமான மொழிநடையில் தன் பதில்களை எழுதினார்.

தலையங்கப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் அகில உலகப் பிரச்சினைகள் அனைத்தையும் அவர் பேச எடுத்துக்கொண்டமை மற்றொரு மகத்தான போக்கு ஆகும். அன்றைய வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் அனுபவ பாடங்கள் மிகவும் ஆர்வமூட்டும் வகையில் சித்திரிக்கப்பட்டன. 'ப்ரீத் லாரி'யின் முத்திரை மொழி பின்வருமாறு:

> 'பொதுமக்களின் இதயத் துடிப்பு
> அன்பு கீதத்தின் இசை
> ப்ரீத் லாரி யின் பக்கங்களில் வெளிப்படுத்தப்படுகிறது
> எல்லா விஷயங்களும் இதில் சுட்டப்பட்டுள்ளது'

அமெரிக்க மக்களது வாழ்க்கைமுறை குறித்த வியப்பு மெல்ல மெல்ல 'ப்ரீத் லாரி'யின் பக்கங்களில் 1939இல் குறைந்தது. இரண்டாம் உலகப் போர் அறிவிக்கப்பட்டபோது 'ப்ரீத் லாரி' பொதுவுடைமைக்கு எதிரான ஃபாஸிஸத்தை எதிர்த்து நின்றது. போருக்குப் பின் 'ப்ரீத் லாரி' சமாதான இயக்கத்திற்குப் பெரிதும் தொண்டாற்றியது. அதன் தலையங்கங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிலவியது. முதலாளித்தவத்துக்கு எதிரான பொதுவுடைமை இயக்கம் அதன் மையக் கருத்தாக ஆனது. நாளடைவில் அதன்

வாசகர் வட்டம் அதிகரித்தது. அகில இந்திய அளவில் இதழியல் உலகில் 'ப்ரீத் லாரி' மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்றது. பல்வேறு கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் பஞ்சாபி மொழியில் எழுதுவதற்கு இவ்விதழ் தூண்டியது. பஞ்சாபி இதழியலுக்குக் குர்பக்ஷ் சிங் ஆற்றிய தொண்டு உள்ளடக்கம், நடை என்ற இரு நிலையிலும் தனித்துவம் பெற்றுள்ளது. தனது இதழில் அவர் பேச எடுத்துக்கொண்ட செய்திகள் பரந்துபட்ட அளவினவாக அமைந்திருந்தன. 1978ஆம் ஆண்டு ஜனவரி 'ப்ரீத் லாரி' இதழில் டாக்டர் ஹர்பஜன் சிங் கூறியுள்ள கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன. அவர் கூறுகிறார்:

''குர்பக்ஷ் சிங் இலக்கியவாதி மட்டுமல்ல. இதழாளரும் கூட. அவர் நிலைத்த மதிப்புக்களுடைய கருத்துக்களைப் பற்றி மட்டுமல்லாமல் சமகாலத்திய மகத்துவம் வாய்ந்த விஷயங்களைப் பற்றியும் எழுதினார். உடலை மஸாஜ் செய்வது முதல் உலகை உருவாக்குதல் வரை அனைத்துத் துறை தொடர்பாக இவரது பேச்சும் எழுத்தும் அமைந்தன. இலக்கிய எழுத்திற்கும் இதழியல் எழுத்திற்கும் உள்ள வேறுபாடு தெரிவுசெய்த கருத்தில் இல்லாமல் அக்கருத்துக்களை எழுதிய விதத்தினைச் சார்ந்திருந்தது. அதே முறையில் ஒரு இலக்கியவாதிக்கும் பண்பாட்டைப்பற்றி எழுதுபவருக்கும் உள்ள வேறுபாடு பின்வருமாறு அமைந்தது. முதலது வார்த்தையை உருவாக்குவதிலும் இரண்டாவது வாழ்க்கையை உருவாக்குவதிலும் நேரடித் தொடர்பு கொண்டிருந்தது. பஞ்சாபி எழுத்துக்கள், பஞ்சாபிச் சொல்லாக்கம், பஞ்சாபிச் சொற்றொடர் முதலியவை அவரைப் பொறுத்தவரை சிறிதுதான் மகத்துவம் வாய்ந்தவை. எனவே அவர் எத்துறையைப் பற்றி எழுதினாலும் அவர் வாழ்க்கையைப்பற்றி முதன்மையாக எழுதுவதையே விரும்பினார். அவரது வாசகர்கள், குர்பக்ஷ் சிங் உடல்நலம் பற்றிச் சாதாரண கட்டுரை எழுதினாலும், சிக்கலான அரசியல் பிரச்சனைகளைப் பற்றி எழுதினாலும், ஜவஹர்லால் நேரு அல்லது அஞ்சுகாரு பற்றி எழுதினாலும் அவரது நடை ஒரே மாதிரியாக இருக்கிறது என்று அடிக்கடி அவர் மீது குற்றம் சாட்டினார்கள். அவரது நடை அன்றாட வாழ்க்கையின் இயல்பான செயல்களையும், சிக்கலான பண்பாட்டுச் செயல்களையும் வேறுபடுத்தவில்லை. பல வாசகர்கள் இதுபற்றி நகைச்சுவையாகப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் இத்தகைய வேறுபடுத்தாத

அவரது பாணிதான் பரந்த பார்வையும் தீர்க்கதரிசனமும் கொண்டு விளங்கும்படி வரம் பெற்ற ஒரு மனிதனின் அடிப்படைத் தனித்துவம் ஆகும்''.

'ப்ரீத் லாரி', பஞ்சாபி இதழியலில் ஒரு மைல்கல் எனலாம். குர்பக்ஷ் சிங்கின் மொழிநடை, விவாதமுறை, பகுத்தறிவு, பகுத்தாயும் முறை, விஷயஞானம் முதலியவற்றைக் கொண்டிருந்தது மட்டுமல்ல. பண்பட்டதாயும், வாசகனைத் திருப்திப்படுத்தும் கவர்ச்சியுடையதாயும் இருந்தது. அவரது நடை அறிவு ஜீவிகளை மட்டுமல்லாமல் வாசகரின் கலாரசனையையும் தொட்டது. அவர் தனது பேனாவின்மூலம் தகுந்த சொற்களைத் தெரிவு செய்வதில் மட்டுமல்லாமல் வாசகர்களைப் பரந்த பார்வை கொண்டவர்களாய் விளங்கச் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். அவர் தகுந்த சொற்றொடர்களையும், கற்பனையையும் பயன்படுத்தியதால் சில நேரங்களில் பெரிய அறிவாளியாகவும், சில நேரங்களில் ஒரு கவிஞராகவும் வாசகர்களுக்கு அவர் தென்பட்டார்.

7. பல்வேறு படைப்புக்கள்

குர்பக்ஷ் சிங் பஞ்சாபிச் சிறுகதை எழுத்தாளராகவும், புதின ஆசிரியராகவும், நாடக ஆசிரியராகவும், இதழாளராகவும் விளங்கியது மட்டுமன்றி அவர் நல்ல மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கினார். அவர் எண்ணற்ற கவிதைகள், நாடகங்கள், புதினங்கள், சிறுகதைகள், உரைநடைகள் முதலியவற்றை ஆங்கிலத்திலிருந்து பஞ்சாபி மொழிக்கு மொழிபெயர்த்திருக்கிறார். அவரது மொழிபெயர்த்த படைப்புக்களுள், எட்வின் அர்னால்டு எழுதிய 'லைட் ஆஃப் ஆசியா' (ஆசிய ஒளி), வால்ட் விட்மனின் 'லீவ்ஸ் ஆஃப் கிராஸ் (புல்லின் இலைகள்) மோலியரின் இரண்டு நாடகங்கள், கார்க்கி எழுதிய 'மதர்' (தாய்) முதலியன அடங்கும்.

குர்பக்ஷ் சிங் மொழிபெயர்க்கத் தெரிந்தெடுத்துக்கொண்ட படைப்புக்கள் அவரது குணநலன், சிந்தனை முறை ஆகிய வட்டத்திற்குள் அடங்கும் படைப்புக்களே ஆகும். 'லைட் ஆஃப் ஆசியா' (ஆசியா ஒளி) என்ற நூலைப் பற்றி அவர் கீழ்க்காணும் குறிப்பினை எழுதியிருக்கிறார். ''இந்நூல் வாசிக்கும் பழக்கம் ஒரு நல்ல செயல் என்று மட்டுமே கருதும் மக்களுக்கான நூல் அல்ல... இந்நூல் அன்பு, கருணை, நீதி, சிறந்த அறிவு முதலியன பற்றிய அனுபவபூர்வமான பாடம் ஆகும். எனவே மிகுதியும் அறிவுடைய அறிவுஜீவிகள் தங்கள் மதம் மற்றும் அதற்கேயுரிய மதச் சடங்காச் சாரங்களைக் கடைப்பிடிப்பதை விட்டுவிடுதல் நல்லது என்று உணரும் பகுத்தறிவு சிறந்த நிலையிலும் கூட இந்நூல் அவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமையும் என்று எப்பொழுதும் கருதப்படுகிறது. புது ஆர்வத்துடன் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுவதும், புதுத் தெம்பையும் புது விளக்கங்களையும் தரக்கூடியதுமான மிகச் சில நூல்களில் இதுவும் ஒன்று. இந்நூலை நான்1917-ஆம் ஆண்டில் ஈரானில் இருந்தபோது வாசித்திருக்கிறேன். அதன்பின்தான் அமெரிக்காவில் 'ப்ரீத் கிளப்' பில் கிளப் அங்கத்தினர்கள் முன் இந்நூலை வாசிப்பது வழக்கம். பல அமெரிக்கர்கள் இந்நூலைத் தங்கள் விவிலியத்திற்கு இணையாகத் தாங்கள் கருதுவதாக என்னிடம் கூறியிருக்கிறார்கள். அதன் பின்

இந்நூலின் சில பகுதிகளை நான் 'ப்ரீத் லாரி' யில் வெளியிட்டிருக்கிறேன். 'ப்ரீத் லாரி' வாசகர்கள் எனது மொழிபெயர்ப்பு முறையற்றதாக இருப்பினும்கூட இப்பகுதியை விரும்புகிறார்கள் என்பதையும் இந்நூற்பகுதி 'ப்ரீத் லாரி'யின் ஏதாவது ஓர் இதழில் வெளியிடப்படாமல் விடப்பட்டுவிட்டால் வாசகர்கள் எனக்குக் கடிதம் எழுதுவதையும் அறிந்து நான் மகிழ்கிறேன். நூல் வடிவில் இந்நூலினை வெளியிடவும் மக்கள் கட்டாயமாகக் கேட்டார்கள். எட்வின் அர்னால்டு எழுதிய மூலநூலில் உள்ள அதே அளவு ஆழத்தையும், அழகான வடிவத்தையும் என்னால் மொழிபெயர்ப்பில் கொண்டுவர முடியவில்லை என்பது எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். இந்நூலின் ஒவ்வொரு வரியிலும் தனிப்பட்ட அன்பும் இரக்கமும் மனித சுதந்திரத்திற்கான ஆதரவும் இருக்கிறது.''

வால்ட் விட்மன் எழுதிய 'லீவ்ஸ் ஆஃப் கிராஸ்' என்ற நூலின் மொழிபெயர்ப்பு, 'கா தியான் பதியான்' என்று குர்பக்ஷ் சிங்கால் பெயரிடப்பட்டது. 1855ஆம் ஆண்டு 'லீவ்ஸ் ஆஃப் கிராஸ்ஸின்' முதல் பதிப்பு வெளியானது. இந்நூல் ஆசிரியர் பன்னிரண்டு கவிதைகளை இதனுள் அடக்கி ஒரு கைப்பிரதி வடிவத்தில் ஆக்கியிருக்கிறார். இந்நூலின் ஒவ்வொரு மறுபதிப்பிலும் மீண்டும் மீண்டும் பல கவிதைகள் சேர்க்கப்பட்டன. 1891-92ஆம் ஆண்டில் இந்நூலின் பன்னிரெண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இப்பதிப்பில் வெளியிடப்பட்ட நூலே 1968இல் குர்பக்ஷ் சிங்கால் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியானது. விட்மனின் நடைப்பாங்கு விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள இசைமையை மாதிரியாகக் கொண்டது. ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் சுதந்திர மனிதனுக்குள்ள திறமையை வெளிப்படுத்துவதற்காக இந்நூல் எழுதப்பட்டது. பொது மக்களது சுதந்திர நிலையைக் கவிஞர் தம் கவிதைகளில் சிறப்பித்துள்ளார். குர்பக்ஷ் சிங்குக்கு ஆசிரியரின் சுயமான கருத்தும் அணுகுமுறையும் மிகவும் பிடித்தது.

பஞ்சாபிக் கவிஞர் புரன்சிங் என்பவர் வால்ட் விட்மனின் கவிதை நடையால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். குர்பக்ஷ் சிங் தனது சுயசரிதத்தின் முதல் தொகுதியில் 1928இல் பேராசிரியர் புரன்சிங்கைத் தான் சந்தித்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவரைச் சந்திப்பதற்கு முன் புரன்சிங் எழுதிய 'ஸிஸ்டர்ஸ் ஆஃப் ஸ்பின்னிங்

வீல்' (நூற்பு இயந்திரச் சகோதரிகள்) என்ற தலைப்பிலான ஒரு நூலினைக் குர்பக்ஷ் சிங் வாசித்திருந்தார். கவிஞர் புரன்சிங் 1931ஆம் ஆண்டு இவ்வுலகை நீத்தார். 1933ஆம் ஆண்டு 'ப்ரீத் லாரி'யைக் குர்பக்ஷ் சிங் வெளியிட ஆரம்பித்தபோது, கவிஞர் புரன்சிங்கின் இறப்பு ஒரு பெரிய இழப்பு என்பதைக் குர்பக்ஷ் சிங் உணர்ந்தார். குர்பக்ஷ் சிங், ''அந்தக் காலத்தில் நான் இப்பொழுது இருக்கும் குர்பக்ஷாவாக இருந்திருந்தால் நான் அவரை என்னுலகத்திலிருந்து இவ்வளவு விரைவில் சென்றிருக்க விட்டிருக்க மாட்டேன். அவரது எழுத்துக்களில் நான் நடைமுறையில் எவ்வெவற்றை மனதில் மறைத்து இன்றுவரை வாழ முடிந்ததோ அத்தகைய பைத்தியக்காரத்தனமான சிலவற்றை நான் கண்டேன். இரண்டு பைத்தியக்காரர்கள் மனம்திறந்து ஒருவருக்கொருவர் பேச ஆரம்பித்தால் புத்திசாலிகள் அது தங்களுக்குப் பிரச்சினை என்று கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள்'' என்று எழுதுகிறார். குர்பக்ஷ் சிங்கின் மிக நெருங்கிய நண்பரான டாக்டர் எம். என்.இரந்தவா என்பவரும் புரன்சிங்கைப் பெரிதும் விரும்பிப் போற்றுபவர் ஆவார். ''புரன்சிங்-ஜிவானி தே கவிதா'' என்ற நூலின் முன்னுரையில் டாக்டர் இரந்தவா, ''நான் புது டெல்லியில் இருந்தபோது, சாகித்திய அக்காதெமி ஆலோசனைக் குழுவில் பஞ்சாபி மொழிக்காக நான் பணியாற்றினேன். 1960ஆம் ஆண்டு மே 3ஆம் நாள் இக் குழுவின் ஆறாவது கூட்டத்தில் நான் புரன்சிங்கின் படைப்புக்கள் மிக அழகான தோற்றத்தில் அக்காதெமியால் வெளியிடப்படலாம் என்று ஆலோசனை கூறினேன். என் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு என் தலைமையில் ஒரு துணைக் குழு இப்பணிக்காக நிறுவப்பட்டது. 1961ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் சந்தித்த இத் துணைக்குழு புரன்சிங்கின் எல்லாப் படைப்புக்களும் ஒரு தொகுதியாக வெளியிடப்படலாம் என்று பரிந்துரை செய்தது. 'வாழ்க்கைப் பாதையில்' என்ற தலைப்பிலான புரன்சிங்கின் சுயசரிதம் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு மேற்குறிப்பிட்ட தொகுதியில் சேர்த்து வெளியிடப்படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. துணைக்குழு பதிப்புக் குழுவாகவும் கொள்ளப்பட்டு இத் தொகுதிக்கு முன்னுரை எழுதித் தருமாறு நான் கேட்டுக்கொள்ளப்பட்டேன். பின்னர், புரன்சிங்கின் மனைவி மாயாதேவி, புரன்சிங்கின் வாழ்வு குறித்த அவரது நினைவுகளை எழுதித்தர அதுவும் இத்தொகுதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 'வாழ்க்கைப் பாதையில்'

மொழிபெயர்ப்புப் பணி குர்பக்ஷ் சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் அதை முடித்து மொழிபெயர்க்கப்பட்ட நூல் 1970ஆம் ஆண்டு 'ஜிந்தகி தே ரஹன் தே' என்ற தலைப்பில் வெளியானது'' என்று குறிப்பிடுகிறார்.

குர்பக்ஷ் சிங், மேலைநாட்டார் எழுதிய சில சிறுகதைகளை மொழிபெயர்த்திருக்கிறார். அக்கதைகள் 1940இல் வெளியான 'அஸ்மானி மஹன் நதி' என்ற தொகுப்பிலும் 1949இல் வெளியான 'அக்ரி பைக்' என்ற தொகுப்பிலும் உள்ளன. டேவிஸன் போஸ்ட், மௌரிஸ் இந்தன், மேரி வில்கின்ஸ், அன்னா லூயிஸ் ஸ்ட்ராங், அல்ஃபோன்ஸ் டோட் முதலிய மேலைநாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளே குர்பக்ஷ் சிங்கால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தென் ஆப்பிரிக்கப் புதின ஆசிரியரும் சிறுகதை எழுத்தாளருமான ஆவில் எமிலி அல்பெட்டினா ஸ்கிரிஇனர் (1885-1920) எழுதிய 'கனவுகள்' என்ற தலைப்புடைய நூல், 'சப்ளே' என்ற தலைப்பில் குர்பக்ஷ் சிங்கால் 1940இல் மொழிபெயர்க்கப்பட்டது. மொலியர் எழுதிய இரு நூல்கள் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. பிரபல பிரெஞ்சு நாடக ஆசிரியரான இவரே ஃபிரான்ஸில் நகைச்சுவைப் பாணியை முதன்முதலில் நாடகங்களில் அமைத்தவர் என்பர். அவர் சமுதாய அங்கத நாடகங்களை எழுதினார். மொலியரின் நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டு 'மொலியர் தே நாடக்' என்ற தலைப்பில் 1958இல் வெளியாயிற்று. குர்பக்ஷ் சிங் மாக்ஸிம் கார்க்கியின் புதினமான 'தாய்' என்ற புதினத்தை 1960இல் மொழிபெயர்த்து அதற்கு 'மான்' என்று பெயரிட்டார்.

குர்பக்ஷ் சிங் குழந்தைகளுக்காக குழந்தைகள் இதழான 'பால் சந்தேஷ்' தவிர சில நூல்களும் எழுதியுள்ளார். 'குலாபி அய்னகன்' (1940), 'மதுர் பைன்' (1940), 'பரியன் தா மொச்சி' (1966), 'முரதன் புரியன் கரன் வாலா கூ' (1966), 'பாட் பஹதார்' (1966) என்ற சிறுகதைத் தொகுதிகளும் 'குலாபோ' (1966) என்ற புதினமும், 'ஜுகன் புரானி கல்' (1968) 'ரேஜன் தி காதி' (1953) என்ற கட்டுரைத் தொகுப்பும் குழந்தைகளுக்காக அவர் மொழிபெயர்த்த நூல்கள்.

குர்பக்ஷ் சிங் தனது மனைவி ஜீதனுக்கு வெவ்வேறு சமயங்களில் எழுதிய கடிதங்களின் தொகுப்பு ஆகிய 'சிதியின் ஜீதன் தி நான்' அவரது இறப்பிற்குப் பின் 1978இல் வெளியிடப்பட்டது.

8. வாழ்க்கைத் தத்துவமும் அன்புத் தத்துவமும்

வாழ்க்கை பற்றி குர்பக்ஷ் சிங் என்ன கருதினார் என்ற அவரது மதிப்பீடு அவர்தம் எல்லாப் படைப்புக்களிலும் காணப்படுகிறது. வாழ்வின் மூன்று நிலைகளாகிய குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் ஆகியவற்றுள் குழந்தைப் பருவத்தில் எளிமையான உணவும், திறந்தவெளியில் அல்லது ஜன்னல் வசதியுள்ள காற்றோட்டமுள்ள அறையில் தூங்குதலும் அவசியம் என்பது அவரது நம்பிக்கை. அப்பருவத்தில் குழந்தை நன்கு விளையாடுதலும் சிரித்து மகிழ்தலும் பிற குழந்தைகளோடு சேர்ந்து வேலையை மொத்தமாகச் செய்தலும் வேண்டும். குழந்தை வெற்றிபெறக் கற்றுக்கொள்ளுதலும் வேண்டும். தோல்வியை ஒத்துக்கொள்ளவும் தெரிய வேண்டும். பொறுப்புணர்ச்சியும் குழந்தைகளிடம் உண்டாக்கப்பட வேண்டும். குழந்தை தன்னைத் தானே வெவ்வேறு செயல்களில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணினார்.

இளமைப்பருவத்தில் எந்த வேலையும் 'கடினமானது' என்று கருதுதல் கூடாது. வாழ்வில் ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருக்கவேண்டும். அந்த இலட்சியம் நிறைவேறும் பொருட்டு ஒருவன் கடினமாக உழைக்கவும் கல்வி கற்கவும் வேண்டும். ஒரு இலட்சியத்தை முடித்து வெற்றிபெற ஒருவர் முழுச் சக்தியையும் பயன்படுத்த வேண்டும். அப்படியும் வெற்றி கிட்டவில்லையென்றால் அவர் மீண்டும் முயலவேண்டும். பிறருக்காக உழைக்கத் தயாராக இருத்தல் வேண்டும். அதன் விளைவாகத் தியாகங்களும் மேற்கொள்ள வேண்டும். ஒருவன் முயற்சி செய்து தன்னை அனைவருக்கும் பிடிக்கும் வகையில் நல்ல ஆளுமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். எந்தக் கடினமான சூழ்நிலையையும் எதிர்நோக்கும் தைரியத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். உடல் வலிமை மட்டுமன்று மென்மையும் நீதியும் கொண்ட இதயத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

முதுமைப் பருவத்தில் ஒருவர் மனப் பதட்டங்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்கவேண்டும். ஒரு நாள் வேலை முடிந்த பின்பு அதைப்பற்றி எந்தக் கவலையும் கொள்ளக்கூடாது.

வாழ்க்கையை ஒரு தத்துவவாதியின் அணுகுமுறையில் நோக்கவேண்டும். வாழ்க்கை என்பது எடுத்தல் அல்லது கொடுத்தல் என்பது மட்டுமன்றி வாழ்வின் உள்ளொளி இப்பருவத்தில் ஏற்றப்பட வேண்டும். அவதூறு, பாராட்டு, அச்சம், நம்பிக்கை முதலிய எதுவும் பரபரப்பைத் தரக்கூடாது. இத்தகைய உணர்வு தினமும் வளர்ந்து 'உலகம் எனது ஆன்மா' என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். முகம் இனிமையாகவும் யாருடைய குற்றத்தைக் கண்டும் கோபத்தை முகத்தில் வெளிப்படுத்தாத இயல்பும் கொண்டு விளங்கவேண்டும்.

குர்பக்ஷ் சிங், ஒரு நீண்ட மகிழ்ச்சியான வாழ்விற்கு ஒருவர் தன் உடல்நலத்தினைப் பெருக்கவேண்டும் என்று நம்பினார். அவர் ஒரு நல்ல ஆரோக்கியமான உடலுக்கு உடற்பயிற்சி அவசியம் தேவை என்று கருதினார். உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் உடற்பயிற்சிகள் இருக்கின்றன. இயற்கையான காற்று, தூய்மையான நீர், சூரிய ஒளி, தினமும் குளிப்பதனால் பெறும் உடல் தூய்மை, முதலியவை ஒரு ஆரோக்கியமான உடலுக்கும் மனத்திற்கும் இன்றியமையாதன. உடலின் வெவ்வேறு பகுதிகளையும் சுத்தமாக வைத்திருத்தல் என்பதும் கட்டாயமான ஒன்று. நம் வாழ்விற்கு உயிரோட்டமான ஒன்று இரத்தம். மது போன்ற பானங்களும் பிற வகையான குடிக்கும் பானங்களும் இரத்தத்தின் சுத்தத்தைக் காக்கும் பொருட்டு தவிர்க்கப்பட வேண்டும். உடல், மனம், ஆன்மா போன்றவற்றின் வழியேதான் ஒருவரது வாழ்க்கை இரசிக்கப்பட முடியும். தலையிலிருந்து பாதம்வரை நாம் வாழ முயல வேண்டும். இம்முறையில் நாம் நம்மை நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும். ஒரு மகிழ்ச்சியான நீண்ட வாழ்விற்கு மூன்று அடிப்படை நியதிகள் உள்ளன. அவை ஆராக்கியமான பெற்றோரிடமிருந்து பிறந்தவர்களாய் இருத்தல், எதுவும் முடியும் என்ற உடன்பாட்டு நோக்குக் கொண்டிருத்தல், உடல் அங்கங்கள் இயங்கும் முறையும் உடல் நலம் காக்க வேண்டிய விதிமுறைகளும் பற்றித் தெரிந்து வைத்திருத்தல் முதலியன.

தன் நாட்டின் சிறந்த இளைஞனாய் ஒவ்வொரு இளைஞனும் விளங்குவதற்கு குர்பக்ஷ் சிங் பின்வருமாறு அறிவுரை கூறுகிறார். ''புதிய கருத்துக்கள், கற்று ஆராயப்படவேண்டும். இன்றைய புதிய கருத்துக்கள் விதி என்பது இல்லை; வாழ்வின் கால அளவு நிர்ணயிக்கப்படாத ஒன்று; இவ்வுலகைத் தவிர வேறு எந்த

மோட்சமோ நரகமோ இல்லை; மரணத்தைத் தவிர வேறு எந்தத் தீர்ப்பும் இல்லை என்று கூறுகின்றன. ஒரு மனிதனின் தலையாய கடமை தன் அறிவைப் பெருக்குதல் ஆகும். சாதனைகள் புரியும் போது அறிவு பெருகுகிறது. அச் சாதனைகள் நல்லவையாய், நம் பூமியை அழகுபடுத்துவனவாய் அமைவன. முயற்சி என்பதே விதியின் ஆட்சியின் விளைவே. அவற்றால் புதுப்புது அரசுகள் உருவாக்கப்படுகின்றன. முயன்றால் நீ விரும்புவது எதுவாயிருப்பினும் அதை நீ செய்யலாம். நீ மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க முடியும். எதையும் தொழவேண்டிய கட்டாயம் இல்லை. உன்னை நரகத்தில் வீசி எறிய யாரும் இல்லை. உனது மனச்சாட்சியே மோட்சமும் நரகமும் ஆகும். நமதுலகம் எப்படி அழகானதாக ஆக முடியும்? தொழிற்சாலைகள், திறமை, அறிவு முதலியவற்றாலேயே நமது உலகம் அழகானதாக ஆகமுடியும். இம்மூன்றும் எவ்வாறு கற்றுக்கொள்ளப்பட முடியும்? சுதந்திரமான எதையும் தேடு. எங்கே சுதந்திரம் இல்லையோ அங்கே இவை மூன்றும் இருப்பதில்லை. யாரையும் அடித்துத் துன்புறுத்தக் கூடாது. ஒவ்வொருவரும் தனது தேடுதலை மேற்கொள்ள உரிமையுடையவர். தவறான நம்பிக்கைகள் தரப்படுவதாலோ அல்லது எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் கலந்த உணர்வினாலோ இறைவழிபாட்டின் மதிப்பும் மரியாதையும் குறைக்கப்பட்டுவிடக் கூடாது.''

எங்கும் எதிலும் வாழ்வின் ஒருமைப்பாடு என்று ஒன்று இருக்கவேண்டும். இதனால் வேறுபட்ட கருத்துக்கள், வெவ்வேறுபட்ட செயலுக்கான ஆர்வம் முதலியவை இருக்கக் கூடாது என்பது பொருளல்ல. இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வுடையவருக்குப் பொறாமை, கோபம், தன்முனைப்பு முதலியவற்றால் வரும் துன்பங்கள் நீங்கிவிடும். மரணம் என்பது அஞ்சுவதற்குரிய ஒன்றல்ல. நட்பு பாராட்டத் தவறுவதே மனிதனிடம் உள்ள பெரிய குறை ஆகும். அடுத்தவரைத் தோல்வியடையச் செய்வதன்மூலம் மட்டுமே பெறும் வெற்றி வெற்றியாகக் கருதப்பட முடியாது. இவ்வுலகம் முழுமையும் ஒன்று. அது ஒட்டுமொத்தமாக உயர்கிறது. வீழ்ந்தாலும் ஒட்டுமொத்தமாக வீழ்கிறது. ஒருவனது வசதி இன்னொரு மனிதனை வசதிக்குறைவாக ஆக்குமானால் அவன் வெறுக்கத்தக்கவனே.

ஒரு இலட்சிய மனிதனின் குணங்கள் என்னென்ன? ஒருவன் போதிய அளவு உடல் வல்லமையுடனும், சகிப்புத்தன்மைத் திறனுடனும், உடலுக்கு எந்தவித நோயும் இல்லாமல் இருக்கவேண்டும். மகிழ்ச்சியுணர்வும், வெல்லும் திறமையும், கருணையுடன் கூடிய ஆளுமையும் ஒருவன் கொண்டிருக்க வேண்டும். தவறான கருத்துக்கள், ஏமாற்று, அவதூறு, உற்சாகமின்மை, நம்பகத்தன்மை இன்மை முதலியவற்றில் அகப்பட்டு ஒருவனது மனம் உழலாமல் அவற்றின் பிடியிலிருந்து விடுபட வேண்டும். முழுமையான சுயகட்டுப்பாடு ஒருவனுக்கு இருக்கவேண்டும். தான் பார்க்கும் வேலையில் ஒருவன் முழு ஆர்வத்துடன் தீர்மானத்துடனும் ஈடுபடல் வேண்டும். நுண்ணறிவும், மனதளவில் சகிப்புத்தன்மைத் திறனும் தற்சார்பில்லாமல் தீர்மானம் எடுக்கும் திறமையும் ஒருவனுக்கு இருக்கவேண்டும்.

ஆரோக்கியத்தின் இரகசியம், ஆறுதல், அழகு முதலிய அனைத்துமே ஒரு சமநிலை வாழ்வில் அடங்கிவிடுகின்றன. மனமும் உடலும் சமஅளவில் ஆரோக்கியமுடையதாக இருக்கவேண்டும். கைகள் உழைக்க வேண்டும். பாதங்கள் புதிய இடங்களைத் தேட வேண்டும். மனம் முயற்சியுடன் புதிய உயரங் களைத் தொடவேண்டும். கைகள், பாதங்கள், மனம் ஆகிய மூன்றன் சமநிலைச் செயல்கள் நிலையான தன்மையை மனத்திற்குத் தருகிறது. அத்தகைய நிலைத்த மனமே ஒரு மனித ஆன்மாவிற்கு அழகு தருவதாகும். மனிதன் தவறான இடங்களில் இத்தகைய மனத்தைத் தேடித் திரிவதால் இத்தகைய மனம் அமைவது உலகில் மிக அரிதாகவே காணப்படுகிறது. நிலைத்த மனம் என்பது குகைகளிலோ, கோவில்களிலோ, அரண்மனைகளிலோ, பெண்களின் இருப்பிடங்களிலோ கிடைப்பதல்ல. அது கிடைத்தற்கரியதும் அல்ல. சமநிலை வாழ்வு என்பது பொருளாதாரம், சமூகம், மனநலம், அறம், பக்தி ஆகிய அய்ந்து கூறுகளின் கலவை ஆகும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை உணவு இல்லை என்ற கவலை இருக்கக்கூடாது. சமுதாய அளவில் ஒருவன் அந்தஸ்தும் மதிப்பும் பெற்றிருக்கவேண்டும். அறம் என்ற நிலையில் ஒருவர் உண்மையாகவும் இரக்கம் உள்ளவராகவும் அன்பு நிறைந்தவராகவும் இருக்கவேண்டும். மனநலம் என்ற அளவில்

ஒருவர் நுண்ணறிவு, புத்திசாலித்தனம், அறிவு முதலியன நிரம்பியவராக இருக்க வேண்டும். பக்தி என்ற அளவில் ஒருவர் உலகத்தோடு ஒருமைப்பாட்டுணர்வு கொண்டிருக்க வேண்டும்.

மிகவும் ஆறுதலானதும் சீர்திருத்தம் நிரம்பியதுமான வாழ்க்கையே வெற்றிகரமான வாழ்க்கையாகும். அத்தகைய வாழ்க்கை பற்றிய அறிவைக் குழந்தைப் பருவத்திலிருந்தே வலியுறுத்தி வளர்க்க வேண்டும். இத்தகைய அறிவு நம்மை ஒரு அங்கத்தினராகக் கொண்ட ஒரு அரசின் தெய்வீக வல்லமை நிரம்பப் பெற்ற தலைவனான மன்னனோடு பெரிதும் தொடர்புடையதும் போதுமானதும் ஆகும். மன்னன் நம்மைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை. தனது நிர்வாகத்தை மேற்கொள்ள நம்மை எந்த வேலையையும் செய்யப் பணிக்க அவருக்கு அதிகாரம் உண்டு. நமது அன்றாட விருப்பம் நம் வாழ்வை வசதியானதாக ஆக்கும் பொருட்டு எப்படிச் சீரமைப்பது என்பதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அப்படியாயின் எத்தகைய வாழ்வு சீரான வாழ்வு ஆகும்? என்ற கேள்வி எழுகிறது. நமது உடலில் உறுப்புக்கள் அனைத்தும் நமது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். எரிச்சல்கள் தரும் சூழ்நிலையை மன அமைதியுடன் தாங்கிக்கொள்ள வேண்டும். பசியும் தாகமும் நம் உடலையோ மனத்தையோ வருத்தக்கூடாது. நமது பழக்க வழக்கங்கள் பிறருக்குத் தொல்லை தருவதாய் அமையக்கூடாது. இக்கருத்து உடல் சார்ந்தது. ஆனால் பல துயரங்கள் நமது மன ஒழுங்கின்மையாலேயே உருவாக்கப்படுகின்றன. அன்பில்லாமலும், ஆர்வத்தைக் காட்டாமலும் பேசுதல், பிறரைக் குற்றம் சாட்டுவதைப் பேச்சில் நிறுத்த முடியாமை, நமது கவனமில்லாத பேச்சினால் நம்மைப் பற்றிய பிறரது மதிப்பான எண்ணத்தை குறைத்துக்கொள்ளுதல், சேர்ந்திருப்பவரைப் பிரித்தல், பல நட்புக்களைப் பிரித்தல், பலரது தூக்கத்தைக் கெடுக்கும் அளவிற்கு அவர்கள் மனஅமைதியைக் குலைத்தல் ஆகிய காரியங்களை நாம் செய்கிறோம். பிறர் செய்யக்கூடிய அளவை விட அதிகமாக நாம் எதிர்பார்த்து அது முடியாதபோது அதிருப்தி அடைகிறோம். மனநிலையில் நல்ல சீர்திருத்தம் கொண்டுவருவதற்குப் பல வருடங்கள் முயற்சிகள் எடுக்கவேண்டும். சத்தியம், நீதி முதலியவற்றைச் சிறப்பாக உருவாக்கிக் கொண்டு அதை நிலையாகத் தொடர்ந்து கையாள வேண்டும். உடல் நிலை, உள நிலையில் சீர்திருத்தம் கொண்டு

வரும்போது நமக்குள் அமைதியை உணரலாம். எவருடைய உள்ளம், உடல் சீர்திருத்தப்பட்டுள்ளதோ அவரது ஆன்மா மிகவும் சீரானதாக இருக்கும்.

சுய முயற்சியினால் ஒவ்வொரு செங்கல்லையும் இணைப்பதால் ஆளுமை உருவாக்கப்பட முடியும். சுயமுயற்சியின் விளைவுதான் நல்ல ஆளுமையே தவிர பெற்றோரிடமிருந்து பரம்பரை பரம்பரையாக வருவதல்ல. நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து வரும் உதவியால் உருவாக்கப் படுவது மல்ல. பிறப்பு, ஆஸ்தி, பிறவி அறிவு முதலியவற்றினால் விளையும் முக்கிய விளைவும் அல்ல. ஆளுமை, நல்ல கொள்கைகளின் அடிப்படையில் உருவாவது. ஒருவர் செய்யும் நல்ல செயல்களின் இயல்பான வளர்ச்சியே ஆளுமை ஆகும். எவனொருவன் ஒழுங்கான ஆளுமையைப் பெற விரும்புகிறானோ அவன் தவறு, ஏமாற்று, மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை முறை, உண்மையின்மை முதலியவற்றைக் கைவிடவேண்டும். பிறரைப்பற்றி அவதூறு கூறுதல், பகை முதலியன ஒருவரது ஆளுமையின் கீறல்கள் விழச் செய்வன. மதம், தேசப்பற்று, ஆன்மீக உணர்வு முதலியவை சுயபோதைக்குக் காரணமான ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் சுய-ஒழுங்கு குறித்த உணர்வுடையவன் ஏற்றிக்கொள்ளும் இப்போதை தனித்தன்மை வாய்ந்ததுவே. அரிய ஆளுமை வாய்த்தவர்களின் கண்கள் இலக்கு நோக்கியே செல்லும். தங்கள் பாதையிலிருந்து அவர்கள் நோக்கம் சிறிதும் நழுவுவதில்லை. சத்தியம், நேர்மை, நம்பகத்தன்மை முதலியவற்றை மேற் கொள்ளுவதற்காக அவர்கள் போராட வேண்டியதில்லை. தங்கள் மனச்சாட்சியுடன் அவர்கள் எப்பொழுதும் போராட வேண்டி இருப்பதில்லை. மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி நீர் செல்வதுபோல, அவர்களது ஒவ்வொரு செயலும் அறம் பொருந்திய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும். தங்களை அண்டும் உணர்வுகள் தீய உணர்வுகள்தானா என்று அவர்கள் சோதித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தீய உணர்வு அவர்களுள் எழுவதே இல்லை. அவர்கள் மலர்களைப் போல சிறப்பும் அழகும் வாய்ந்தவர்கள். எனவே அவர்கள் பிறர் தங்களைச் சிறந்தவர்கள் என்று கூறுவதை எதிர்பார்க்காமல் கடவுளின் பார்வையில் அன்பானவர்கள் என்று கருதப்படுவதை விரும்புகிறார்கள். சுய-ஒழுங்கு கைவரப்பெறாமல் அவர்கள்

திருப்தியடைவதில்லை. அவர்கள் மொத்த மனித இனத்தின் நலத்தையே விரும்புகிறார்கள். சீர்திருந்திய அன்பான மனத்தின் அடிப்படையே நல்ல ஆளுமை. அத்தகைய மனிதனின் வருகைக்காக மொத்த உலகமே காத்திருக்கும். அத்தகைய மனிதன் அன்பின் படைப்பு ஆவார். அவர் இயற்கைக் காதலின் ஊற்றும் ஆவார்.

குர்பக்ஷ் சிங் இயற்கைக் காதலின் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். 'ஸாகேஜ் ப்ரீத்' என்று இயற்கை அன்பிற்குப் பெயர் தருகிறார் அவர். யங்க்ஸ்டவுனில் அவர் இருந்தபோது அவர் சந்தித்த ஒரு அம்மையாரே அவரது ''பியார் கப்னே நாஹின் பெஹ்சன் ஹாய்'' (அன்பு என்பது ஆக்கிரமிப்பு உணர்வு அல்ல; அறிந்துகொள்ளுதலே ஆகும்) என்ற கதை உருவாவதற்கு மூலகாரணமாக இருந்தவர். இத்தகைய அன்பைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, ''சஸ்ஸி-புன்னு, ஸோனி-மஹிவால், ஷிரின்-ஃபர்ஹத் ஆகியோர் ஒருவரை ஒருவர் என்றும் உயிருக்குயிராக நேசிக்கும் அன்பினர் என்பது உண்மை. அவர்களது அன்பைப்போல் வேறு எங்கும் காணமுடியாது. ஒவ்வொருவரும் தன் வாழ்நாள் முழுவதும் ஏதோ ஒரு வகையில் அன்புக்காக ஏங்குகின்றனர். அன்பிற்குரிய ஒருவர் இவ்வுலகை விட்டுச்செல்ல நேரிடும்போது, அவரது கூட இருந்தவர்கள் தனிமையில் தாங்களும் உடனே இறந்துபோக முடியாமல், எஞ்சிய வாழ்நாட்கள் முழுவதும் இறந்தவரது அன்பைக் குறித்தும் அவர் தன்னுடன் வாழ்ந்த காலத்து நிகழ்ந்த அன்பான செயல்கள் காட்சியாக வேகமாக மனதில் நிழலாட வாழ்கின்றனர். ஆனால் இக்காட்சிகள் அனைத்திலும் ஒருவருடைய உடைமையாகத் தன்னை ஆக்கிக் கொள்ளும் உணர்வே காணப்படுகிறது. அவளுக்கு உடைமைப்படுத்திக்கொள்ளும் ஆசை இல்லை. இருப்பினும் அவன் கள்ளம் கபடமற்ற முறைகளில் காட்டப்படும் அன்புக் காட்சிகளைத் தேடிக்கொண்டே இருக்கிறான். சில நேரங்களில் அன்பே வடிவமான தெய்வம்கூட அவனை, அன்புகாட்டும் உடைமைப்படுத்திக்கொள்ளும் ஆன்மாவுக்காகப் பைத்தியமாக ஆக்கிவைக்கிறது. அவன் யாரையும் விரும்புவதில்லை. எனவே ஒருவரது அன்பை உடைமைப்படுத்திக்கொள்ளும் ஆசையை விட்டுவிடுகிறான். ''ஸாஹஜ் ப்ரீத்''தின் பால் (இயற்கை அன்பின் பால்) ஈர்க்கப்படுகிறான். டிக்கன்ஸ் எழுதிய 'எ டேல் ஆஃப் டூ ஸிட்டிஸ்'' என்ற புதினத்தில் இடம்பெறும் பாத்திரமாகிய ஸிட்னி

கார்டன் போல அவன் தன்னைத் தானே தன் அன்புக்குரியவனுக்காக அர்ப்பணித்துக்கொள்ளுகிறான். குர்பக்ஷ் சிங் படைப்புக்களில் இத்தகைய இயற்கை அன்பே விரவிக் காணப்படுகிறது.

'ராஜ்குமாரி லதிகா தே ஹோர் ப்ரீத் தர்மா' என்ற நூலிற்கு அவர் எழுதிய முன்னுரையில் குர்பக்ஷ் சிங், இதில் உள்ள ஆனந்தகுமார் எழுதியுள்ள இயற்கைக் காதல் குறித்த கட்டுரையைப் படித்தால் வாசகர்கள் 'ஸாஹேஜ் ப்ரீத்' பற்றிப் புரிந்துகொள்வார்கள் என்று எழுதுகிறார். கட்டுரையின் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. நிலைத்த பரம்பொருள் நிலையில்லாத சூழலில் உள்ளவற்றோடு மறைமுகமாகத் தன்னை இணைத்துக்கொள்ளும் ஆன்மீக அன்பிற்கிணையாக இவ்வுலகில் காதலர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து நம்பி வாழ்ந்து ஒருவரை ஒருவர் மறக்க முடியால் சுயமாக மூழ்கிப் போவதைத் தவிர வேறு எதையும் ஒப்பிட்டுக் கூற முடியாது. பூமியில் உள்ளவர்களின் இத்தகைய நேசத்திற்குக் காரணம் மக்கள் ஆன்மீக வாழ்வில் பங்குகொள்ளாமல் இருத்தல் என்பதல்ல; பற்றுதலோடு பங்குகொள்ளாமல் பெயரளவில் பங்குகொள்ளுதலே எனலாம். 'ஸாகஜ் என்பதைப் புரிந்துகொள்ள ஒருவனுக்குத் தனிமனித அன்பு குறித்த பயிற்சி இல்லையெனினும் இனம் சார்ந்த அன்பும் விளையாட்டு, நடனம், இசை, தூய்மை முதலியன குறித்த கல்வியும் கட்டாயம் தேவை. அதிலும் உடலுறவும் மிகவும் அருகியும், போதைப் பொருளைப் போல வியப்பிற்குரியதாகவும் அமையாமல் பொறுமையாக இருக்கும் ஒருவனிடம் பிற ஜீவராசிகள், காடு, மலர், மலை போன்றன தங்களை வெளிப்படுத்திக்கொள்வதை அவன் எவ்வாறு அனுபவிப்பானோ அதைப்போல பெண்ணையும் அனுபவிக்க வேண்டும். உடல் பரபரப்பில் மட்டும் ஒருவன் அன்பாக நடந்துகொள்ளுமாறு கட்டாயப் படுத்தப்படக்கூடாது. காதலர்களின் தேடுதல் என்பது வெறும் மகிழ்ச்சி என்பதோடு தொடர்புபடுவதைவிட பொறுப்புணர்ச்சியோடு கூடியதாக இருக்கவேண்டும்.

இதன்மூலம் நான் மென்மையான உணர்வுகளையோ, பொறுமையையோ, சுய-தியாகத்தையோ குறிப்பிடவில்லை. மாறாக அவனைப் பெரிதும் திருப்திப்படுத்தும் ஒன்றனையே குறிப்பிடுகிறேன். அரேபியாவிலிருந்து பர்ட்டன் என்பவர் ''முசல்மான்கள் தங்கள் அடிமைகளைக் கூட மதிக்கிறார்கள்;

அடிமை போன்ற எந்தப் பெண்ணின் காதலையும் வெற்றி கொள்ளவேண்டும் என்ற 'புந்தொனொர்' என்ற பண்பாட்டின் நிலையையும் குறிப்பிட்டு நமக்கு எழுதுகிறார் (இந்தியாவைப் போன்ற அளவில் அடிமைத்தனம் என்பது அங்கு இல்லை).

''லஃப்காடியோ ஹெர்ன் என்பவர் நவீன ஐய்ரோப்பிய இலக்கியம் காதல் என்ற கருத்துடன் படர்ந்து பரவிநிற்கும் பெரிய அளவைக் குறிப்பிடுகிறார். எப்படியாயினும், இந்துஸ்தானத்து வைணவ இலக்கியங்களோடு ஒப்பிடத் தகுந்தன எதுவும் இல்லை எனலாம். அவற்றை நன்கு விளக்கிக் கூறலாம்: ஐரோப்பிய காதல் இலக்கியங்களில் விளக்கத்தைவிட மிகச் சிறந்த கூறுகள் காணப்படுதல் அரிது. இது ஒரு இடைக்கால நிலையே எனலாம். ஏனெனில் மேலைநாட்டில் காதல் சுதந்திரம் இலட்சியவாதமாக இருக்கிறது. மேலும் அதன் வடிவங்கள் ஆன்மீக மகத்துவம் தெளிவாகும்வரை வளர்ச்சியடைய விதிக்கப்பட்டிருக்கும் பண்பாட்டு உணர்வும் காணப்படுகிறது. 'மகிழ்ச்சியாக இருத்தல்' என்ற புதிய அலைக் கருத்துக்களின்படி எங்கு 'எதற்கும் முடிவில்லை' என்று ஒத்துக்கொள்ளப்படுகிறதோ, 'எதற்குமே ஒரு அர்த்தம் உண்டு' என்று எண்ணப்படுகிறதோ அங்கு இயற்கையைப் (ஸாகஜ்) புரிந்துகொள்ள மிகவும் அருகிய நிலையில் முன் ஏற்பாடுகள் உள்ளன எனலாம். இது 'தபா' என்ற கொள்கையே. இக் கொள்கைப்படி அவர்கள் யாரையும் அவர்கள் பின்னேயே சென்று பிடிக்கமாட்டார்கள். எது நமக்கு நன்மையெனில் அதுவாகவே நம் கைக்கு வந்து சேருதல்-நாம் வேகமாகச் சென்று அதைப் பிடிப்போமெனில் அது என்றுமே நம் கையில் அகப்படாமல் தப்பித்துவிடும்''.

'ராஜ்குமாரி லதிகா தே ஹொர் ப்ரீத் த்ரமே' என்ற நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில் குர்பக்ஷ் சிங் விளக்கமாக இத் தத்துவத்தைத் தன் படைப்புக்களிலிருந்து தகுந்த சான்றுகளுடன் விளக்கியிருக்கிறார். அவரைப் பொறுத்தவரை மேலைநாட்டு அறிவில் இருவகையான 'அன்பு' பெயர்பெற்றவை. ஒன்று பாலுணர்வு அடிப்படையானது. மற்றொன்று ஒரு ஆணும் பெண்ணும் எவ்விதக் காதல் உணர்வின்றி நட்பு பாராட்டும் தகைமையது. முதல் வகை அன்பில் உடல் பூர்வமான ஆசைகளும் பரபரப்புக்களும் ஆத்துமாவில் ஒரு வேகத்தை உருவாக்குகின்றன. இரண்டாம் வகையில் இரத்தத்தில் எவ்வித வெதுவெதுப்பும்

இல்லையாதலால் ஆத்துமாவில் எல்லாவித உணர்வுகளும் அகற்றப்பட்டு விடுகின்றன. இதில் காமம் என்பதற்கு எவ்வித மகத்துவமுமில்லை. குர்பக்ஷ் சிங், ''ஒரு காதல், மேற்கூறிய இரண்டிலிருந்தும் தனிப்பட்டு எனது அனுபவத்தில் வந்தது. எனது சொந்த நாட்டில் எனது நண்பர்களைத் தவிர பிறரிடம் நான் இதை மறைத்து வைத்திருந்தேன். ஏனெனில் இவ்விஷயம் குறித்த பொதுவான கருத்துக்கள் மிகவும் பரந்தமனத்துடன் ஒப்புக் கொள்ளப்படுபவை அல்ல. நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றபோது, பல்வேறு கட்டங்களில் பிறருக்கு எனது கருத்துக்களைக் கூறி அதைப் பரிசீலனை செய்யும் தைரியத்தைப் பெற்றேன். இக்காரணத்தின் பொருட்டு நான் எனது உண்மைக் கதையினைப் 'பசித்த ஆத்துமா' (புக்கி ஆத்மா) என்ற தலைப்பில் எழுதி அதை அமெரிக்காவில் சமர்ப்பித்தேன். அக் கதையின் வடிவமும் கதைப் பாத்திரங்களின் உணர்ச்சியும் எல்லோராலும் விரும்பப்பட்டன; ஆனால் கதையின் முடிவு யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. எனது படித்த நண்பர்களுள் ஒருவர் அக்கதை வெற்றியடையும் பொருட்டுப் பொதுவான கருத்துக் களுக்கேற்பக் கதை முடிவை மாற்றியமைக்கும்படி அறிவுறுத் தினார். ஆனால் என்னால் இதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் ஒரு சுவையான கதையை எழுதுவது என் நோக்கமல்ல. எனது அனுபவம் ஒன்றினைக் காட்டுவதன் மூலம் வாழ்க்கை நிலையைப் படம்பிடித்துக் காட்டவே நான் விரும்பினேன். எனது படைப்பு ஒருவராலும் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. நான் அக்கதையை மறந்துவிட்டேன். அப்பொழுது ஒருநாள் நான் அனுப்பியவர் பெயர் குறிப்பிடப்படாத ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதை எழுதியவர் அக்கதை உண்மையில் தனது கதை என்றும் தான் ஒரு 'பசித்த ஆன்மா' என்றும் குறிப்பிட்டிருந்தார். சில நாட்களுக்குப் பின் எனக்கு மீண்டும் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் தான் என்னைச் சந்திக்க விரும்பவதாகவும் அதற்குச் சிறிது நேரம் திட்டமிடவும் கேட்டிருந்தார். அக்கடிதத்தை எழுதிய அம்மையார் ஒரு செல்வந்தரின் மனைவி ஆவார். அவளது மிகவும் சுறுசுறுப்பான கணவனிடமிருந்து அவளது இனிய ஆத்துமா கருத்துக்களில் வேறுபட்டிருந்தது. நாங்கள் சந்தித்தோம். எனது கதையில் நான் கொண்டு வந்திருந்ததும் இயல்பானதன்று என்று கருதப் பட்டதுமான அந்த முடிவே எங்களது இரண்டு மாதச் சந்திப்பிற்குப்

பின் ஒளிவிட ஆரம்பித்தது. பாலுறவு இல்லாமல் இருந்தபோதிலும், இவ்வுறவில் காதல் என்பது அதிகமாக இல்லையெனினும் செல்வந்தரின் மனைவி அடிக்கடி தனது சமூக நிலையை ஆபத்தில் கொண்டுவந்து நிறுத்தினாள். தனது கடிதங்களின் முடிவில் பெயரைக் குறிப்பிட்டிருப்பினும் மிகுதியான மகிழ்ச்சி உணர்வில் பைத்தியமாக எழுதியிருந்தார். அவளது அன்பு 'இயற்கைக் காதல்' வகையில் அடங்காதா? அவளது ஆரம்ப காலக் கடிதங்களில் ஒன்றில் அவள் என்னை 'எனது ஒளியே அல்லது மகனே' என்று விளித்து உங்கள் விருப்பப்படியே எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டிருந்ததுவே இது 'இயற்கைக் காதல்' வகையில் அடங்கும் என்பதற்குத் தகுந்த சாட்சியாகும். அதேநேரம் தனது மிகுதியான அன்பிற்குரியவரை அவள் தனது ஒளியே அல்லது மகனே என்று அழைக்க முடியும். நான் புரிந்துகொண்ட வரை, அவள் இவ்வார்த்தைகளைத் தன் அன்பின் தூய்மையை வெளிப்படுத்தவே பயன்படுத்தி யிருக்கிறாள். இக் காதலின் விளைவு அன்பே இல்லாமல் வறண்டுபோன ஒரு ஆத்துமாவின் மீது ஒரு மேகம் இறங்கியதைப் போன்றது ஆகும். வறண்டுபோன இதயம் மேல்நோக்கிப் பார்க்கிறது. கண்களிலிருந்து கண்ணீர் உருண்டோடுகிறது. வறண்ட இதயத்தின் இலைகள் பசுமையாகச் செழிக்க ஆரம்பிக்கின்றன. அதற்கு முன்பு பொறாமையான சூழல் காணப்பட்டது. இப்பொழுது மகிழ்ச்சியான சூழலுக்கான வழிபாடு ஆரம்பமாகி யிருக்கிறது. நன்றாகத் தோற்றமளிக்காதவர்களை யெல்லாம் நல்லவர்களாகப் பார்க்கும் ஆவல் இப்பொழுது காணப்படுகிறது. மேற்குறிப்பிட்ட அம்மையாரின் அன்புப் பசிவீட்டில் காரண மில்லாமல் ஏற்பட்ட சிறு சிறு பழைய சச்சரவுகள் அவரது திருப்திப்பட்ட இதயத்தில் தொடர்ந்து இருந்துவர முடியாது. கணவன் மனைவியின் இதயங்களின் கனிதரும் பகுதி முழுவதும் இலைகளாகத் துளிர்க்க ஆரம்பித்து, கனி கொடுக்கும் வசந்த காலங்கள் அவர்களுக்குள் உருவாகி, அதன்பின் அவர்களுக்குள் மேகத் தூதுவனுக்கோ அல்லது அன்பு மேகத்திற்கோ உண்டான பசி இல்லை.

முதல் வகை அன்பில் தாம் நேசிப்பவரை முழுமையாக உடைமைப்படுத்திக்கொள்ளும் ஆவல் இருக்கிறது. இரண்டாம் வகையான அன்பில், தம் அன்பிற்குரியவரின் வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் அறிந்துகொள்ளுதலில் இன்பம் பெறப்படுகிறது.

மூன்றாம் வகை அன்பில் (ஸாஹஜ் ப்ரீத்) அன்பிற்குரியவர் அன்பின் சூரியனாகக் காட்சி தருகிறார். உணர்ச்சிகளை மனதில் தூண்டு வதன்மூலம் அது கண்களின் மங்கிய கண்ணாடியைத் தூண்டுவதோடு, மாறுபட்ட உறவையும் வெளிப்படுத்துவதனால் உலகம் அழகானதாகத் தோன்றுகிறது. நாம் அறிந்துகொள்ளாத வர்களின் அழகு நம்முள் ஒளிவிட ஆரம்பிக்கிறது. நாம் சூரியனை விரும்பிக் கேட்கிறோம். அதை அறையினுள் வைத்துக் கொள்வதற்கோ அதன் கழுத்தைக் கட்டிப்பிடித்து உரிமை கொண்டாடுவதற்கோ அல்ல. ஆனால் உலகைப் பார்ப்பதற்கும் இருட்டிலிருந்து தப்பித்து உண்மையைத் தேடுவதற்குமே கேட்கிறோம். இதுவே இயற்கைக் காதலில் அன்பிற்குரியவர் செயல்படும் முறை ஆகும்.

''பசித்த ஆத்துமாவின் மேற்குறிப்பிட்ட கதை எனது படித்த நண்பருக்கு விளக்கிச் சொல்லப்பட்டது. அவர் பெரிதும் அதிசயித்து, எனது தேடுதலில் லயித்து மீண்டும் மீண்டும் நான் இந்த மூன்றாம் வகைக் காதல் குறித்த நூல் ஒன்று எழுதவேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் நான் என் தாய்நாட்டிற்குத் திரும்பியபோது நான் அரசாங்கப் பணியில் சேர்ந்தேன். எனது பேனாவைத்தொட்டு எழுதாமல் விட்டுவிட வேண்டிய சூழல் உண்டாகி ஏறக்குறைய ஒன்பது வருடங்களுக்கு எனக்கு எழுத வேண்டும் என்ற ஆசை உருவாகவில்லை. இப்பொழுது 'ப்ரீத் லாரி' எனது அதிருப்தியடைந்த எழுதுகோலோடு ஒரு புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்தியதால் எனது அமெரிக்க நண்பரின் ஆசையை ஈடுசெய்யும் நோக்கில் நான் இவ்வகை அன்பு குறித்த கருத்துக்களைப் பெருவிருப்புடன் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். இதுகுறித்த அறிவைப் பெறும்பொருட்டு நான் நூல்கள் சில வாசிக்கிறேன். வாசித்தபின்னர், எனது தேடுதலின் முடிவாகக் கிடைத்த அன்பு என்று நான் கருதிக்கொண்டிருக்கும் அன்பு எனது நாட்டில் பல நூற்றுக்கணக்கான வருடங்களாகப் பொதுவானதாக இருந்துவந்திருக்கிறது என்பதறிந்து நான் ஆச்சரியப்படுகிறேன். சமஸ்கிருத இலக்கியத்தில் இவ்வன்பு 'ஸாகஜ்' எனப்படுகிறது. இவ்வகைக் காதல்மீது இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. அண்மையில் படைக்கப்பட்ட இலக்கியத்திற்குச் சான்று சந்தி தாஸ், ராமி என்ற வண்ணாத்தி ஒருத்தி மீது கொண்ட காதல் பற்றியது ஆகும்.

'மேரி அச்சுத் ஸகேலி' (எனது தீண்டப்படக்கூடாத பெண் தோழி), 'ஜமா தே அஸ்த அநோகா மாலி' (ஓமாவும் அவளது வித்தியாசமான தோட்டக்காரரும்), 'புக்கி ஆத்மா' (ஒரு பசித்த ஆத்துமா), 'ராஜ்குமாரி லதிகா' ஆகிய அக்காலப் படைப்புக்கள் எதையும் கவனிப்பதோ அல்லது வாசிப்பதோ இல்லாத காலகட்டங்களில் எழுதப்பட்டவையாகும்.

உடல், மனம், ஆத்துமா ஆகிய மூன்றும் சம அளவில் பங்குகொள்ளும் அத்தகைய அன்பு என்னால் 'ஸாகஜ் ப்ரீத்' என்று அழைக்கப்பட்டது. இனிமை வாய்ந்த, பக்குவமடைந்த ஆத்துமாக்களிலேயே இவ்வன்பு உருவாக்கப்படுகிறது. காதலர்களின் அன்புகுறித்த பகியும் அவர்களால் பகிர்ந்து கொள்ளப்படும் அன்பும் மிகவும் மென்மையாகவும் தூய்மை யானதாகவும் இருப்பதோடு நாகரிகமில்லாத கொச்சைத்தனமான அனுபவிப்புக்களுக்கு ஆதாரமான ஈர்ப்புத்தன்மை இல்லாததாக ஆகிறது....இங்கு இக் காதலின் மூலம் சில ரசனைகளை அடைவது இவ்விருவரது நோக்கமல்ல; காதல் மலைக்கெதிராக இரு ஆத்துமாக்கள் தட்டிப்பார்த்துக் கொள்ளுதலால் ஒரு தீப்பொறியை உண்டாக்குவதே நோக்கம் ஆகும். இப்பொறி இறுதியில் ஒரு ஒளியாக ஆகிறது. அவ்வொளி வாழ்வின் இருட்டான பகுதிகளை விளக்கிக் காட்டுகிறது. ராமியை விளித்து சந்திதால் இந்நிலையைத் தன் சொந்த வார்த்தைகளால் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார். ''நான் உன் பாதத்தில் அடைக்கலமாகச் சேர்ந்திருக்கிறேன். ஓ! என் அன்பே! உன்னை நான் பார்க்காதபோது என் மனதில் அமைதி இல்லை... பாதுகாப்பற்ற குழந்தைக்கு ஒரு தாய் எப்படியோ அதுபோலவே எனக்கு நீயும் ஆவாய். நீ என் தேவதை, நீ என் கழுத்துக்கு ஆபரணம், என் உலகமே நீதான். நீ இல்லாமல் எனக்கு எங்கும் இருட்டாகத் தென்படுகிறது. என் தியானங்களின் மூலப்பொருளே நீதான். உனது மென்மையையும் அழகையும் என்னால் மறக்கமுடியாது - இருப்பினும் எனக்கு என் இதயத்தில் எந்த ஆசையும் இல்லை''. மேற்குறிப்பிட்ட நிலையில் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயம் ராமியைத் தன் கழுத்துக்கு ஆபரணமாகவும், தன் உலகமாயும், தன் அமைதிக்கு ஆதாரமாகவும், ராமியின் மென்மையையும் அழகையும் ஒருபோதும் மறக்கமுடியாது எனவும் கூறும் சந்தி தாஸால் 'என் இதயத்தில் ஆசையும் இல்லை' என்றும் கூறமுடிகிறது. இவ்வார்த்தைகளில் ராஜ்குமாரி லதிகாவின் அன்பைவிட மாறுபட்ட ஒன்று

காணப்படுகிறது. தனது அன்பிற்குரியவர் மீது லதிகா கொண்டிருக்கும் அன்பு அளவுகடந்த பைத்தியமான அன்பு ஆகும். தனது கனவுகளின் மையம் அவன் எனக் கருதுகிறாள். இருப்பினும் மந்திர் (தனது அன்பிற்குரியவன்) மீது எவ்வித ஆசையும் இல்லாமலும் இருக்கிறாள். அவளது தந்தை மந்திரை மணந்து கொள்ளுமாறு அவளுக்கு அனுமதி தருகிறார். ஆனால் அவள் மறுக்கிறாள். திருமணம் அவளது வாழ்க்கையை ஆறுதல்படுத்தி முழு மகிழ்ச்சியுடையதாய் ஆக்கியிருக்கலாம். ஆனால் அவை அவளது நோக்கமல்ல. அவளது காதல் ஒரு அறிந்துகொள்ளுதல் ஆகும். அதனுடனேயே முடிந்துவிடும் ஒன்று. அவளது பயணத்தின் இறுதியில் நின்று நிலைக்கும் இடம். எனவே அதன் ஒழுங்கு குறித்து எந்தச் சந்திப்பும் இனி நிகழ வேண்டியதில்லை. உடைமைப் படுத்திக்கொள்ளும் நோக்கம் எதுவும் அதில் இல்லை. மகிழ்ச்சியாக இருத்தல் என்பதை இக்காதல் வேண்டுவதில்லை. குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசையும் அதில் இல்லை - அது ஒரு அறிந்துகொள்ளுதல், எந்தக் காலத்தையும் அது உள்ளடக்கியதல்ல. எவ்விதியையும் அது பின்பற்றுவதில்லை. அதற்கென்று எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. நீரும் நீரும் கலக்கும்போது அது பிரிவதில்லை. காற்று காற்றுடன் கலக்கும்போது அது பிரிவதில்லை. மழை வருகிறது காற்று அடிக்கிறது. அதேபோல் 'ஸாகஜ்' ஒரு இயற்கையின் உந்துதல். இயற்கைக் காதலின் கோட்பாடுபற்றி குர்பக்ஷ் சிங்கே மேற்குறிப்பிட்டவாறு எழுதியுள்ளார்.

9. பஞ்சாபி எழுத்தாளர்களின்மீது ஏற்படுத்திய தாக்கம்

குர்பக்ஷ் சிங் இலக்கிய அரங்கில் தோன்றுவதற்கு முன்பு பான்வீர் சிங் ஏற்கனவே சீக்கிய வரலாறும் மதமும் குறித்து எழுதும் ஓர் எழுத்தாளராகத் தன்னை நிலைநிறுத்தியிருந்தார். சிங் சபை இயக்கம் சீக்கியர்களை ஆழ்ந்த மத உணர்வைப் பெற்று விழித்தெழச் செய்திருந்தது. அதைப்போலவே பஞ்சாபில் உள்ள இஸ்லாமியர் களும் தங்கள் மதப்பற்று குறித்துப் பின் தங்கியிருக்க வில்லை. கிறிஸ்தவ இயக்கங்கள் போதனைகளில் இறங்கியிருந்தன. குர்பக்ஷ் சிங் பிறந்து வளர்ந்தபோது, இதுவே பொதுவான சூழ்நிலையாக இருந்தது. அப்போது மதம் குறித்த எழுத்துக்களின் வெள்ளப் பிரவாகம் இருந்தது. 'பிரித்து ஆள்' என்ற பிரிட்டிஷ் அரசின் கொள்கை பஞ்சாபின் பல்வேறு இன மக்களிடையே வருத்தத்தை உண்டுபண்ணியிருந்தது. சீக்கிய மத இலக்கியங்கள் குர்முகி எழுத்தில் வரும்வரை, இந்துக்கள் தேவநாகரி, இந்தி ஆகிய மொழிகளையும் இஸ்லாமியர்கள் பெர்சியன், உருது ஆகிய மொழிகளையும் பயன்படுத்தினர். பஞ்சாபியர்களின் தாய் மொழியாக பஞ்சாபி இருந்தாலும் பஞ்சாபி மொழி சீக்கியர்களின் மொழியாகக் கருதப்பட்டது.

சிங் சபை இயக்கத்திற்குப் பிறகு அகாலி இயக்கம் வந்தது. அது குருத்வார சீர்திருத்த இயக்கமாக இருந்தபோதிலும் அரசியல் துடிப்புள்ள இயக்கமாகவும் இருந்தது. 1919இல் குர்பக்ஷ் சிங் அமெரிக்காவுக்குக் கல்விபயிலச் சென்றிருந்தார். அங்கிருந்து 1923 இல் திரும்பி பல்வேறு அய்ரோப்பிய நாடுகளைச் சென்று பார்வையிட்டுவிட்டு 1924இல் இந்தியா திரும்பி வந்தார். 9 வருடங்களுக்கு அரசுப்பணியாற்றினார். 1933ஆம் ஆண்டு அவர் 'ப்ரீத் லாரி' இதழை ஆரம்பித்தார். அவர் தன்னோடு பல புதுக் கருத்துக்களைக் கொண்டவராக அமெரிக்காவிலிருந்தும் பிற அய்ரோப்பிய நாடுகளிலிருந்தும் திரும்பி வந்தார். வாழ்க்கை பற்றிய அவரது பரந்த நோக்கு ஒரு கணிசமான மாறுதலைப் பெற்றிருந்தது. வாழ்க்கை, அன்பு முதலியவற்றைப் பற்றிய புதுக் கொள்கைகள் அவருள் உருவாகியிருந்தன. எனவே பஞ்சாபி

மக்களுக்கு அவர் புது மனிதராகத் தென்பட்டார். பஞ்சாபி எழுத்துக்களில் குர்முகி எழுத்துக்களிலும் அவரது இதழ் இருந்ததால் அவரது வாசகர் வட்டம் பெரிதும் சீக்கிய மதவாதிகளைக் கொண்டதாகவே இருந்தது. குரு குர்பந்த் சிங் பற்றி அவர், ''அவரது புதுக் கருத்துக்கள் மரபுவழிப்பட்ட சீக்கிய மதவாதிகளால் பெரிதும் எதிர்க்கப்பட்டன. மதச் சடங்குகள், மத அடையாளம், மதச் செயற்கை விதிமுறைகள் குறித்த அவரது கருத்துக்கள் மத அடிப்படைவாதிகளால் மதிப்பற்றவை எனக் கருதப்பட்டன. எப்படியாயினும் அவரது அணுகுமுறை அறிவுபூர்வமானது; சீக்கிய அறிவுஜீவிகள் அவருக்கு அடைக்கலமாக அவரைக் காப்பாற்ற முன்வந்தனர்'' என்று எழுதுகிறார்.

குர்பக்ஷ் சிங்தான் வாழ்க்கை, இலக்கியம், கலை, மதம், நீதி, காதல், பாலுணர்வு போன்ற பலவற்றைப் பற்றிய புதிய பல கருத்துக்களை எழுதி பஞ்சாப் எழுத்தில் முதன்முதலில் ஒரு துடிப்பைக் கொண்டுவந்தார். அவரது பல கருத்துக்கள் அவரது இயற்கைக் காதல் குறித்த கருத்தைச் சுற்றிச் சுற்றியே அமைந்திருந்தன. அவரது இலட்சியவாதக் கோட்பாடுகள் பலரை ஈர்த்தன. அவர்கள் அவர் பக்கத்திலேயே வாழ்ந்து அவரது அனுபவ ஞானங்களினால் தாங்களும் பலனடைய விரும்பினர். இதனால் ஒரு புதிய நகர நிர்மானம் தீர்மானிக்கப்பட்டு ப்ரீத் நகர் என்ற அன்பு நகரம் உருவாக்கப்பட்டது. பல எழுத்தாளர்கள் அவரையே தங்களின் எழுத்துக்களின் ஊற்றாக விரும்பி ஏற்றக்கொண்டு ப்ரீத் நகரில் அவரைச் சுற்றியே வாழ்ந்தனர். நானக் சிங், அம்ரிதா ப்ரிதம், உபேந்திரா நாத் 'ஆஷ்க்', ஸாகிர் லுதியானவி, பல்வந்த் கார்க்கி, தேவிந்தர் ஸத்யார்தி, நௌரங்சிங், பியாரா சிங் சேஹ்ரி, தர்ஷன் சிங் ஆவாரா போன்றோர் அவர்களுள் அடங்குவர். இவ்விலக்கிய வாதிகள் தவிர, கலைஞர் ஸோபாசிங், திரைப்பட நடிகர்கள் பால்ராஜ் ஸாஹ்னி, ஆச்லா சச்தேவ், பாடகர் சுரிந்தர் கௌர் முதலியோரும் ப்ரீத் நகரைத் தங்களது பாதுகாப்பிடமாகக் கருதினர். ப்ரீதம் சிங் (பாபா என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்); பஞ்சாபி பிரபல நூல் வெளியிட்டாளரான எஸ். ஜக்தீஷ் சிங், ஒரு பிரபல உளவியல் மருத்துவர், எழுத்தாளரும் நகைச்சுவையாளருமான பியாரா சிங் தத்தா ஆகியோரும் ப்ரீத் நகரிலேயே வாழ்ந்தனர். பிரபல தாவரவியல் வல்லுநரும், திறமையான அரசாங்க அதிகாரியும், குர்பக்ஷ் சிங்கின் நெருங்கிய நண்பருமான டாக்டர்

எம்.எஸ்.இரந்தவா அடிக்கடி ப்ரீத் நகரை வந்து பார்த்துவிட்டுச் செல்வதில் பெருவிருப்பம் கொண்டவர். இவ்வாறு ப்ரீத் நகர் பஞ்சாபின் ஒரு இலக்கிய, பண்பாட்டு மையமாக விளங்கியது. குர்பக்ஷ் சிங் இலக்கியத்தில் ஏற்படுத்திய புரட்சி, ஜஸ்வந்த் சிங் கன்வால், கர்தார் சிங் தக்கல், திவான் சிங் கலேபானி, பேராசிரியர் மோகன் சிங் ஆகியோரிடம் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியது. ப்ரீத் நகரில் குடியேறின பல எழுத்தாளர்கள் அந்த நகர் அவர்களுக்குச் சுயமாக சுதந்திரம் அளித்ததால் அந்நகரைப் பெரிதும் விரும்பினர். அறிவுஜீவிகள் நடத்திய பொதுவான கருத்துப் பரிமாற்றங்கள் அவர்களது எழுத்துக்களில் பொதுவான கூறாகப் பரிணமித்தன. காதல், மதம், நீதி, ஆளுமை, மகிழ்ச்சி, இலக்கியம், கலை, சுதந்திரம், உடல்நலம், வாழ்க்கை, மரணம் முதலியன பொதுவாகப் பேச எடுத்துக்கொள்ளப்பட்ட கருத்துக்கள். ப்ரீத் நகரில் வசிக்காத எழுத்தாளர்கள் கூட இதே கருத்துக்களைப் பற்றி எழுத ஆரம்பித்தனர். குர்பக்ஷ் சிங்கின் மகனான நவ்தேஜ் சிங்கும் 'ப்ரீத் லாரி'யுடன் பெரிதும் தொடர்புடையவர். பின்னர் அதன் பதிப்பாசிரியராக விளங்கியவர். தனது தந்தையின் நேரடிப் பாதிப்புக்குள்ளானவர். பஞ்சாபின் பிரபல இதழாளரும் குர்பக்ஷ் சிங்கின் மருமகனுமான ஜிகித் சிங் ஆனந்த், டாக்டர் அய்ஸ்வந்த் ஜில் முதலியோர் குர்பக்ஷ் சிங்கின் பாணியைத் தம் எழுத்துக்களில் ஓரளவு வெளிப்படுத்திக் காட்டினர். குர்பக்ஷ் சிங் தன்னை இதழியல் தலைவர் என்று நிரூபித்துக்கொண்டதால் பிற பத்திரிகைகளின் இதழாளர்கள் பலருக்கு அவரது எழுத்துக்கள் தூண்டு கோலாக அமைந்தன.

சில அக, புறக் கட்டாயங்களினால் குறிப்பாக நாட்டுப் பிரிவினையால் குர்பக்ஷ் சிங்கின் கனவுகள் நடுவில் சிதறடிக்கப்பட்டன. அவரும் அவரது தோழர்களும் பிரிவினை காரணமாக ப்ரீத் நகரை அப்படியே விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. நானக் சிங், குர்பக்ஷ் சிங் பற்றி எழுதும்போது, ''பல்வேறு தோல்வி எதிர்ப்புக்களைத் தாங்கியும் மனம் தளராத, தனது அன்புப் பாதையிலிருந்து சற்றும் விலகாத இந்த மனிதனின் சுய மறுப்புக் கொள்கைகட்குப் பாராட்டுக்கள். இந்த அன்புப் பறவை தனது முயற்சியை விட்டுவிடவில்லை. அவரது அன்பு பற்றிய செய்தி மிக தூரம் மக்களைச் சென்றடைந்திருக்கிறது'' என்று குறிப்பிடுகிறார். டாக்டர் எம். எஸ். இரந்தவா, ''குர்பக்ஷ் சிங்கின்

பல கனவுகள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உந்துதலாக அமைந்துள்ளன. பஞ்சாபிகளுக்கு அவர் அறிவியலின் பரந்த பரப்பைக்காட்டி அவர்களைக் குறுகிய எல்லையிலிருந்து வெளியேற்றினார். குர்பக்ஷ் சிங்கின் முத்திரை எப்போதும் பஞ்சாபி மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் பதிந்திருக்கும்'' என்று குர்பக்ஷ் சிங்கைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

துணைநூற் பட்டியல்

நூல்கள்

01. அஹ¯ஜா, ரோஷன்லால்: திரிமூர்த்தி குர்பக்ஷ் சிங் இக் அத்யான், நியூ புக் கம்பெனி, ஜலந்தர், 1970.

02. ஆஸாத், அவ்தர் சிங்: பஞ்சாபி ஸாகித் தே உஸ்ரயியாய், ஹிந்த் பப்ளிஷர்ஸ், அம்ரிட்ஸர், 1951.

03. பாஷா விபக்: கஹானி ஸித்தந்த் தே ஆலோசனா, பாட்டியாலா, 1970.

04. சாப்ரா, ஜக்ஜித் சிங்: ப்ரமுக் ஷைலிகர், குணா பப்ளிஷர்ஸ், ஜலந்தர், 1971.

05. தாதா, பியாரா ஸிங், அஜித் சிங்: குர்பக்ஷ் சிங், கலா தே ஷக்ஸியத், நேஷனல் புக் ஷாப், டெல்லி, 1978.

06. தில், பால்பிர் சிங்: பஞ்சாபி கஹானி தா விகாஸ், லாகூர் புக்ஷாப், லூதியானா, 1952.

07. குரூவர், புபிந்தர் சிங்: குர்பக்ஷ் சிங் தி நிபந்த்-கலா.

08. குர்சதன்சிங் (பாட்டியாலா): வர்த்மான் பஞ்சாபி வர்தக் விகாரி, லாகூர் புக்ஷாப், லூதியானா, இரண்டாம் பதிப்பு.

09. .....: குர்பக்ஷ் சிங் ப்ரீத் லாரி-ஜிவன் தே ரச்னா, பப்ளிகேஷன் பீரோ, பஞ்சாப் பல்கலைக்கழகம், பாடியாலா, 1985.

10. குர்சரண் சிங் (சண்டிகார்): பஞ்சாபி கலாப்கர், ஹிந்த் பப்ளிஷர்ஸ், அம்ரிட்ஸர், 1954.

11. .....: பஞ்சாபி கலாப் தா விகாஸ், பாஷா விபாக், பாட்டியாலா, 1961.

12. ஹர்சரண்சிங், டாக்டர்: பஞ்சாபி வர்தக் தா ஜனம் தே விகாஸ், பெப்ஸு புக் டிப்போ, பாட்டியாலா, 1972.

13. ஜித், குர்முக்சிங்: சம்கலி பஞ்சாபி கஹானி, பஞ்சாபி பிரகாஷக், நியூடெல்லி, 1957.

14. கஸேல், கிர்பால்சிங்: அதுனிக் கத்கர், குல்தீப் பிரஸ், அம்ரிட்சர், 1955.

15. காபூர், நரிந்தர் சிங்: பஞ்சாபி பதர்கரி தா விகாஸ் (நூலாக வெளியிடப்படாத ஆய்வுக் கட்டுரை), பஞ்சாபி பல்கலைக்கழகம், பாட்டியாலா, 1976.

16. லம்பா, தலித்கௌர்: குர்பக்ஷ் சிங் ப்ரீத் லாரி, அமர்ஜித் ஸாகித் பிரகாஷன், பாட்டியாலா, 1982.

17. ராஹி, ஜோகிந்தர்சிங்: பஞ்சாபி நாவல், நானக்சிங் புஸ்தக்மாலா, அம்ரிட்ஸர், 1978.

18. ரந்தவா, எம்.எஸ்.: குர்பக்ஷ் சிங் அபிநந்தனம் கிரந், நவ்யுக் பப்ளிஷர்ஸ், டெல்லி, 1971.

19. ஸிதால், ஜித்சிங்: வர்தக் தே வர்தக் ஷாயிலி, பஞ்சாப் ஸ்டேட் பல்கலைக்கழக டெக்ஸ்ட்புக் போர்டு, சண்டிகார், (யீ.ஸ.)

20. சுபா சிங்: பஞ்சாபி பதர்காரி தா இதிகாஸ், பஞ்சாப் ஸ்டேட் பல்கலைக்கழக டெக்ஸ்ட்புக் போர்டு, சண்டிகார், 1974.

21. தாஸ்நீம், நிரன்ஜன்: பஞ்சாபி நாவல் தா அலோக்நட்மக் அத்யான், லோக் ஸாகித் பிரகாஷன், அம்ரிட்ஸர், 1973.

22. உப்பால், டாக்டர். ஸ்விந்தர் சிங்: பஞ்சாபி கஹானிகர், நேஷனல் புக்ஷாப், டெல்லி, 1954.

23. .....: பஞ்சாபி நாவல் விதி தே விசார், பஞ்சாபி எழுத்தாளர் கூட்டுறவு தொழிற்சங்க லிட், நியூடெல்லி, 1982.

ஆய்வுக் கட்டுரைகள்

01. ஆர்ஷி, குர்சரண்சிங்: குர்பக்ஷ் சிங் ப்ரீத் லாரி தி நிபந்த்-கலா, பாஷா விபக், பாட்டியாலா, 1978.

02. அதம்ஜித் சிங்: குர்பக்ஷ் சிங் தா பஞ்சாபி சாகித்கரன் உத்தே பிரபவ் பாஷா விபக், பாட்டியாலா, 1978.

03. உப்பால், ஸ்விந்தர்சிங்: குர்பக்ஷ் சிங் தி கஹானி-கலா, பாஷா விபக், பாட்டியாலா, 1978.

இதழ்கள்

01. ஆலோசனா: பஞ்சாப் ஸாகித் அகாதமி, லூதியானா வெளியீடுகள்: ஜனவரி 1960, மே, ஜூன்-ஜூலை 1962, ஏப்ரல் 1965.

02. கோஜ் பத்ரிகா: பஞ்சாபி பல்கலைக்கழகம், பாட்டியாலா குர்பக்ஷ் சிங் ப்ரீத் லாரி அங்க் வெளியீடுகள், செப். 1973. மார்ச் 1978.

03. பஞ்சாபி துனியா: பாஷா விபக், பாட்டியாலா, குர்பக்ஷ் சிங் அங்க், செப். 1960, நவ. 1960, அக். 1964, ஏப்ரல்-மே 1978.

04. ஸாகித் சமாசார்: லாகூர் புக்ஷாப், லூதியானா, குர்பக்ஷ் சிங் அங்க், ஏப்ரல் 1970, வர்தக் அங்க், மே 1970, ஜூன் 1970.

குர்பக்ஷ் சிங் எழுதி வெளியிட்ட கட்டுரைத் தொகுப்புக்கள்

01. பீர்த் மரக் (1934)

02. ஃபய்ஸ்லே தி காரி (1941)

03. ரோஸானா ஸிந்தகி தி ஸைன்ஸ் (1942)

04. ஸன்வின் பத்ரி ஸிந்தகி (1943)

05. சுகவின் சுத்ரி ஸிந்த்கி (1943)

06. மனோஹர் ஷக்ஸியத் (1943)

07. பரம் மனுக் (1943)

08. பரன் புஸ்தக் (1944)

09. மேரே ஜரேகே கோன் (1946)

10. ஸதி ஹோனி தா லிவ்காரா (1946)

11. மெரியன் அபுல் யாதன் (1947)

12. ப்ரஸன் லம்மி உம்மர் (1947)

13. ஈக்-துனியா தே தேஏன் ஸப்னே (1947)

14. ஸ்வாய்-புரந்தா தி லகன் (1947)

15. சங்கேரி துனியா (1947)

16. ஸதே வாரிஸ் (1947)

17. நாவன் ஷிவாலா (1947)
18. குல்கா தர் (1947)
19. தாஜ் டி சாரு (1949)
20. குவாடிரடி மாஸ்ஹாப் (1949)
21. பக்தி ஜீவன் சங்கியாரி (1950)
22. நாவின் தக்ரி துனியா (1950)
23. குஷால் ஜீவன் (1951)
24. ரீஜ்ஹன் டி கட்டி (1953)
25. ஜிந்தகி டி ராஸ் (1957)
26. இக் ஜாட் பூரப் பச்சம் டி (1958)
27. ஜிந்தகி டி கவிதா (1961)
28. ஜுகன் புரானி கால் (1968)
29. பண்டி சேள் குருநானக் (1969)
30. சாரப் பக்கி நாயக (1970)
31. ஜிந்தகி டி டாட் (1978)
32. நவீன் தக்தீரன் டி பூல்கியாரி (1978)

குருபக்ஷ் சிங் எழுதிய மற்ற நூல்களுக்கு அந்தந்த இலக்கியப் பகுதி பற்றிய பகுதியைப் பார்க்கவும்.

குர்பக்ஷ் சிங் (1895-1977) பஞ்சாபி நாவலாசிரியர், கதாசிரியர், கட்டுரையாளர், நாடகப் படைப்பாளர், பத்திரிக்கையாளர், கூட்டுறவு முறையில் வாழ்வது பற்றி கனவு கண்டு சோதனை முயற்சியாக தனித்தன்மை கொண்ட 'பிரீத் நகரை' (அன்பு நகர்) உருவாக்கியவர்; இப்படி பன்முகங்களைக் கொண்ட மனிதர் எழுத்தராக தனது வாழ்க்கையைத் தொடங்கி, கடுமையாக உழைத்து பொறியாளராக தன்னை உயர்த்திக் கொண்டவர். என்றாலும், இறுதியில் விவசாயியாக விரும்பி அவ்வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

பஞ்சாபி மொழியின் முதல் நவீன பாணி எழுத்தாளர் குர்பக்ஷ் சிங், அதுவரை மந்தகதியிலிருந்த உரைநடையை உணர்வுகளை வெளிப்படுத்தும் வலுவான ஊடகமாக மாற்றினார். பிறவி கலகக்காரரான இவருடைய கருத்துக்கள், பழமைவாதிகளை அதிர்ச்சியடைய வைத்தன; புதிய காற்றின் பெரும் வீச்சாக வந்து ஒரு புதிய விழிப்புணர்வோடு மக்களை கிளர்ந்தெழச் செய்தன; மக்கள் மனங்களை அன்பு, நம்பிக்கை மற்றும் துணிச்சலால் நிரப்பின. இவரை ஆசிரியராகக் கொண்டு 1933-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட "**பிரீத் லரி**" என்ற மாத இதழ், வாசகர்களின் மீது பெரும் தாக்கத்தை உண்டாக்கியது. இவ்விதழின் பக்கங்களில்தான் இவருடைய பெரும்பாலான எழுத்துக்கள் முதன் முதலில் தோன்றின. குர்பக்ஷ் சிங்கின் மிக முக்கியமான படைப்புக்கள்: **உன்விஹாயிமான்** (நாவல்), **பிரிதன் தி பஹரேதார்** (சிறுகதைகள்), **ராஜ்குமாரி லடிகா** (நாடகம்), **பரியன் தா மோச்சி** (சிறுவர் இலக்கியம்) **மெரி ஜீவன் கஹானி** (மூன்று பாகங்களில் தன் வரலாறு) மற்றும் **லைட் ஆப் ஏசியா** (மொழிபெயர்ப்பு) உள்ளிட்ட பலவாகும்.

சுரிந்தர் சிங் கோஹ்லி (பி.1920), இச்சிறு நூலின் ஆசிரியர், எழுத்தாளர் மற்றும் திறனாய்வாளர். ஆங்கிலத்திலும் பஞ்சாபியிலும் பல நூல்கள் எழுதியுள்ளார். முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியர் வாழ்க்கையில் டாக்டர் கோஹ்லி பல்வேறு பதவிகளை, குறிப்பாக பஞ்சாப் பல்கலைகழகத்தின் பஞ்சாபி மொழித் துறையின் தலைவர் மற்றும் பேராசிரியர்; பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் கல்வி நிலையத்தலைவர்; குருநானக் ஃபவுன்டேஷனின் இன்ஸ்டிட்யூட் ஆப் கம்பேரிடிவ் ஸ்டடீஸில் இயக்குநர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். இச் சிறு நூலில், டாக்டர் கோஹ்லி, குறிப்பாக, பஞ்சாபி அல்லாத வாசகர்களுக்காக குருபக்ஷ் சிங்கின் வாழ்க்கையையும் அவரது படைப்புகளையும் மதிப்பீடு செய்கிறார்.

Gurbakhsh Singh (Tamil)

Rs. 25

ISBN-81-260-0356-1

22 மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி,
உலகிலேயே மிகப்பெரிய வெளியீட்டகம்.